ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1955/7 - 2016 පෙබරවාරි මස 23 වැනි අඟහරුවාදා - 2016.02.23

*1955/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி IV (அ) - மாகாண சபைகள்*

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

***மத்திய மாகாண மாகாண சபை***

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத்தின் துணை விதிகள் மேற்காட்டிய பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 122 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மத்திய மாகாண சபையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த அனுமதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகள் ஏற்றுக்கொள்ள அதிகாரம் கிடைக்குமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*மத்திய மாகாண சபையின் முதல் அமைச்சர் அலுவலகம்,*
*பள்ளேகல,*
*2015, திசெம்பர் 14.*

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## பிரதேச சபைகளது எல்லைக்குள் கட்டடங்களை நிர்மாணித்தல் தொடர்பான திட்ட வரைவுகளைப் பரிசோதனை செய்தல் மற்றும் கட்டணங்கள் அறிவிடுதல் பற்றிய துணை விதி

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126(viii) ஆவது பிரிவின் கீழ் அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பொருந்தும் நிருவாக எல்லைகளுக்குள் கட்டடங்களை நிர்மாணித்தல் தொடர்பான திட்ட வரைவுகளையும், கட்டட நிர்மாணம் மேற்கொள்வது தொடர்பான காணித் துண்டுகளுக்கான திட்ட வரைவுகளையும் பரிசோதனை செய்வதும், அது தொடர்பான கட்டணங்களை அறவிடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்குமென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் காணித் துண்டுகளுக்கான திட்ட வரைவுகளைப் பரிசோதனை செய்வது தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

04. நிருவாகப் பிரதேசத்துக்குள் ஏதேனும் ஒரு காணியில், தரையின் உட்பகுதியில் அல்லது தரையின் மேற்பரப்பில் நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு நிரந்தர நிர்மாணத்தினதும், நிர்மாணத்துடன் தொடர்புபடும் ஒவ்வொரு காணித்துண்டினதும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையத் தலைவர் அனுமதித்த திட்டத்துக்கு அமைவானவையாக இருத்தல் வேண்டும்.

05. நிருவாக எல்லைக்குள் ஏதேனும் ஒரு காணியில் கட்டடங்கள் நிர்மாணிப்பது தொடர்பான திட்ட வரைவும் மற்றும் காணித் துண்டுக்கான அல்லது காணிப் பிரிப்புக்கு உரிய திட்ட வரைவும் அங்கீகரிக்கப்படுவது தொடர்பில் 1953 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, திருத்தப்பட்ட சட்டத்தின்படி, திருத்தியமைக்கப்பட்ட வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்படும் கட்டணத்தைச் செலுத்திப் பிரதேச சபையிலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. 1953 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கம் கொண்ட திருத்தப்பட்ட வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகக் கட்டட நிர்மாணத் திட்ட வரைவுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் கட்டளைச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட காணிப் பிரிவுக்கானதாக இருத்தல் வேண்டும்.

07. மேற்குறித்த 6 ஆவது பிரிவுக்கமைய முன்வைக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் உரிய திட்ட வரைவுகள் பிரதேச சபை தீர்மானிக்கும் கட்டமைப்பைக் கொண்ட குழுவினரால் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும்.

08. 7ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கருமத்துக்கெனச் சபையினால் காலத்துக்குக் காலம் ஏற்றுக்கொள்ளப்படும் முன்மொழிவுகளின் தீர்மானத்துக்கு அமைவான கட்டணத்தை அறவிடுவது சட்டபூர்வமானதாக அமையும்.

09. இந்தத் துணை விதியின் கீழ் கட்டட நிர்மாணம் மற்றும் காணித் துண்டு அல்லது இணைப் பிரிப்புக்கான திட்ட வரைவுகளைப் பிரிசோதனை செய்தல், உரிய திட்ட வரைவை அங்கீகரித்தல் என்பன உரிய வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவானவையாக இருத்தல் வேண்டும்.

10. அங்கீகாரத்துக்கென முன்வைக்கப்படும் ஒவ்வொரு திட்ட வரைவு விண்ணப்பம் தொடர்பிலும்,அது பிரதேச சபையிடம் கிடைக்கபெற்ற 30 நாட்களுக்குள் அதற்கான அங்கீகாரத்தையோ அல்லது நிராகரிப்பதெனின், அதற்கான காரணங்களைக் கொண்ட முடிவையோ விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

11. மேற்குறித்த 7 ஆவது பிரிவின்படி கட்டமைப்புக் குழுவின் கருமங்களுக்கென மேலதிக ஏற்பாடொன்றைச் சபை தீர்மானித்து, உரிய உள்ளூராட்சி ஆணையாளரது அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

12. இந்தத் துணை விதியின் 5 ஆவது பிரிவின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பம், நிர்மாணத்துக்கான காணித்துண்டை அங்கீகரித்துக் கொள்வதற்கான விண்ணப்பமெனின், இணைப் பிரிப்புடன் தொடர்டைய முழுக் காணியும் 1 ஹெக்டேயர் அல்லது அதனைவிட அளவில் அதிகமாக இருப்பின், மற்றும் குறித்த காணி எட்டுத் துண்டுகள் அல்லது அதற்கும் அதிகமாக இணைப் பிரிப்புச் செய்யப்பட்டிருப்பின், இணைப் பிரிப்புக்குரிய பாதைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அளவு தவிர, எஞ்சிய அளவின் நூறில் பத்து என்ற அளவில் உரிய காணியின் பகுதியைப் பொது வசதிகளுக்கெனப் பிரதேச சபையிடம் அன்பளிப்புச் செய்து உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

13. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் அதிகாரத்தின் (2) ஆவது உப பிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

14. சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதியில்.-

"சபை" என்பது, பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

"நபர்" என்பது, ஒருவர் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது அவ்வாறல்லாத தனியாள், சபையும் குறிக்கும்.

**சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுவது பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (xiv) ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகள் மூலம் வழங்கப்படும் சேவைகளை முறைப்படுத்துதல், குறித்த சேவைகள் தொடர்பான கட்டணங்களை அறவிடுதல் என்பவற்றுக்கென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது சேவைகளுக்கெனக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

04. இந்தத் துணை விதிக்கமையச் சேவைகள் என்பது பின்வருவனவற்றுடன் தொடர்பானவை.

(1) விண்ணப்பபடிவங்களை வழங்குதல். இதன் கீழ் பின்வருவன அடங்கும்:-

(i) சபையின் மூலம் நடத்தப்படும் முன்பள்ளிகளுக்கான பிரவேச விண்ணப்பப்படிவம்
(ii) சபையின் மூலம் நடத்தப்படும் நூலக உறுப்புரிமைக்கான விண்ணப்பப்படிவம்
(iii) மதிப்பீட்டு வரிப் பதிவேட்டில் குறித்துரைக்கப்படும் பகுதியைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்
(iv) வழங்குநர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப் படிவம்
(v) வீதிரேகைச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்
(vi) கையேற்பில்லாத சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்
(vii) ஈ நணபியஸ பயிற்சிநெறிக்கான விண்ணப்பப் படிவம்
(viii) சபைக்குரிய கலீ பவுஸர், திராக்டர்,மோட்டார் கிறேடர், பெக்கோ லோடர்,ஜே.சி.பி. இயந்திரங்களது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணபப்படிவம்

(2) சான்றிதழ்கள் வழங்குதல். இதன் கீழ் பின்வருவன அடங்கும்:-

(i) வீதிரேகைச் சான்றிதழ்கள்
(ii) கையேற்பில்லாத சான்றிதழ்கள்
(iii) மதிப்பீட்டுவரி தொடர்பான உரித்துரிமை பற்றிய சான்றிதழ்கள்
(iv) மதிப்பீட்டுவரிப் பதிவேட்டிலிருந்து குறித்துரைக்கும் பகுதியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
(v) வழங்கப்படும் கணிப்பீட்டு அறிவித்தல்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(3) சபைக்குச் சொந்தமான கலீ பவுஸர், திராக்டர், பெக்கோ லோடர், மோட்டார் கிறேடர் ஜே.சி.பி. இயந்திரம் மற்றும் தண்ணீர் பவுஸர் என்பவற்றை வாடகைக்கு வழங்குதல்.

05. இந்தத் துணை விதியின் மேலே 04 ஆவது வகுதியின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சேவைக்குமான கட்டணங்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானிக்க முடியும்.

06. (i) மேலே 04 ஆவது வகுதியின் 1 ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துடனும், அவற்றைப் பூரணப்படுத்துவது பற்றிய அறிவுறுத்தல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ii) இவ்வாறு வழங்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துக்கும் இந்தத் துணை விதியின் 05 ஆவது பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறுகட்டணங்களைச் செலுத்தி, உரிய பற்றுச்சீட்டை முன்வைத்ததன் பின்னர் குறித்த விண்ணப்பப்படிவம் வழங்கப்பட முடியும்.

07. (i) இந்தத் துணை விதியின் 04 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள சேவைகளைப் பெற உத்தேசிக்கும் ஒவ்வொருவரும் அதற்கான விண்ணப்பப் படிவத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைகளை நிறைவு செய்தபின் தலைவரிடம் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரிடம் குறித்த விண்ணப்பபடிவத்தைக் கையளித்தல் வேண்டும்.

(ii) உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத அல்லது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவு செய்திராத எந்த விண்ணப்பப் படிவத்தையும் பொறுப்பேற்றல் கூடாது என்பதுடன், பொறுப்பேற்கப்பட்ட விண்ணப்பப் படிவம் 04 ஆவது துணை விதியின் (2) ஆவது உப பிரிவின்படி குறித்த சேவைகள் நடைபெறும் வண்ணம் பொறுப்பேற் கப்பட்ட மூன்று நாட்களுக்குள் உரிய சேவையை வழங்குவது தலைவரது அல்லது தலைவரால் இதற்கென அதிகாரம் வழங்கப்படுள்ள அலுவலரது கருமமாக அமையும்.

08. இந்தத் துணை விதியின் 04 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் விபரிக்கப்படும் சேவைகளைப் பெற உத்தேசிக்கும் ஒவ்வொருவரும் இந்தத் துணை விதியின் 04 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின் கீழ் பெற்றுக்கெள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

09. இந்தத் துணை விதியின் 08 ஆவது வகுதியின் கீழ் சேவைகளைப் பெற விண்ணப்பிக்கும் தொடரொழுங்கின்படி சேவையைப் பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ள தினத்துக்கான அந்தந்த வகைக்கு அமைய சபையின் தலைவர் இதற்கென அதிகாரம் வழங்கியுள்ள அலுவலர் பதிவேட்டில் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

10. இந்தத் துணை விதியின் 04 ஆவது வகுதியின் (3) அவது உப பிரிவின்கீழ் விபரிக்கப்பட்டுள்ள சேவைகளுக்கெனச் சபை மேற்குறித்த 05 ஆவது துணை விதியின்படி தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவிடப்படும் வைப்புத் தொகையைச் சபை தீர்மானிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

11. மேற்குறித்த 08 ஆவது துணை விதியின்கீழ் முன்வைக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவம் தொடர்பில் சேவைகளை வழங்குவதற்கான முன்னுரிமை அடிப்படையில் சேவையைப் பெறுவதற்குச் சேவைபெறுநர் இணங்கும் பட்சத்தில் மட்டும், இதற்காக இந்தத் துணை விதியின் 05 ஆவது வகுதியின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு மேலதிகமாக இங்கு 10 ஆவது துணை விதியின் கீழ் சபை தீர்மானித்துள்ள குறித்த வைப்புத் தொகையைச் செலுத்தியிருந்தால் மட்டுமே உரிய சேவையை வழங்குவது சட்டபூர்வமானதாக அமையும்.

12. சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதியில்
"சபை" என்பது, பிரதேச சபையையும்,
"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது, இந்தத் துணை விதியின் கருமங்களுக்கெனச் சபையின் தலைவரால் குறித்த கருமத்துக்கென அதிகாரம் வழங்கப்பட்டுக் கருமமாற்றும் அலுவலர் ஒருவரையும் குறிக்கும்.

**முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (vii) ஆவது பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் (இங்கு இதன் பின்னர் சபையின் "நிருவாக எல்லைப் பிரதேசம்" எனக் குறிப்பிடப்படும்) முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல், முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் தரிப்பிடத்துக்கான கட்டணம் அறவிடுதல் என்பவற்றுகென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைப் பிரதேசத்துக்குள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

04. இந்தத் துணை விதியின் கீழ்,

(i) பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கவேண்டிய இடங்கள் மற்றும் குறித்த ஒவ்வொரு இடத்திலும் நிறுத்திவைக்க முடியுமான உச்ச அளவு முச்சக்கர வண்டிகளது எண்ணிக்கை என்பவற்றைச்

*சபை தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்ததன் பின்னர் அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.*

(ii) *மேற்குறித்த 1 ஆவது துணை விதியின் கீழ் குறித்துரைக்கப்படும் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் இடங்கள் மற்றும் எண்ணிக்கை என்பவற்றைச் சபையின் தீரமானம் மூலம் திருத்தம் செய்ய முடிவதுடன், அவ்வாறான தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.*

(iii) *முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களை நிச்சயித்தல் மற்றும் நிறுத்தி வைக்கக்கூடிய முச்சக்கர வண்டிகளின் உச்ச எண்ணிக்கை என்பவற்றைத் தீர்மானிக்கும்போதும், மேற்கொண்ட தீர்மானங்களில் திருத்தங்களை மேற்கொள் ளும்போதும் இந்தத் துணை விதியின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் கொண்ட பிரதேச சபையின் வாகனக் குழுவினரது பரிந்துரையின்படி சபைஅவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.*

(iv) *மேலே (1) ஆவது துணை விதியின் கீழ் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கவேண்டிய இடங்களை இனங்காண்பதற் கென உள்ள பெயர்ப்பலகைகளை ஒவ்வொரு தரிப்பிடத்தின் எதிரிலும் பொருத்துவதுடன், அவற்றில் தரிப்பிடத்தின் குறியீட்டு இலக்கத்தையும் அந்தத் தரிப்பிடத்தில் நிறுத்திவைக்க முடியுமான முச்சக்கர வண்டிகளின் உச்ச எண்ணிக்கையையும் காட்சிப்படுத்துதல் வேண்டும்.*

(v) *ஒவ்வொரு முச்சக்கர வண்டித் தரிப்பிடத்திலும் முச்சக்கர வண்டிகள் முறையாக நிறுத்தி வைக்கப்படவேண்டிய முறையை 04 அங்குல அகலம் கொண்ட வெள்ளை அல்லது மஞ்சள் நிறக் கோட்டின் மூலம் அடையாளப்படுத்துதல் வேண்டும்.*

*05. இந்தத் துணை விதியின் 4 (1) ஆவது பிரிவின் கீழ், தீர்மானிக்கப்பட்டுள்ள நிருவாக எல்லைக்குள் முச்சக்கரவண்டிகளை நிறுத்திவைக்கும் இடமொன்றில், இந்தத் துணை விதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமின்றி எவரும் முச்சக்கரவண்டியை நிறுத்திவைத்தல் கூடாது.*

*06. இந்தத் துணை விதியின் 4 ஆவது வகுதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணங்கள் சபை காலத்துக்குக் காலம் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து வெளியிடப்படும் கட்டணங்களாக அமைதல் வேண்டும்.*

*07. இந்தத் துணை விதியின் 4 ஆவது வகுதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் (இந்தத் துணை விதியின் கீழ் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்கென) சபை தீர்மானித்ததற்கு அமையக் குறித்த கால எல்லைவரை செல்லுபடியாகுதல் வேண்டும்.*

*08. இந்தத் துணை விதியின் 4 ஆவது வகுதியின் கீழான அனுமதிப்பத்திரத்துக்குரிய விண்ணப்பப்ப படிவம் இந்தத் துணை விதியின் இரண்டாவது அட்டவணைக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமாக இருத்தல் வேண்டும்.*

*09. அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம் தொடர்பில் அறவிடப்படவேண்டிய கட்டணங்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.*

*10. முச்சக்கரவண்டித் தரிப்பிடமொன்றில் முச்சக்கர வண்டியை நிறுத்தி வைப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரம் தொடர்பிலும், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்தாலன்றி, அதனைச் செல்லுபடியாகும் விண்ணப்பமாகக் கருதிப் பதிவேட்டில் பதிதல் கூடாது.*

*11. முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் முச்சக்கரவண்டியை நிறுத்தி வைக்கப்படுவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது தரிப்பிடத்துக்கு அருகில் வசிப்போரது தரிப்பிடத்துக்கு அருகில் வசிப்போரது விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படுதல் வேண்டும். அத்துடன், விண்ணப்பதாரி தமக்கு உரித்தான இன்னுமொரு முச்சக்கரவண்டிக்கெனச் சபையின் ஏதேனும் முச்சக்கரவண்டித் தரிப்பிடத்துக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருப்பின், வேறு எவரேனும் குறித்த முச்சக்கரவண்டித் தரிப்பிடத்துக்கென விண்ணப்பித்து இல்லாதிருந்தாலொழிய, இன்னுமொரு அனுமதிப்பத்திரத்துக்கான உரிமையைப் பெறமாட்டார்.*

*12. முச்சக்கரவண்டித் தரிப்பிடமொன்றில் முச்சக்கரவண்டியை நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தைச் சபை வழங்கும்போது இந்தத் துணை விதியின் 1 ஆவது அட்டவணையில் குறிப்படப்பட்டுள்ள பிரதேச சபையின் வாகனக் குழுவினரது பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு தலைவர் தீர்மானித்தல் வேண்டும்.*

*13. சபையின் மூலம் நடத்தப்படும் முச்சக்கரவண்டித் தரிப்பிடங்களுக்கென அனுமதிப்பத்திரங்களைச் சபை வழங்கும்போது பதிவேடொன்றைப் பேணி வருவது தலைவரது, அதிகாரம் மெற்ற அலுவலரது கருமமாவதுடன், வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று இரத்துச் செய்யப்பட்டால் அதனையும் உரிய பதிவேட்டில் குறிப்பிடுதல் வேண்டும்.*

14. இந்தத் துணை விதியின் அடிப்படையில் அனுமதிப்பத்திரத்திரத்தைப் பெறும் ஒவ்வொருவரும்,

(அ) செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை அல்லது சபை அனுமதிப்பத்திரத்துடன் வழங்கும் ஏதும் குறியீட்டைக் கொண்டுள்ள ஸ்ரிக்கர் இருப்பின் அதனை வெளியில் நன்கு தென்படும் வண்ணம் முச்சக்கர வண்டியில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) முச்சக்கர வண்டியின் வலது பக்கம் பயணிகள் ஏறவோ அல்லது இறங்கவோ முடியாதவாறு அடைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) முச்சக்கரவண்டித் தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கரவண்டியை அகற்றிக்கொள்வதுடன் தொடர்புடைய ஏதும் திருத்தங்கள் தவிர்ந்த எந்தவித திருத்த வேலைகளையும் தரிப்பிடத்துக்குள் செய்தல் கூடாது.

(ஈ) முச்சக்கர வண்டியொன்றை நிறுத்திவைக்கவெனக் குறித்த இடத்துக்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பின், அதற்கென உரிய தரிப்பிடத்தில் அன்றி வேறெந்தத் தரிப்பிடத்திலும் அல்லது பொது இடத்திலும் வாடகைப் பயணத்துக்கென்ற நோக்கில் முச்சக்கர வண்டியை நிறுத்திவைத்தல் கூடாது.

(உ) தலைவர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்றவென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பொலிஸ் அலுவலர் கேட்டுக்கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தை முன்வைத்தல் வேண்டும்.

(ஊ) முச்சக்கரவண்டியின் தரிப்பிடமொன்றில் எவரேனும் மதுபானம் பருகுவதோ, துர் நடத்தையில் ஈடுபடுவதோ அல்லது வேறேதும் தொல்லை தரும் வகையில் நடந்துகொள்வதோ அல்லது அவ்வாறு ஏனையோர் செய்வதற்கு உதவுவதோ கூடாது.

15. சபை மூலம் நடத்தப்படும் முச்சக்கரவண்டித் தரிப்பிடமொன்றில் அல்லாது நிருவாகப் பிரதேசத்துக்குள் ஏதேனும் பொது இடமொன்றில் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் அல்லது பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் வாடகைக்கெனப் பயணிகளைக் கொண்டு செல்லும் நோக்குடன் முச்சக்கர வண்டிகளை நிறுத்திவைப்பது கூடாது.

16. முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தின் நுழைவாயிலிலும் வெளியேறும் வாயிலிலும் தடையேற்படும் விதத்தில் முச்சக்கர வண்டிகளையோ அல்லது வேறேதும் வாகனங்களையோ நிறுத்தி வைத்தல் கூடாது.

17. இந்தத் துணை விதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் வருடாந்த அனுமதிப்பத்திரம் எனின், அது வழங்கப்பட்ட வருடத்தின் திசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

18. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட முச்சக்கரவண்டியின் கால எல்லைக்குள் ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலம், குறித்த முச்சக்கரவண்டியையோ அல்லது அதற்காக வேறொரு முச்சக்கரவண்டியையோ குறித்த முச்சக்கரவண்டியையோ குறித்த முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் ஈடுபடுத்த முடியாதிருக்கும் அனுமதிப்பத்திரதாரியின் அனுமதிப்பத்திரம் செயலிழக்கப்பட்ட ஒன்றாகக் கணிக்கப்படும்.

19. இந்தத் துணை விதியின் கீழ் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிரதேச சபையின் தலைவரிடம் இந்தத் துணை விதியின் 2 ஆவது அட்டவணையின் கீழுள்ள விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பிப்பதுடன், இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிறைவேற்றும் பட்சத்தில் அனுமதி பெற்ற காலத்தை நீடிப்புச் செய்துகொள்ள முடியும்.

20. (i) இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் அதிகாரத்தின் (2) ஆவது உப பிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

(ii) இந்தத் துணை விதியின் 16 (1) ஆவது பிரிவின்படி முறையான நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்படும் சந்தர்ப்பத்தில் விதிக்கப்படும் தண்டத்துக்கு மேலதிகமாகச் சபை வழங்கியிருந்த அனுமதமதிப்பத்திரமும் செயலிழக்கப்படுதல் வேண்டும்.

21. சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில்.-

"சபை" என்பது, பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

"தலைவரால் குறித்த கருமத்துக்கென அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்" என்பது, தலைவரால் அதிகாரம் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலர் ஒருவரையும்,

"அதிகாரப் பிரதேசம்" என்பது, பிரதேச சபையின் கூட்டிணைக்கப்பட்ட நிருவாகப் பிரதேசத்தையும்,

"முச்சக்கர வண்டி" என்பது, வாடகைச் சவாரிக்கென நறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டியையும்,

"கூலி ஓட்டுநர்" என்பது, முச்சக்கர வண்டியைச் செலுத்தும் உரிமையாளர் அல்லது குறித்த வண்டியை ஓட்டுவதற்கென உரிமையாளர் ஈடுபடுத்தியுள்ள ஒருவரையும்,

"வருடாந்தம்" என்பது, வருடமொன்றின் சனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஒரு பஞ்சாங்க வருடத்தையும்,

"பொலிஸ் அலுவலர்" என்பது, 53 ஆவது அதிகாரமான 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 104 ஆவது பந்தியின் கீழ் குறிப்பிடப்படுள்ள கருத்தையும்.

"ஏனைய வாகனங்கள்" என்பது, மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கருத்தையும்,

"பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்" என்பது, மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள கருத்தையும் குறிக்கும்.

**அட்டவணை - 1**

சபையின் கீழ் நியமிக்கப்படும் வாகனக் குழுவில் பின்வருவோர் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்

01. குழுவின் தலைவர் பிரதேச சபையின் தலைவராக இருப்பதுடன், குழுவின் செயலாளராகச் சபையின் செயலாளர் இருத்தல் வேண்டும்.

02. பிரதேச சபையின் வருமானப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்

03. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்

04. மாகணப் பாதைகள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்

05. பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்

06. இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்

07. சபையின் நிருவாக எல்லைக்குரிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் அல்லது அவர்களால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர் வீதம்

08. சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள முச்சக்கர வண்டிச் சங்கங்களிலிருந்து பிரதிநிதி ஒருவர் வீதம்

**அட்டவணை - 2**

முச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறும் விண்ணப்பப்படிவம்

01. விண்ணப்பதாரி பற்றிய விபரங்கள்:

(i) விண்ணப்பதாரியின் பெயர்:
(ii) நிரந்தர வதிவிட முகவரி:
(iii) வரி மதிப்பீட்டு இலக்கம்:
(iv) நிரந்தர வதிவிடத்துக்குரிய உள்ளூராட்சி அமையம்:
(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்:
(vi) தொலைபேசி இலக்கம்:

02. ஏனைய தகவல்கள் :

(i) முச்சக்கர வண்டியின் பதிவிலக்கம்:
(ii) செலுத்துபவர் உரிமையாளரா அல்லது கூலிச் சாரதியா? :
(அ) உரிமையாளரெனின், செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இல:
(ஆ) கூலிச் சாரதி எனின்,
சாரதியின் பெயர்:
நிரந்தர முகவரி:
தேசிய அடையாள அட்டை இலக்கம்:
செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்:

03. அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்கும் முச்சக்கரவண்டித் தரிப்பிடம்:

04. அனுமதிப்பத்திரம் தேவைப்படும் காலம்: மாதாந்தம் /காலாண்டு /வருடாந்தம்

என்னால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவை எனவும், எவ்வகையிலேனும் குறித்த தகவல்கள் பிழையானவை என உறுதிப்படுமிடத்து, எனது முச்சக்கரவண்டி அனுமதிப்பத்திரத்தை முன்னறிவித்தல் இன்றி செல்லுபடியற்றதாக ஆக்குவதற்கு உடன்படுவேன் எனவும், பிரதேச சபை விதித்துள்ள முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதியின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்க இணங்குகின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

..........................,
திகதி:........... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திரு. /திருமதி ............................ என்பவரது ....................... பதிவிலக்கம் கொண்ட முச்சக்கர வண்டியை ..................... ஆம் இலக்கத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்க ................ காலத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்.

திகதி : -----. ....................
தலைவர்,
.................. பிரதேச சபை.

**பிரதேச சபைகளது பொது நூலகங்கள் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதிகயை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (xiv) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் வசிக்கும் ஆட்களதும், சமூகக் குழுவினரதும் கல்வி, தகவல் மற்றும் தனியாள் அபிவிருத்தி போன்றே வாசிப்புப் பழக்கத்தையும் விருத்தி செய்து, ஆக்கபூர்வமான மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளை நிறைவு செய்து, பல்வேறு ஊடகங்களுடனான வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கெனப் பொதுசன நூலகச் சேவையை ஆரம்பித்து நடத்திச் செல்வதுடன், இதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கென இந்தத் துணைவிதி விதிக்கப்படுகின்றது.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது பொது நூலகங்கள் பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

04. சபையின் நிருவாக எல்லைக்குள் வாழும் மக்களின் தேவைகளுக்கேற்றவாறு பொதுசன நூலகங்கள் பின்வரும் பிரிவுகள் மற்றும் சேவைகளுடன் அல்லது பின்வரும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமையலாம்.

1. இரவற் பகுதி
2. உசாத்துணைப் பகுதி
3. சிறுவர் பகுதி
4. பருவகாலச் சஞ்சிகைகள், செய்தித்தாள் பகுதி
5. கட்புல, செவிப்புல மற்றும் தகவற் தொடர்பாடல் தொழில்நுட்பப் பகுதி
6. கற்கைப் பகுதி
7. நூல் பாதுகாப்பு மற்றும் அரிதான நூல்கள் பகுதி
8. விசேட மற்றும் பிரதேசங்கள் சார்ந்த சேகரப் பகுதி
9. வலது குறைந்தோருக்கான நூலக சேவைப் பகுதி
10. சனசமூக தகவற் பகுதி
11. நிழற்படப் பிரதி மற்றும் ஏனைய சேவைகள் பகுதி

05. பிரதேச சபையின் ஒவ்வொரு பொதுசன நூலகத்துக்குமென நூலகர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படுபவர் பொதுசன நூலகத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவத்தை முறையாக நடத்திச் செல்வது தொடர்பாகப் பிரதேச சபைக்கு வகை கூறுதல் வேண்டும்.

06. (1) பொதுசன நூலகச் சேவைக்கான ஆலோசனையையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கென, இதன்பின்னர் குழு எனக் குறிப்பிடப்படும் நூலக ஆலோசனைக் குழுவொன்றை நியமித்துக்கொள்ளல் வேண்டும். குறித்த குழு பின்வருவோரைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

(i) இதன் பின்னர் இங்கு தலைவர் எனக் குறிப்பிடப்படும் சமகாலத்தின் பிரதேச சபையின் தலைவர்.

(ii) பிரதேச சபையின் உறுப்பினர்களிடையே அனைத்துக் குழுக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வண்ணம் ஒரு குழுவுக்கு ஒரு உறுப்பினர் உட்படும் வகையில் மூவருக்குக் குறையாத உறுப்பினர்கள்.

(iii) நிருவாகப் பிரதேசத்தின் மக்கள் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு சமயத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு சமயத்துக்கு ஒருவர் என நியமிக்கப்படும் உச்ச எண்ணிக்கையிலான சமயத் தலைவர்கள் மூவர்.

(iv) பொதுச் சபையின்போது பிரதேச சபையினால் தெரிந்தெடுக்கப்படும் பிரதேச நிருவாகப் பிரிவில் வாழும் சிறப்புப் பிரசைகள் ஐவர்.

(v) சமகாலத்தில் நூலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், குழுவின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(2) குழுவின் உறுப்பினர்களது எண்ணிக்கை 15 ஐத் தாண்டாது இருத்தல் வேண்டும்.

(3) தலைவர் உத்தியோகபூர்வ மட்டத்தில் குழுவின் தலைவராக இருத்தல் வேண்டும். ஒவ்வவொரு அமர்வுக்கும் அவர் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனுமொரு கூட்டத்துக்குத் தலைவர் வருகை தராது இருந்தால், இருக்கும் உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவர் உரிய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

07. குழுவுக்கென :

(1) சபை மூலம் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களது எண்ணிக்கையின் 1/3 பங்கினர் கோரம் ஆக அமைதல் வேண்டும்.

(2) ஏதேனுமொரு கூட்டத்தில் தலைமை தாங்கும் உறுப்பினருக்கு ஒரு அடிப்படை வாக்கும், ஏதும் பிரச்சினைகள் தொடர்பில் சார்பாகவும் எதிராகவும் கிடைக்கும் வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், அதனைத் தீர்மானிக்கும் வாக்கும் உண்டு.

(3) குழுக் கூட்டங்களுக்கு அறிவிக்காமல் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத காரணத்தை முன்னிட்டு, அவரது உறுப்புரிமையை இல்லாமல் செய்தல் வேண்டும். அவ்வாறு உறுப்புரிமை இல்லாது போன உறுப்பினர் எவரையும் ஆலோசனைக் குழுவில் நியமித்தல் கூடாது. அவ்வாறு உறுப்புரிமை இல்லாதுபோன உறுப்பினர்களுக்குப் பதிலாக சபையின் தீர்மானத்துக்கமைய புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

08. (1) நூலகத்தின் இரவற் பிரிவில் உறுப்புரிமை பெறுவதற்கெனப் பின்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும்.

1. (i) பொதுவான உறுப்புரிமையைப் பெறுவதற்கென 14 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். சிறுவர் உறுப்புரிமைக்கென 14 வயதுக்குக் கீழ் 3 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

(ii) சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டோர் அல்லது கல்வி கற்போர் அல்லது சொத்துக்களது உரிமையாளர் அல்லது தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும்.

(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கென கிராம அலுவலரது சான்றிதழையும், கல்வி கற்பவராயின் பாடசாலை அதிபரது சான்றிதழையும், தொழில் செய்பவராக இருப்பின் நிறுவனத் தலைவரது சான்றிதழையும் முன்வைத்து உறுப்புரிமைக்காக விண்ணப்பிக்க முடியும்.

(2) **பிணையாளர்கள்**.- நூலகத்தின் பிரிவில் உறுப்புரிமை பெறுவதற்கென விண்ணப்பிக்கும்போது பின்வருவோரில் ஒருவர் பிணையாளியாகக் கருதப்பட முடியும்.

(i) பாராளுமன்ற உறுப்பினர்
(ii) மாகாணசபை உறுப்பினர்
(iii) பிரதேச சபை உறுப்பினர்
(iv) நூலகக் குழுவின் உறுப்பினர்
(v) சமயத் தலைவர்
(vi) மருத்துவர், சட்டத்தரணி
(vii) சமாதான நீதவான்
(viii) நிருவாகப் பிரிவுக்குள் அமைந்துள்ள பாடசாலையின் அதிபர்
(ix) சபையில் பணி புரியும் நிறைவேற்று அலுவலர்
(x) நிருவாகப் பிரிவின் கிராம அலுவலர்

(3) **உறுப்புரிமையைப் பெறுதல்**

நூலகத்தின் இரவற் பிரிவில் உறுப்புரிமையைப் பெறுவதற்கான உறுப்புரிமைக் கட்டணத்தைக் குழுவின் பரிந்துரையின் கீழ் சபை காலத்துக்குக் காலம் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து வெளியிடுதல் வேண்டும்.

**09. பொதுசன நூலகத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் சேவைகளுக்குமெனப் பின்வரும் பொதுவான நிபந்தனைகள் அமைதல் வேண்டும்.**

1. இரவற் பகுதி :

(i) இந்தத் துணை விதியின் 7 ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் நூலகர் இரண்டு அட்டைகளை வழங்குதல் வேண்டும். அவருக்கு ஒரு அட்டைக்கென ஒரு புத்தகம் வீதம் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு.

(ii) இந்த அட்டைகளைக் கைமாற்றம் செய்யக் கூடாது.

(iii) இரவல் பெறும் புத்தகம் தொடர்பாக வகை சொல்ல உறுப்பினர் கடமைப்பட்டுள்ளார்.

(iv) இரவல் பெறும் உறுப்புரிமை அட்டை தொலைந்துபோகும் சந்தர்ப்பத்தில் அதுபற்றி உறுப்பினர் உடனடியாக நூலகருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். உரிய அட்டையின்மீது நூலகத்திலிருந்து புத்தகமொன்று வழங்கப்படவில்லையென, நூலகர் திருப்திப்படுவாரெனின், அதன் தற்காலிக இணைப் பிரதியொன்றை வழங்க முடியும்.

(v) அட்டை காணாமற்போய் மீண்டும் வழங்கப்படும்போது சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டணத்தை அதற்காகச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) ஒரு உறுப்புரிமை அட்டைக்கென இரவற் பகுதியிலிருந்து பெறப்படும் புத்தகமொன்றை 14 நாட்கள் வைத்துக்கொள்ள அனுமதியுண்டு. அந்தப் புத்தகத்தை வேறெந்த உறுப்பினரும் கேட்டிராத பட்சத்தில், 14 நாட்களுக்கு மேற்படாத காலத்துக்கு மேலும் புதுப்பித்து வழங்க நூலகருக்கு முடியும்.

(vii) இரவலாகக் கொண்டசெல்ல அனுமதிக்கப்பட்ட குறித்த புத்தகத்தில் திருப்பி ஒப்படைக்கவேண்டிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் நூலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். குறித்த தினத்தின் பின்னர் தாமதமாக ஒப்படைக்கப்படும் புத்தகங்களுக்கெனப் பிரதேச சபை விதிக்கும் தண்டப் பணத்தைச் செலுத்த உறுப்பினர் கடமைப்பட்டுள்ளார்.

(viii) இரவலாகக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்ட புத்தகத்தை 30 நாட்களுக்குள் திருப்பித் தராத சந்தர்ப்பத்தில், அப்புத்தகம் அற்றுப்போனதாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ix) உறுப்பினரொருவர் வெளியில் இரவலாகக் கொண்டு சென்ற புத்தகம் காணாமற் போயுள்ளதென அறிவிக்கப்பட்டால், அப்புத்தகத்தின் பிரதியோன்றைத் திருப்பித் தருதல் வேண்டும். குறித்த புத்தகத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில், அதன் தற்கால சந்தைப் பெறுமதியின் 25 வீதத்தை மேலதிகக் கட்டணமாக அறவிட்டுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறான கொடுப்பனவைத் தட்டிக்கழிக்கும்போது, பிணையாளியிடமிருந்து அதனை அறவிட்டுக்கொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(x) இரவலாகக் கொண்டு செல்லும் புத்தகத்தைச் சேதப்படுத்துவதோ, தாள்களைக் கிழிப்பதோ, கோடுகள் வரைவதோ, ஏதும் எழுதுவதோ அல்லது எந்த விதத்திலேனும் அதனைச் சிதைப்பதோ கூடாது. அவ்வாறு சேதப்படுத்தப்பட்ட புத்தகத்ததின் மீது நூலகர் கணிப்பிட்டு விதிக்கும் நட்டத் தொகையை உறுப்பினர் செலுத்துதல் வேண்டும்.

(xi) இரவற் பகுதியில் இருந்து புத்தகமொன்றைப் பெற்றுக்கொள்ள முன்னர் அதனைப் பரிசீலித்துப் பார்த்து, புத்தகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதம், சிதைவு என்பவற்றை நூலகரிடம் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறு தெரிவிக்காது எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு புத்தகமும், சேதங்களிலிருந்தும், சிதைவுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட புத்தகங்களாகவே கருதப்படுதல் வேண்டும்.

(xii) இரவற் பகுதியில் புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் சந்கர்ப்பத்தில் புத்தகத்தை மீள வழங்க முடியாத அளவுக்கு அது சேதமாகியுள்ளது என நூலகர் பரிந்துரை செய்யும் தருணத்தில், விதிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்தியவுடன், சேதமாகியதனால் நீக்கப்பட்டுள்ளது என்ற முத்திரையைப் பதித்து அவருக்கு வழங்க முடியும். கட்டணத்தைத் தீர்மானிக்கும்போது IX ஆவது பிரிவின்படி கணிப்பிடுதல் வேண்டும்.

(xiii) உறுப்பினர் எவரும் நூலகத்திலிருந்து இரவல் வாங்கிச் சென்ற புத்தகத்தை உறுப்பினரல்லாத இன்னுமொருவர் மூலம் நூலகத்துக்கு அனுப்பிவைக்க முடியும். உறுப்பினர் அல்லாத எவருக்கும் புத்தகங்களைக் கொண்டுசெல்ல வழங்கக்கூடாது. தொற்றுநோய் அல்லது ஒட்டுநோய் பீடித்த ஒருவர் பயன்படுத்திய புத்தகத்தை நூலகத்துக்குத் திருப்பி ஒப்படைக்கும்போது, அந்தப் புத்தகத்தை அழித்துவிட்டு, அந்தப் புத்தகத்தின் சந்தைப் பெறுமதியையும், பெறுமதியின் 25 வீதத்தையும் மேலதிகக் கட்டணமாக நூலகர் அறவிடுதல் வேண்டும்.

(xiv) இரவல் பெறுவதற்காக ஒரு புத்தகத்தை எந்த உறுப்பினருக்கு வழங்குதல் வேண்டுமென்பதில் கருத்து முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் நூலகர் அந்த முரண்பாட்டைத் தீர்த்து வைத்தல் வேண்டும்.

(xv) ஒரு உறுப்பினர் இரவல் பெற்றுச் சென்ற புத்தகத்தை இன்னுமொரு உறுப்பினர் பெற உத்தேசித்திருந்தால், இதுபற்றி அங்கு வைக்கப்பட்டுள்ள ஏட்டில் பதிவு செய்தல் வேண்டும். அந்தப் புத்தகம் நூலகத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட்ட பின்னர், வேண்டிக்கொண்டவருக்கு அதனை ஒதுக்கித்தர முடியும். இரண்டு அல்லது பல உறுப்பினர்கள் வேண்டிக்கொள்ளும் பட்சத்தில், பதிவேட்டில் பதிந்த ஒழுங்கின்படி இரவலாக வழங்க நூலகர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(xvi) சபை தீர்மானம் மேற்கொள்ளும் வகையில் நூலகத்தின் இரவற் பிரிவைத் திறந்து வைத்திருக்க முடியும்.

2. உசாத்துணைப் பகுதி :

(i) 14 வயதுக்கு மேற்பட்ட, எழுத, வாசிக்கத் தெரிந்த எவருக்கும் உசாத்துணைப் பகுதியில் புத்தகங்களை வாசிக்க உரிமையுண்டு.

(ii) உசாத்துணைப் பிரிவல் புத்தங்களை வாசிக்க விரும்பும் ஒருவர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி, வாசகர் புத்தகத்தில் பெயர் ,முகவரியை எழுதிக் கையொப்பத்தை இட்டு நூலகரிடம் அனுமதி பெறுதல் வேண்டும்.

(iii) உசாத்துணைப் பிரிவுக்கு வெற்றுத்தாளைத் தவிர வேறு எதனையும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது. உசாத்துணைப் பிரிவுக்கு எடுத்துச் செல்ல முடியும் என நூலகர் அனுமதி வழங்கும் ஆவணங்களை மாத்திரம் கொண்டு செல்ல முடியும்.

(iv) உசாத்துணைக்கெனப் பெறும் எந்தப் புத்தகத்தையும், நூலகத்துக்கு வெளியே எவரும் எடுத்துச்செல்லக் கூடாது.

(v) உசாத்துணைக்கென வருகை தரும் வாசகரரொருவர், உசாத்துணைப் பிரிவுக்கு வெளியே ஏனைய பிரிவுகளிலிருந்து. புத்தகம், சஞ்சிகை, ஆவணம், என்பவற்றை வேண்டி நின்றால், உசாத்துணைப் பிரிவின் நூலகரிடம் அதற்கான அனுமதியைப் பெற்றுப் பயன்படுத்திய பின்னர் அவற்றை மீண்டும் உரிய இடத்தில் வைத்தல் வேண்டும்.

(vi) பொதுசன நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் உசாத்துணைப் பிரிவு திறந்துவைக்கப்படுதல் வேண்டும்.

(vii) அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆவணங்களது பிரதிகளைச் சபை தீர்மானிக்கும் கட்டணத்துக்கும் நூலகரது அனுமதிக்கும் உட்பட்டு, அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

3. சிறுவர் நூலகம் :

(i) சிறுவர் நூலகம் சபையின் நிருவாகப் பிரிவுக்குள் வசிக்கும் 14 வயதுக்குக் குறைந்த, 3 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கானது.

(ii) சிறுவர் நூலகத்தை திறந்திருக்கும் நேரங்களை நூலக ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் கீழ் பிரதேச சபை தீர்மானிப்பதுடன், குறித்த நேரங்களைத் தெளிவாகத் தென்படும் வண்ணம் நூலக முன்றலில் அறிவித்தல் பலகையில் தொங்கவிடுதல் வேண்டும்.

(iii) சிறுவர் நூலகங்களுக்குள் (மேற்பார்வை செய்வதற்கான அலுவலர் தவிர்ந்த ) பிரதேச சபையின் நூலகப் பணியாட்கள், அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய வளர்ந்தோர் நுழைய அனுமதி வழங்கப்படுதல் கூடாது.

4. பருவகாலச் சஞ்சிகைகள் பகுதி :

(i) 14 வயதுக்கு மேற்பட்ட எழுத வாசிக்கத் தெரிந்த எவருக்கும் சஞ்சிகைப் பிரிவுக்குள் செல்ல அனுமதி இருத்தல் வேண்டும்.

(ii) தமது ஆளடையாளத்தை உறுதி செய்து பதிவேட்டில் பெயர், முகவரியை எழுதி கையொப்பமிடுபவரை நூலகர் அனுமதிக்க முடியும், சஞ்சிகைப் பிரிவில் காணப்படும் சஞ்சிகைகள், புத்தகங்கள் அல்லது ஏனைய ஆவணங்கள் போன்ற எவற்றையும் வெளியில் கொண்டு செல்வது கூடாது.

(iii) வெளியிலிருந்து எந்த சஞ்சிகையையும், பத்திரிகையையும், கோவையையும், ஏதும் உபகரணங்களையும், பயணப் பைகளையும், உள்ளே கொண்டு செல்ல முடியாது.

(iv) பொது நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் சஞ்சிகைப் பிரிவையும் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

5. செய்தித்தாள் பகுதி :

(i) வாசகர்களது வரவுப் பதிவேட்டில் பெயர், முகவரியை எழுதிக் கையொப்பமிடும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் எவரும் இந்தப் பிரிவுக்குச் செல்ல அனுமதி வழங்குதல் வேண்டும்.

(ii) நாளாந்த, வாராந்த செய்தித் தாள்கள் இந்தப் பிரிவில் வைக்கப்படுதல் வேண்டும். மேலும், கடந்த ஒரு மாதத்துக்குள் வெளியிடப்பட்ட செய்தித்தாள்கள் மட்டுமே பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(iii) ஒரு மாத காலத்துக்கு அதிகம் கடந்த செய்தித்தாள்கள் இந்தப் பிரிவிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். அவற்றைப் பொருத்தமான நடவடிக்கைக்கெனப் பிரதேச சபையின் களஞ்சியத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

iv. செய்தித்தாள் பகுதியைத் திறந்து வைத்திருக்கும் நாட்கள், நேரங்கள் போன்றவற்றைப் பிரதேச சபை தீர்மானம் செய்யும்.

6. கட்புல, செவிப்புல, தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு :

(i) தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி, வரவுப் பதிவேட்டில் பெயர், முகவரியை எழுதிக் கையொப்பமிடும், பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டணத்தைச் செலுத்தும் எந்த உறுப்பினருக்கும் இந்தப் பிரிவுக்குள் செல்ல நூலகர் அனுமதி வழங்குதல் வேண்டும்.

(ii) கட்புல, செவிப்புலப் பிரிவில் ஒலிநாடாக்கள், செவிப்புல உபகரணங்கள் என்பவற்றை வளவுக்கு வெளியில் எடுத்துச்செல்லக் கூடாது.

(iii) ஒலிநாடாக்களை வழங்கும்போதும், திருப்பிப் பெறும்போதும் வாசகரும் நூலகரும் அவற்றின் செவிப்புலத் தன்மையை உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

(iv) தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவைப் பயன்படுத்த நாடும் உறுப்பினர் எவரும் செலுத்தவேண்டிய கட்டணத்தைப் பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்க முடியும்.

(v) வெளியிலிருந்து கொண்டுவரப்படும் குறுந்தகடுகள் அல்லது கணினி மென்பொருட்கள் என்பவற்றை இப்பிரிவின் கணினிகளில் இடப்படுவது கூடாது.

(vi) இந்தப் பிரிவின் மூலம் நடத்தப்படும் மின்னஞ்சல், இணையதள வசதிகளைக் கட்டணம் செலுத்தும் எவரும் பெற்றுக்கொள்ள முடியும்.

(vii) இப்பிரிவில் பயன்பாட்டுக்கென உள்ள குறுந்தகடுகள் அல்லது கணினி மென்பொருட்கள் என்பவற்றை எவ்வகையிலேனும் பிரதியெடுத்தல் அல்லது வெளியில் கொண்டு செலல்ல என்பவற்றுக்கு அனுமதி வழங்குதல் கூடாது. சபை தீர்மானிக்கும் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர், குறித்த பிரதிகளை வேண்டுவோருக்கு வழங்க முடியும்.

(viii) குறுந்தகடுகள் மூலம் பிரதிகளைப் பெற எந்த வாசகமும் விரும்பினால் நூலகரது அனுமதியை அவர் பெறுதல் வேண்டும்.

7. கேட்போர் கூடம் :

(i) கல்வி, கலாசார அபிவிருத்திக்கென உரிய மேடை நாடகங்கள், திரைப்படங்கள், விரிவுரைகள், மாநாடுகள், வேலைக்களங்கள், பல்சுவை நிகழ்ச்சிகள், பகிரங்கக் கூட்டமல்லாத அரசியல் மற்றும் தொழிற்சங்கக் கூட்டம், சமயச் சொற்பொழிவுகள் என்பவற்றுக்கெனப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தைப் பொருத்தமான விண்ணப்பதாரர்களுக்கென ஒதுக்கித்தர முடியும்.

(ii) விண்ணப்பிக்கும் ஒழுங்கு வரிசைக் கிரமத்துக்கமைய அவற்றைப் பதிவேட்டில் பதிந்த பின்னர், பிரதேச சபை விதிக்கும் குறித்த கருமத்துக்கென உள்ள கட்டணத்தையும் வைப்புத்தொகையையும் செலுத்தியதன் பின்னர் முதலில் விண்ணப்பிப்போருக்குக் கேட்போர் கூடம் ஒதுக்கப்படும்.

(iii) கேட்போர் கூடம் ஒதுக்கப்பட்ட நாள் தவிர்ந்த வேறொரு நாளில் கூடத்தை ஒதுக்கித்தர விண்ணப்பதாரி வேண்டுகோள் விடுத்தால், முன்னர் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புத் தொகையின் அடிப்படையில் இன்னுமொரு நாளில் ஒதுக்கித்தர முடியும். குறித்த தினத்தை இன்னுமொரு விண்ணப்பதாரி ஒதுக்கியிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் முதல் நாளில் மண்டபத்தைப் பயன்படுத்தாத காரணத்தால் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது. வைப்புத்தொகை மட்டும் மீளளிப்புச் செய்யப்பட முடியும்.

(iv) கேட்போர் கூடத்தை ஒதுக்கித்தரும் அதிகாரம் சபைக்கும், தலைவருக்கும் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கும் சாட்டப்பட்டுள்ளது. நியாயமான காரணத்தை முன்னிட்டு, ஒதுக்கீட்டை இல்லாது செய்ய முடியும்.

(v) கேட்போர் கூடத்தை ஒதுக்கிக் கொண்ட ஒவ்வொரு விண்ணப்பதாரியும்:-

(அ) கேட்போர் கூடத்தையும், அதன் சுற்றாடலில் உள்ள உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், கருவிகள் மற்றும் ஏனைய பொருத்துக்களுக்குச் சேதம் விளைவிக்காத வண்ணம் நடந்துகொள்ளல் வேண்டும்;

(ஆ) அநாகரிகமான, பொருத்தமற்ற, அழுக்கான உடைகளையும், நடத்தைகளையும் கொண்டவர்கள் கேட்போர் கூடத்தினுள் நுழைவதைத் தவிர்த்தல் வேண்டும்;

(இ) குடிபோதையில் இருப்போரை உட்பிரவேசிக்கச் செய்தல் அல்லது கேட்போர் கூடத்தினுள் மது அருந்துதல், புகை பிடித்தல் என்பவற்றைத் தவிர்த்தல் வேண்டும்;

(ஈ) ஏதும் தொற்றுநோய் அல்லது ஒட்டுநோய் என்பவற்றுல் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் நோயுற்றிருந்த ஒருவரைப் பராமரித்த எவரையும் கேட்போர் கூடத்துள் நுழைவதைத் தவிர்த்தல் வேண்டும்;

(உ) ஒழுக்கநெறிக்குச் சாதகமாக அமையாத காட்சிகள், சுவரொட்டிகள், படங்கள், சிலைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

(ஊ) கேட்போர் கூடத்துக்கு வருகைதரும் இரசிகர்களது உடைமைகள், பொருட்கள் என்பவற்றைப் பாதுகாக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(எ) தலைவரது எழுத்துமூல அனுமதியின்றி நள்ளிரவு 12 மணியின் பின்னர் கேட்போர் கூடத்தில் தரித்திருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

8. கிளை நூலகங்கள்:

(i) பிரதேச சபை தீர்மானிக்கும் வகையில் பொதுசன நூலகத்துடன் இணைந்த கிளை நூலகங்களை நடத்திச்செல்ல முடியும்.

(ii) கிளை நூலகங்களது உறுப்புரிமை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதிவோருக்கு மட்டுமே வரையறுக்கப்படுதல் வேண்டும்.

9. வாசிப்பு மண்டபங்கள் :

(i) பிரதான நூலகத்துக்குப் புறம்பாகப் பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் வட்டார மட்டத்தில் வாசிப்பு மண்டபங்களை நடாத்திச்செல்ல முடியும்.

(ii) வாசிப்பு மண்டபங்களில் செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் மாத்திரமே வாசகர்களுக்கு வாசிக்க வழங்கப்படலாம்.

(iii) ஆளடையாளத்தை உறுதிப்படுத்திப் பதிவேட்டில் பெயரையும் முகவரியையும் எழுதிக் கையொப்பமிடுவோருக்கு வாசிப்பு மண்டபங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

10. நடமாடும் நூலகங்கள் :

(i) பிரதான நூலகத்துக்கோ அல்லது கிளை நூலகங்களுக்கோ வருகைதர முடியாத நூலகத்துடன் இணைந்த நடமாடும் நூலகங்களை நடத்த முடியும்.

(ii) நடமாடும் நூலக சேவை நடத்தப்படும் இடங்களில் அவை நடைபெறும் நேரங்களையும் தினத்தையும் நூலக உறுப்பினர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வண்ணம் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(iii) நடமாடும் நூலக சேவையைப் பயன்படுத்துவோருக்கு விசேடமான அட்டைகள் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன், பிரதான நூலகத்துக்கோ அல்லது கிளை நூலகங்களுக்கோ குறித்த விசேட அட்டை செல்லுபடியற்றதாக இருத்தல் வேண்டும்.

11. கற்கைப் பகுதி :

(i) பிரதான நூலகத்துடனும், கிளை நூலகங்களுடனும் இணைந்த கற்கைப் பகுதியொன்றை அமைக்கப் பிரதேச சபை தீர்மானிக்க முடியும்.

(ii) தமது ஆளடையாளத்தை உறுதி செய்து வரவுப் பதிவேட்டில் பெயரையும் முகவரியையும் எழுதிக் கையொப்பமிடும் எவருக்கும் இதனைப் பயன்படுத்த அனுமதி வழங்க முடியும்.

(iii) நூலகத்தின் புத்தகங்களையும் பருவகால சஞ்சிகைகளையும், செய்தித்தாள்களையும் கற்கைப் பிரிவுக்குள் கொண்டுசெல்லவோ அல்லது அவற்றைக் கையாளவோ அனுமதி வழங்கப்படக்கூடாது. வாசகர்களது தனிப்பட்ட கோவைகள், புத்தகங்கள், ஆவணங்கள் போன்றவை மட்டுமே பயன்படுத்த அனுமதி வழங்க முடியும்.

(iv) நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் கற்கைப் பிரிவும் திறக்கப்படுதல் வேண்டும்.

(v) தமது சொந்தக் கற்கை நடவடிக்கைகள் தவிர்ந்த வேறெந்தக் கருமத்திலும் அங்கு வருகை தருவோர் ஈடுபடாதிருப்பதில் நூலகர் திருப்திப்படுதல் வேண்டும். காரணமற்ற விதத்தில் நடமாடித் திரிவோர் மற்றும் வேறு கருமங்களில் ஈடுபடுவோரை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

12. அரிதான நூல்கள் மற்றும் கிரந்தங்களைப் பாதுகாக்கும் பகுதி :

(i) வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த அல்லது பதிப்பில் காணப்படாத அல்லது கொள்வனவு செய்ய முடியாத எந்தத் தலைப்பிலும் எழுதப்பட்ட எந்தப் புத்தகமாயினும் அவற்றைப் பாதுகாப்பதற்கென இப்பிரிவை அமைத்துக்கொள்ள முடியும்.

(ii) தொல்பொருள் திணைக்களம் அல்லது அருங்காட்சியகத்திடம் ஒப்படைக்கச் சட்டத்தினால் கட்டுப்பாடு செய்யப்படாத 50 வருடங்களுக்கும் அதிகப் பழைமை வாய்ந்த, தற்போது பதிப்பில் இல்லாத மற்றும் விலை கொடுத்து வாங்குவதற்கு இல்லாத, நூலக மற்றும் ஆவணச் சேவைகள் மன்றம் பரிந்துரைத்துள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் என்பன இப்பிரிவில் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(iii) நூலகரிடமிருந்து எழுத்துமூல அனுமதியைப் பெற்ற ஆய்வாளர்கள் இந்தப் பகுதியைப் பயன்படுத்த முடியும்.

13. உடல் ஊனமுற்றோருக்கான நூலக சேவைப் பகுதி :

(i) பார்வையற்ற தன்மையால் ஊனமுற்ற வாசகருக்கென இந்தப் பிரிவை ஆரம்பிக்க முடியும். பிரெய்லி முறையில் தயாரிக்கப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

14. சனசமூக தகவற் சேவைப் பகுதி :

(i) வரலாற்று, சமூக, பொருளாதார, வர்த்தக, கல்வி அல்லது ஏனைய தகவல்கள் தேவைப்படும் வாசகர்களுக்கு வழங்குதல் என்பன சனசமூக, தகவற் சேவைப் பகுதியின் சேவைகளாக அமைதல் வேண்டும்.

(ii) பிரதேச சபையின் துணை விதிகள், சபை அறிக்கைகள், முன்னேற்ற அறிக்கைகள், வரவு செலவு அறிக்கைகள், இறுதிக் கணக்குகள் பகுப்பாய்வு அல்லது பிரதேச சபைக்கு உரிய தகவல்களையும் ஏனைய தகவல்களையும் பெற விரும்புவோருக்கு உதவுவதற்கென இப்பிரிவு தாபிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இதற்கெனத் தலைவரது அல்லது நூலகரது அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் எவருக்கும் இந்தத் தகவல்களை வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(iv) இந்தப் பிரிவுடன் தொடர்புள்ள ஏதேனும் தகவல்களைப் பிரதியெடுக்க விரும்பின், வேண்டுகோள் விடுக்கும் எவருக்கும், உரிய கட்டணங்களைச் செலுத்திய பின்னர் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

15. நிழற்படப் பிரதிப் பகுதி:

(i) நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களுக்குத் தேவைப்படும் புத்தகத்தின் அல்லது சஞ்சிகையின், செய்தித்தாளின் பகுதியைப் பிரதிசெய்து பெற்றுக்கொள்ளவென இப்பிரிவை அமைக்க முடியும்.

(ii) பிரதேச சபை தீர்மானிக்கும் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், நூலகரது மேற்பார்வையின் கீழ் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(iii) ஏதேனும் சந்தர்ப்பங்களின்போது புத்தகமொன்றின், சஞ்சிகையொன்றின் அல்லது செய்தித்தாளொன்றின் பகுதியை மாத்திரமே பிரதி செய்து வழங்க முடிவதுடன், முழுப்புத்தகத்தையோ, சஞ்சிகையையோ அல்லது செய்தித்தாளையோ முழுமையாகப் பிரதி செய்து வழங்குவது கூடாது.

16. பொது நூலகத்தின்:

(i) நூலகத்துக்குச் சொந்தமான அனைத்துப் பிரிவுக்கும் வருகைதரும் வாசகர்கள் மற்றும் அலுவலர்கள், பணியாட்கள் ஆகியோர் நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் பூரண அமைதியைக் கடைப்பிடித்தல் வேண்டும்;

(ii) நூலகத்துக்குச் சொந்தமான எந்தவொரு பிரிவுக்கும் குடிபோதையில் நுழைதல், நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் அதன் வளவுக்குள் மது அருந்துதல், புகை பிடித்தல், வெற்றிலை சுவைத்தல், சூது விளையாடுதல், ஒருவரோடு ஒருவர் உரையாடுதல், காரணமின்றி நடமாடித் திரிதல், நூலக உறுப்பினர்களுக்கும் அலுவலர்களுக்கும் தடை ஏற்படும் விதத்தில் நடந்துகொள்ளல், படுத்து உறங்குதல், உணவு உட்கொள்ளுதல், பிச்சை எடுத்தல், உதவி கேட்டுத் திரிதல், விரிவுரை நடத்துதல், விலங்குகளைக் கொண்டு வருதல் போன்ற எதனையும் எவரும் செய்தல் கூடாது ;

(iii) நூலகத்தின் வாசகரொருவர் வெளியிலிருந்து கொண்டு வரும் அனைத்துப் பொருட்களையும், நூழைவாயிலின் அருகில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்புக் கருமபீடத்தில் ஒப்படைத்து இலக்க அட்டையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். குறித்த பொருட்களை அன்றைய தினத்திலே வாசகர் அகற்றிச் செல்லல் வேண்டும். அன்றைய தினம் கடந்த பின்னர் குறித்த பொருட்களின் பேரில் வகை கூறல் இல்லை. இலக்க அட்டை அற்றுப்போகும் சந்தர்ப்பத்தில், பொருட்களது உரிமையை உறுதி செய்த பின்னர் அதனைப் பெற்றுக்கொள்ள வழி செய்யப்பட முடியும். அற்றுப்போன இலக்க அட்டைக்காகப் பிரதேச சபை செலவிட்ட தொகையை வாசகர் செலுத்துதல் வேண்டும். பொருட்களைப் பொறுப்பேற்க முன்னர் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கென அவற்றைப் பரிசோதித்துப் பார்க்க அலுவலர்களுக்கு அதிகாரமுண்டு. அத்துடன், பொருட்தளை மீளக் கையளித்த பின்னர் ஏற்படும் குறைபாடுகளுக்கு வகை கூறுதல் இல்லை. பரிசோதனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போரது பொருட்களைக் கருமபீடத்தில் பொறுப்பேற்றல் கூடாது. பெறுமதி மிக்க பொருட்கள் மற்றும் பணம் என்பவற்றைக் கருமபீடத்தில் ஒப்படைப்பதை ஒவ்வொரு வாசகரும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்;

(iv) நூலகம் மூடி வைக்கப்படும் காலத்துக்குள் குறித்த வளவுக்குள் தரித்திருத்தல் ஆகாது. தலைவர் அல்லது நூலகரது அனுமதியை பெற்றுள்ள அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் தவிர, ஏனையோர் நூலகத்தின் சேவைகள் நிறைவடைந்த பின்னர் நூலகத்தில் தரித்திருத்தல் கூடாது.

(v) ஏதும் தொற்றுநோய் அல்லது ஒட்டு நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அவ்வாறான நோயாளியை அல்லது நோயாளிகளைப் பராமரித்த எவரும் நூலக வளவுக்குள் பிரவேசித்தல் கூடாது.

11. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும்.

12. இந்தத் துணை விதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி,

"சபை" என்பது, பிரதேச சபையையும்,
"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
"செயலாளர்" என்பது, பிரதேச சபையின் செயலாளரையும்,
"நூலகர்" என்பது, பிரதேச சபையின் நூலகத்தில் நிருவாகம் செய்வதற்கென அப்பதவிக்கு நியமனம் பெற்றுள்ள ஒருவரையும்,
"பிரதான நூலகம்" என்பது, பிரதேச சபையின் வளவுக்குள் அமைந்துள்ள பொதுசன நூலகத்தையும்,
"குழு" என்பது நூலக ஆலோசனைக் குழுவையும் குறிப்பிடும்.

**திரிந்து சென்று செய்யும் வியாபாரம் தொடர்பான துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126(X) ஆவது பிரிவின் கீழ் பிரிதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் திரிந்து சென்று வியாபாரம் செய்வதை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்காக விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் திரிந்து சென்று செய்யும் வியாபாரம் தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

04. இந்தத் துணை விதியின் கீழ் பிரதேச சபையின் தலைவரால் குறித்த கருமத்துக்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரும் எந்தவொரு வீதியிலோ, பாதையிலோ, பொது மைதானத்திலோ, பொதுப் பூங்காவிலோ அல்லது பொது இடத்திலோ எந்தவொரு பண்டத்தையும், பொருளையும் அல்லது உணவுப் பண்டத்தையும் கையால் காவிச் சென்று அல்லது மிதிவண்டி, முச்சக்கர சைக்கிள், வண்டில் அல்லது வேறேதும் வாகனத்தில் கொண்டு சென்று விற்பனை செய்தல், அல்லது விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கென வைத்திருத்தல் கூடாது.

05. மேலே 4 ஆவது துணை விதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம், முன்னரே செல்லுபடியற்றதாக ஆக்கப்படும்வரை குறிபிட்ட கால எல்லைக்கென வழங்கப்பட்டிருப்பின், அந்தக் கால எல்லை வரை மட்டும் செல்லுபடியாகும். அனுமதிப்பத்திரத்தின் உச்ச அளவிலான செல்லுபடிக் காலம் உரிய பஞ்சாங்க வருடத்தைத் தாண்டாது இருத்தல் வேண்டும்.

06. திரிந்து சென்று விற்பனை செய்யும் வியாபாரத்துக்கான அனுமதிப்பத்திரம் பெறும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் இந்தத் துணை விதியின் "அ" அட்டவணைக்கு அமையத் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இதனைப் பிரதேச சபை தீர்மானித்து விதிக்கும் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. இந்தத் துணை விதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் துணை விதியின் "ஆ" அட்டவணைக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். இதற்கென அறவிடப்படும் கட்டணங்கள், அனுமதிப்பத்திரத்துக்கான கால எல்லையைக் கருத்திற் கொண்டு சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட முடியும்.

08. திரிந்து சென்று வியாபாரத்தில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் தலைவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தில், நன்கு தென்படும் வண்ணம் அணிந்திருக்கவேண்டிய அல்லது காட்சிப்படுத்த வேண்டிய பகுதியை அணிந்திருத்தல் வேண்டும் அல்லது நன்கு தென்படும் வண்ணம் வைத்திருத்தல் வேண்டும்.

09. தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் தமது அடையாள அட்டையையும் அனுமதிப்பத்திரத்தையும் முன்வைக்கும்படி கேட்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவற்றையும் அவற்றுடன் தொடர்பான ஆவணங்களையும் திரிந்து விற்பானை செய்யும் ஒவ்வொருவரும் முன்வைத்தல் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம் பெற்ற திரிந்து விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் வியாபாரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு நேரம் வரையறை செய்யப்பட்டிருந்தாலொழிய, மு. ப. 6.00 மணியிலிருந்து பி.ப 10.00 மணி வரை தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட உரித்துடையவராவார். எனினும், குறித்த கால எல்லைக்கு அப்பாலும் வியாபாரம் செய்வதற்கெனத் தலைவரால் அனுமதி வழங்கப்பட்டு, அது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள நேரம் வரை வியாபாரம் செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

11. திரிந்து சென்று வியாபாரத்தில் ஈடுபடும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தொற்று நோயால் பீடிக்கப்பட்டிருப்பின், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவர் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

12. உணவுப் பொருட்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டிருக்கும் திரிந்து விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் பின்வரும் ஏற்பாடுகளுக்கமைய நடந்துகொள்ளுதல் வேண்டும்.

(அ) விற்பனைக்கெனக் கொண்டு செல்லும் உணவுப்பொருட்களில் ஈக்கள் மொய்ப்பதைத் தடுக்கவும், மற்றும் தூசு அழுக்குகள் துர்நாற்றம் போன்றன சேருவதைத் தடுக்கவும் ஏற்ற வகையில் அவற்றை வைத்திருத்தல் வேண்டும். உணவுப்பொருட்களை ஆட்கள் தொட்டுப் பார்த்தபற்கு இடமளித்தல் கூடாது.

(ஆ) உணவுப்பொருட்களை வைத்திருக்கும் வாகனம், மிதிவண்டி, வண்டி, பாத்திரம் அல்லது தட்டம் என்பவற்றுடன் பரிமாறப்படும் எல்லா உபகரணங்களும் கருவிகளும் நிதமும் சுத்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(இ) உணவுப் பண்டங்களைச் சுற்றுவதற்காகப் பயன்படுத்தும் கடதாசி அல்லது அது போன்றவை சுத்தமாகவும், அதற்கான பொருத்தமான நிலையிலும் இருத்தல் வேண்டும்.

(ஈ) உணவுப்பண்டங்களைப் பரிமாறுவதற்கெனச் சுத்தமான உபகரணங்களையும் கருவிகளையும் பயன்படுத்துதல் வேண்டும். உணவுப்பண்டங்களை விற்பனை செய்வதில் தொற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ளவரை ஈடுபடுத்துதல் கூடாது.

(உ) எவருக்கேனும் அபாயம் அல்லது தொந்தரவு விளைவிக்கும் விதத்தில் நெருப்பைப் பயன்படுத்துதல் கூடாது.

(ஊ) கழிவுப்பொருட்களையோ அல்லது கழிவு நீரையோ பொது இடங்களில் இடுதல் கூடாது. அவை சுகாதாரமான பாதுகாப்பான முறையில், தலைவர் திருப்திப்படக்கூடிய முறையில் அகற்றப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

13. ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு அல்லது விலங்குளது இறைச்சியைக் கொண்டு திரிந்து விற்கும் எவரும் விற்பனை செய்தல் கூடாது.

14. ஏதும் தொற்று நோய் அல்லது பயங்கர நோய்கள் பரவியிருக்கும் அல்லது பரவிய இடங்களில் அல்லது விசேட சந்தர்ப்பங்களைக் காரணமாகக் கொண்டு, திரிந்து விற்பனை செய்வது கூடாது என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம், வலயம், வீதி, பாதை அல்லது வியாபாரம், செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பினும், குறித்த பிரதேசத்தில், வலயத்தில், வீதியில், பாதையில் கொண்டு திரிந்து விற்பனை செய்வது கூடாது.

15. திரிந்து சென்று வியாபாரம் செய்வதன் மூலம் உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்தப்படும் கழிவுப்பொருள் முகாமை வழிமுறைகளுக்கமைய அல்லாது வேறெந்த வகையிலும் சுற்றாடலில் விடுவித்தல் கூடாது.

16. துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தாலும், பொதுச் சந்தை வளவுக்குள் திரிந்து சென்று விற்பனை செய்வது கூடாது.

17. ஏதேனும் ஓரிடத்தில் நெடுநேரம் தரித்திருந்து எந்தவொரு அனுமதிப்பத்திரதாரியும் வியாபாரம் செய்தல் கூடாது.

18. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுபடுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் அதிகாரத்தின் (2) ஆவது உப பிரிவில் தரப்பட்டுள்ளவாறு/ விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

19. இந்தத் துணை விதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி,

"சபை" என்பது, பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது பிரதேச சபையின் தலைவரையும்,

" பிரதேச சபை நிருவாக எல்லை" என்பது பிரதேச சபை கூட்டிணைக்கப்பட்டுள்ள நிருவாகப் பிரதேசத்தையும்,

" உணவுப் பொருட்கள்" என்பது மனித நுகர்வுக்காக எடுக்கப்படும் உணவுவகைகளையும் பான வகைகளையும்,

"திரிந்து சென்று விற்பனை செய்வது" என்பது தாம் அல்லது விலங்கினது உதவியுடன் அல்லது வாகனத்தில், வண்டியில், மிதிவண்டியில், முச்சக்கர சைக்கிள் வண்டியில் பொருட்களைக் கொண்டு சென்று மேற்கொள்ளப்படும் வியாபாரம் எனவும் கொள்ளப்படும்.

**அட்டவணை "அ"**

திரிந்து சென்று வியாபாரம் செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறும் விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெர் :............................
02. விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி:............................
03. விண்ணப்பதாரியின் தற்காலிக முகவரி:............................
04. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :............................
05. விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :............................
06. திரிந்து சென்று செய்யும் வியாபாரத்தின் தன்மை :............................
07. திரிந்து சென்று வியாபாரம் செய்யும் முறை :............................
08. விண்ணப்பிக்கும் நிர்வாக எல்லை :............................
09. விண்ணப்பதாரியின் வதிவிடப் பிரதேசம் :............................
10. அனுமதிப்பத்திரம் தேவைப்படும் கால எல்லை :............................
11. நடமாடும் வியாபாரம் நடத்தும் வாகனத்தின் பதிவிலக்கம் :............................

..........................,
திகதி : ..................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**அறிவுறுத்தல்கள் :**

தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான வருமானப் பரிசோதகரது பரிந்துரை:

..........................,
திகதி :................. வருமானப் பரிசோதகரது கையொப்பம்.

அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான எழுதுவினைஞரது அறிக்கை : ..........................
எழுதுவினைஞரது கையொப்பம்.

திகதி :.................

அனுமதிப்பத்திரத்தை வழங்கப் பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை

...................,
செயலாளர்.

திகதி :.................

அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை

............................
திகதி :................. தலைவர்,
.......... பிரதேச சபை.

**அட்டவணை "ஆ"**

திரிந்து சென்று வியாபாரம் செய்வதற்கென வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்

1 அனுமதிப்பத்திரதாரியின் முழுப் பெயர்: ............................
2 அனுமதிப்பத்திரதாரியின் தே.அ.அ.இல.: ............................

3 வியாபாரத்தின் தன்மை:........................
4 அனுமதி வழங்கப்படும் பிரதேசம்:..........................
5 அனுமதி வழங்கப்படும் கால எல்லை: ....................................

............................
திகதி :................ தலைவர்,
.................. பிரதேச சபை.

(இந்தப் பகுதி நன்கு தென்படும் வண்ணம் அணிந்திருத்தல் வேண்டும் அல்லது காட்சிப்படுத்துதல் வேண்டும்)

**பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் திரிந்து சென்று வியாபாரம் செய்வதற்கென வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

1. முழுப் பெயர்:....................................
2. நிரந்தர முகவரி:....................................
3. தே.அ.அ இலக்கம்:....................................
4. அனுமதிப்பத்திரதாரியின் கையொப்பம்:....................................
5. அனுமதி வழங்கப்படும் பிரதேசம்:....................................
6. அனுமதி வழங்கப்படும் கால எல்லை:....................................
7. வியாபாரத்தின் தன்மை:....................................

.............................
திகதி :.................................... தலைவர்,
......... பிரதேச சபை.

**தகனசாலைகள் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியைத் தயாரிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (xiv) பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. பிரதேச சபைக்கு உரித்தான ஒவ்வொரு தகனசாலையிலும் இறந்த உடலைத் தகனம் செய்தல், அதற்குரிய கட்டணங்களை விதித்தல் மற்றும் தகனசாகைளைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்காக இந்தத் துணை விதி விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது தகனசாலைகள் பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

04. தலைவர் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் (இங்கு இதன் பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பிடப்படும்) ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி சபைக்குச் சொந்தமான தகனசாலைகளில் எந்தவொரு இறந்த உடலையும் தகனம் செய்தல் கூடாது.

05. இந்தத் துணை விதியின் 4 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கென வேண்டும் ஒருவர் (இங்கு இதன் பின்னர் "விண்ணப்பதாரி" எனக் குறிப்பிடப்படுபவர்) அட்டவணை "அ" இன் மாதிரிக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் ஆவணங்களுடன் தலைவரிடமோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும்.

(அ) விண்ணப்பிப்பவரது தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி அல்லது விண்ணப்பிப்பவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதும் ஒரு ஆவணம்.

(ஆ) இறந்தவரது மரணம் தொடர்பில் குற்றவியல் நீதி விசாரணையின்கீழ் விசாரணைகள் நடைபெற்றதெனின், விசாரணை செய்த மரண விசாரணை அதிகாரி அல்லது நீதிபதி என்போரால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்யும் சட்டத்தின் 41 (இ) பிரிவின்கீழ் இறந்த உடல் தகனம் செய்யப்பட முடியும் என அனுமதி வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்தே பிறந்த உடலெனின், பிறப்பு இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் 41 (ஆ) ஆவது பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்.

06. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவம் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவை கிடைக்கப்பெறும் ஒழுங்கின்படி பதியப்படுதல் வேண்டும்.

07. இறந்த உடலைத் தகனம் செய்வதற்கெனப் பொறுப்பேற்பதெனின், அதன்கென விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தை அறவிட்ட பின்னர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரியிடம் வழங்க முடியும். இறந்த உடலைத் தகனசாலைப் பொறுப்பாளரிடம் கையளிக்கவேண்டிய நேரத்தை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

08. இறந்த உடலைத் தகனம் செய்யப் பொறுப்பேற்க முடியாதெனின், அதற்கான காரணத்தைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு தலைவர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர் உடனடியாக விண்ணப்பதாரியிடம் தெரிவித்தல் வேண்டும்.

09. நாளாந்தம் காலை 6.00 மணிக்கும் பி.ப 06.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தகனம் செய்வதற்காக இறந்த உடல்கள் கையளிக்கப்படுதல்.

10. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னரான முப்பது நிமிட நேரத்தில் விண்ணப்பதாரி இறந்த உடலைத் தகனம் செய்வதற்காகத் தகனசாலைப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தாமதமாக ஒப்படைப்பதன் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களையோ அல்லது நட்டங்களையோ பிரதேச சபை பொறுப்பேற்காது.

11. ஒவ்வொரு தகனசாலையிலும் தகனம் செய்யப்படும் உடல் தொடர்பாக விண்ணப்பிப்பவர் பெயர், முகவரி, இறந்தவரது பெயர், அவர் இறப்பதற்கு முன்னர் வசித்த முகவரி, விண்ணப்பதாரிக்கும் இறந்தவருக்கும் இடையிலான உறவு, தகனம் செய்யப்பட்ட திகதி, நேரம் அனுமதிப்பத்திர இலக்கம், திகதி போன்ற தகவல்களைக் கொண்ட பதிவேட்டைத் தகனசாலையின் பொறுப்பாளர் பேணிவருதல் வேண்டும்.

12. இறந்த உடல் தகனம் செய்யப்பட்டு 72 மணி நேரம் கழிவதற்கு முன்னர் முகவர் உரிய அஸ்தியைப் பொறுப்பேற்றல் வேண்டும். எனினும், தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரிடம் விண்ணப்பதாரி எழுத்துமூலம் வேண்டிக்கொள்ளும் பட்சத்தில் அஸ்தியைத் தகனசாலைப் பொறுப்பாளர் வசம் வைத்திருக்கும் காலத்தை நீடிப்புச் செய்ய முடியும். உரிய காலத்துக்குள் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை அகற்றி விடுவதற்கான அதிகாரம் தலைவரிடம் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரிடம் இருத்தல் வேண்டும்.

13. தகனசாலையின் பொறுப்பாளர் அல்லது தலைவரது அனுமதியின்றித் தகனசாலையின் வளவுக்குள் நுழைதல் குற்றமாகும். எனினும், இறந்த உடலைத் தகனம் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருடன் வருகை தருபவருக்கு அல்லது வருகை தருவோருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவே கருதப்படுதல் வேண்டும்.

14. தகனசாலையின் வளவுக்குள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்வதோ அல்லது வளவக்குள் அமைந்துள்ள சபையின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதோ, தகனசாலயின் பொறுப்பாளர் அல்லது அவரது உதவியாளர்களது கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதோ அல்லது தகனசாலையின் வளவை அலங்தரிப்பதோ குற்றமாகும்.

15. தகனசாலையை :

(அ) இறந்த உடலைத் தகனம் செய்வதற்குப் பொருத்தமான வகையில் பராமரித்து வருவது தலைவரது கருமமாகும்;

(ஆ) பராமரித்தலுக்கும் திருத்த வேலைகளுக்குமென ஒரு தகனசாலையைக் குறிப்பிட்ட காலத்துக்கு மூடிவைக்க நேரும் பட்சத்தில் அது பற்றிய அறிவித்தலைத் தகனசாலையின் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் அலுவலகத்தில் பார்வையில்படும் வண்ணம் அறிவித்தல் விடுப்பது தலைவரது கருமமாகும்.

16. இறந்த உடலைத் தகனம் செய்வதற்காக அறவிடப்படும் கட்டணங்களைப் பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்க முடியும். அவ்வாறு விதிக்கப்படும் கட்டணங்களைப் பிரதேச சபை தேவையெனக் கருதும் சந்தர்ப்பங்களில் திருத்தியமைத்துக்கொள்ள முடியும். அவ்வாறு விதிக்கப்படும் அல்லது திருத்தியமைக்கப்படும் கட்டணங்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

17. தகனசாலை இயங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்பாராத வகையில் ஏற்படும் இயந்திரக் கோளாறு காரணமாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு. எனினும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் எவ்வகையிலேனும் விண்ணப்பதாரி சபைக்கு அல்லது தலைவருக்கு எதிராகச் செயற்படுவதற்கான காரணங்களாக இல்லாதிருத்தல் வேண்டும்.

18. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச் சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்கீழ் விதிக்கப்படக்கூடிய தண்டத்துக்கு உட்படுதல் வேண்டும்.

19. பதங்கள் பற்றிய அர்த்தங்கள் தேவைப்பட்டாலன்றி,

'சபை'என்பது, பிரதேச சபையையும்,

'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

'தகனசாலைப் பொறுப்பாளர்' என்பது, சபைக்கு உரித்தான தகனசாலையின் பொறுப்பாளராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ள ஒருவரையும் குறிக்கும்.

'இறந்த உடல்' என்பது, மனிதனின் இறந்த உடல் அல்லது உடலின் பகுதி அல்லது இறந்தே பிறந்த உடலையும்,

**அட்டவணை - 'அ'**

................. தகனசாலையில் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான அனுமதிப் பத்திரம்

01. விண்ணப்பிப்பவரது முழுப் பெயர் : ..........................
முகவரி :..........................
தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................
கிராம அலுவலர் பிரிவு :..........................

02. இறந்தவரது பெயர் :

இறந்தவர் வசித்த இடத்தின் முகவரி : ..........................
கிராம அலுவலர் பிரிவு :..........................
தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................

03. விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு :..........................
04. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :..........................
05. இறப்பைப் பதிவுசெய்த பதிவுகாரரின் பெயரும் முகவரியும் :..........................
06. இறப்பு தொடர்பாகத் திடீர் மரண விசாரணை நடைபெற்றதாயின் அதன் திகதியும் நேரமும் :..........................
07. விசாரணை செய்த அலுவலரது பெயரும் பதவியும் :..........................
08. இறந்த உடலைத் தகனம் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளதா என்ற விபரம் :..........................
09. தகனம் செய்வதற்கான திகதியும் நேரமும் :..........................
(விருப்பு ஒழுங்கின்படி)

(i) ..........................
(ii) ..........................
(iii) ..........................

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். சான்றிதழ்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

............................
(விண்ணப்பிப்பவரது கையொப்பமும் திகதியும்.

**(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)**

01. குறித்த கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன எனவும், அதற்கான பற்றுச்சீட்டு இலக்கம்......., திகதி ........... கொண்டதெனவும், விண்ணப்பிக்கப்பட்ட வண்ணம் சுமார் ...... மணி நேரம் தகனத்துக்கான அனுமதி வழங்கித் தகனத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் பரிந்துரை செய்கின்றேன்.

.........................
விடயப் பொறுப்பு இலிகிதர்

திகதி : .........................

02. அனுமதிப்பத்திரத்தை வழங்க அனுமதிக்கிறேன்.

............................
கையொப்பம்,
தலைவர்/அதிகாரம் பெற்ற அலுவலர்.

திகதி : .............................

**வரி அறவிடுவது சம்பந்தமான தவணை அறிக்கைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வது பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதி அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (iii) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் வரி அறவிடுவதற்கும் வரி தொடர்பான கருமங்களுக்கெனத் தேவைப்படும் தவணை அறிக்கைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கெனவும் விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபையின் வரி அறவிடும் கருமங்களுக்கெனத் தவணை அறிக்கைகளையும், தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் துணை விதி என அழைக்கப்படும்.

04. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள, வரி விதிப்புக்கு உட்படும் எல்லா வர்த்தக, கைத்தொழில் அமையங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு முறைகளுக்கமைய வருடாந்தக் கணக்கு அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

05. குறித்த கருமங்கள் தொடர்பாகச் செயலாளரால் காலத்துக்குக் காலம் வேண்டப்படும் அனைத்து வர்த்தகத் தகவல்கள் மற்றும் பெறுகைகள் பற்றிய அறிக்கைகள் என்பவை கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

06. குறித்த கருமங்கள் தொடர்பாகச் செயலாளரால் காலத்துக்குக் காலம் வேண்டப்படும் அனைத்து வர்த்தகத் தகவல்கள் பற்றிய அறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டுச் சான்றளிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

07. மேற்குறித்த 05 ஆவது துணை விதியின் கீழ் முன்வைக்கப்படும் அனைத்து நிதித் தகவல்களும் பெறுகைகள் பற்றிய அறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டுச் சான்றளிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

08. இந்தத் துணை விதியின் கருமங்களுக்கெனச் செயலாளரால் விடுக்கப்படும் அறிவித்தல் கிடைத்த எவரேனும், குறித்த அறிவித்தல் தமக்குக் கிடைத்த 14 நாட்களுக்குள் அதில் வேண்டப்பட்டுள்ள தகவல்களைச் செயலாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

09. மேற்காட்டிய 08 ஆவது துணை விதியின் கீழ் வேண்டப்படும் தகவல்களை வழங்கும் எவரேனும் தாம் வழங்கும் தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் திருப்திப்படுதல் வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் பிழையான தகவல்களை வழங்குவது கூடாது.

10. இந்தத் துணை விதியின் கீழ் கேட்கப்படும் தவணை அறிக்கைகளையும் தகவல்களையும் பரிசீலிப்பதற்குத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில், உரிய வர்த்தக நிலையம், தொழிற்சாலையின் வளவுக்குள் வந்து செயலாளர் அல்லது குறித்த கருமங்களுக்கென அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரால் குறித்த ஏடுகளின் மெய்த்தன்மையைப் பரிசீலிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

11. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும். ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

12. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற்பதங்களின் விளக்கம் :

'செயலாளர்' என்பது, பிரதேச சபையின் செயலாளராகச் செயற்படுபவர் அல்லது அந்தப் பதவியில் கடமையாற்றும் அலுவலரையும்,

'சபை' என்பது, பிரதேச சபையையும் குறிப்பிடும்.

'நபர்' என்பது, தனியாள் ஒருவரையோ, தனியாள் சபையொன்றையோ, நிறுவனம் ஒன்றையோ அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றையோ குறிக்கும்.

**பீடைதரும் வியாபார முயற்சிகள், அபாயகரமான வியாபார முயற்சிகள் பீடைதரும் மற்றும் அபாயகரமான வியாபார முயற்சிகள் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (ix) (ஒ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் பீடைதரும் வியாபார முயற்சிகள் மற்றும் பீடை தரும் அபாயகரமான வியாபார முயற்சிகள் மற்றும் பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சிகளை முறைப்படுத்துவது, மேற்பார்வை செய்வது, கட்டுப்படுத்துவது மற்றும் கட்டணம் அறவிடுவது பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் பீடைதரும் வியாபார முயற்சிகள், அபாயகரமான வியாபார முயற்சிகள் மற்றும் பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சிகளை முறைப்படுத்துவது, மேற்பார்வை செய்வது, கட்டுப்படுத்துவது மற்றும் கட்டணம் அறவிடுவது பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

04. பிரதேச சபையின் தலைவரால் இதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீதல்லாது எந்தவொரு நபரும் பிரதேச சபை எல்லைக்குள் முதலாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பீடைதரும் வியாபார முயற்சிகள் அல்லது பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சிகளை நடத்திச் செல்லல் கூடாது.

05. ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அவ்வாறான ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் அது எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ குறித்த அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை செல்லுபடியாகும்.

06. வியாபார முயற்சியின் சுற்றுச் சூழலிலும், குறித்த கருமத்துக்கெனப் பயன்படுத்தப்படும் நிலையான கட்டடம் ஏதும் இருப்பின் அந்தக் கட்டடம் பிரதேச சபையின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். குறித்த கட்டடத்தில் பன்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவன்றி, எந்தவொரு நபரும் பீடைதரும் வியாபார முயற்சி அல்லது அபாயகரமான வியாபார முயற்சி மற்றும் பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சியொன்றை நடத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

(அ) வளவு நல்ல மறுசீரமைப்புச் செய்த நிலையிலும், நல்ல காற்றோட்ட வசதியுடன் வெளிச்சம் பெறும் வகையிலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையைத் திறந்ததும் அதன் தரையளவின் பதினைந்தில் ஒரு பகுதிக்குக் குறையாத அளவில் யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு அறையினதும் சுவர்களில் எல்லாப் பகுதிகளதும் உயரம் 2.14 மீற்றருக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். செங்கல், கருங்கல், கபொக்கல் அல்லது சிமெந்துக்கல் போன்றவற்றினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். சுவர்களின் உட்பகுதி தரைமட்டத்திலிருந்து குறைந்தது 2 மீற்றர் உயரத்துக்குச் சிமெந்துச் சுதை பூசப்பட்டு எஞ்சிய பகுதியில் சுண்ணாம்புச்சுதை தடவப்பட்டு வெள்ளையடிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு கூரையின் மூலையும் தரைமட்டத்திலிருந்து 2 மீற்றரை விடக் கூடிய உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) மேற்கூரை ஏதும் நிலையான பொருளைக் கொண்டு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) அரிமரங்கள் அனைத்தின் மீதும் எண்ணெய்ச் சாயம் அல்லது சுண்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) முழுத் தரையும் சிமெந்தினால் அல்லது பீங்கான் தரையோடுகளால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) வளவு போதியளவு நீர் வடிந்தோடும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) வளவு சுகநலக் குப்பைத் தொட்டிகளுடனும் போதுமான அளவில் மலகூட வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் தமது வியாபார முயற்சியைத் தொடருவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் துர்நாற்றம் வராது அல்லது ஏனைய பீடைகள் உண்டாகாதவாறு களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

08. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் பீடைகளை ஏற்படுத்தும் அல்லது துர்நாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படும் பொருட்களைப் பொது இடங்களிலோ அல்லது வீதிகளிலோ கொண்டு செல்லும்போது பீடைகள் ஏற்படாதவாறு மூடிமறைத்து, உறிஞ்செடுக்க முடியாத கொள்கலன்களில் இட்டு எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

09. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் உற்பத்திச் செயன்முறையின்போது வெளியேற்றப்படும் பீடைதரும் ஆவி அல்லது வாயு அங்கு பரவிச் செல்லும்போது பாதிப்பையோ அல்லதுத பீடையையோ ஏற்படுத்தாத வகையில் அவற்றை உயரத்தில் வளிமண்டலத்தில் விடுவித்தல் வேண்டும். இன்றேல், தீயினாலோ உருகக்கூடிய உபகரணத்தின் ஊடாகவோ அவற்றை அகற்றுதல் வேண்டும்.

10. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடாத்திச் செல்லும் வளவுக்குள் போதியளவு வடிகான்களை அமைத்து அவற்றை நன்கு பராமரித்தும் நாளாந்தம் கழுவியும் வருதல் வேண்டும்.

11. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் மனைத்தளத்தை உறுதியான பொருளினால் நிருமாணித்தல் வேண்டும். மேலும் நல்ல மறுசீரமைப்புச் செய்தும் பராமரிப்புச் செய்தும் நாளாந்தம் சுத்தம் செய்தும் வருதல் வேண்டும்.

12. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் காலத்துக்குள் வருடாந்தம் வளவுக்கு வெள்ளையடித்தல் வேண்டும்.

13.ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியின்போது பயன்படுத்தும் பாத்திரங்கள், கருவிகள் போன்ற அனைத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் கழிவுப்பொருட்கள், கூட்டிப் பெருக்கும் துகள்கள், குப்பைகள் என்பவற்றுடன் வெளியேற்றப்பட்ட பொருட்கள், துணை உற்பத்திகள் என்பவற்றை உடனடியாகத் தமது தொழில் முயற்சியில் ஈடுபடுத்துவதில்லையெனில், அவற்றை மூடப்பட்ட பாத்திரங்களில் இட்டுப் பிரதேச சபை நியதிக்கமைய நாளாந்தம் வெளியேற்றுதல் வேண்டும்.

15. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தோல் அல்லது ஏனைய பொருட்களைக் கழுவ அல்லது ஊறவைக்கப் பயன்படுத்தும் தாங்கியிலிருந்து துர்நாற்றம் வீசுவதைத் தவிர்ப்பதற்காகத் தேவைக்கேற்றவாறு அவற்றை வெளியேற்றிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

16. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் ஆற்றிலோ அல்லது தண்ணீர் செல்லும் வழியிலோ, நீரோடையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ அல்லது ஒரு வடிகானிலோ ஏதும் அழுக்கான துர்நாற்றம் வீசும் அல்லது பீடைதரும் தண்ணீரையோ அல்லது திரவத்தையோ அனுப்புவதும் வடியச்செய்வதும் அல்லது பீடைதரும் திரவத்தின் மூலம் கழுவுவதும் அல்லது வேறு வழிகளில் ஆற்றிலோ தண்ணீர் வடிந்தோடும் வழியிலோ, நீர்நிலையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ, வடிகானிலோ அல்லது திறந்த நீர்ப்பிரதேசத்திலோ இட்டு அசுத்தமடையச் செய்தல் கூடாது.

17. தலைவர் அல்லது அந்தக் காரியத்தைச் செய்யப் பொதுவாகவோ விசேடமாகவோ அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலரால் கடமை நேரத்தில் பீடைதரும் தொழில் முயற்சி அல்லது அபாயகரமான தொழில்முயற்சி அல்லது அபாயகரமான பீடைதரும் தொழில்முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் பிரவேசித்துப் பரீட்சித்துப் பார்ப்பது சட்டபூர்வமானதாக அமையும். மேலும் அனுமதிப்பத்திரதாரி அல்லது அவரது நிருவாகத்துக்குப் பொறுப்பாக இருப்பவர் அவ்வாறான பரிசீலனைக்கு இடமளித்தல் வேண்டும்.

18. அனுமதிப்பத்திரத்துக்குரிய வளவொன்று இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கவில்லையெனப் பரிசீலனையின்போது காணப்படும் சந்தர்ப்பங்களில், உரிய வளவு இந்தத் துணைவிதிகளுக்கு அமைவானதாக ஆக்கப்படுவதற்குச் செய்யப்படவேண்டியவற்றை உரிய காலத்துக்குள் மேற்கொள்ள வேண்டுமென அனுமதிப்பத்திரதாரிக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றை வழங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. மேலும், குறித்த அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரதாரி செயற்படுதல் வேண்டும். அவ்வாறு செயற்படாதவிடத்து, அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த அனுமதிப்பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக ஆக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

19. இந்தத் துணைவிதிகளின் கீழ் ஏதேனுமொரு தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கெனத் தம்மிடம் ஒருவர் முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தை அது கிடைத்த 30 நாட்களுக்குள் குறித்த வளவு இந்தத் துணை விதிகளுக்கு அமைவாக உள்ளதெனின், அனுமதிப்பத்திரத்தை வழங்குவதும், அல்லது நிராகரிப்பதெனின் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரிக்கு அறிவிப்பதும் தலைவரது கருமமாகும்.

20. ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரதாரியும் தமது அனுமதிப்பத்திரத்தையும் அனுமதிப்பத்திரத்துக்குரிய கைத்தொழிலிலோ அல்லது தொழிலிலோ ஈடுபட்டுள்ள ஊழியர்களது பெயர், முகவரிகளைச் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் காட்டும் பட்டியலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நிலையத்தில் பகிரங்கமாகத் தெரியும் வண்ணம் தொங்கவைக்கச் செய்தல் வேண்டும்.

21. இந்தத் துணைவிதியின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு அறிவித்தலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உரிமையாளர் அல்லது அந்த நிலையத்தின் பொறுப்பாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஒருவர் இல்லாத பட்சத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பகிரங்கமாகத் தென்படும்படி தொங்கவிடப்பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

22. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் தொடர்ந்தும் அறிவித்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் அதிகாரத்தின் (2) ஆவது உப பிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

23. சொற்பதங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத்துணை விதிகளில்,

'சபை' என்பது, பிரதேச சபையையும்,

'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

'பிரதேச சபைப் பிரதேசம்' என்பது, பிரதேச சபையின் நிருவாகத்துக்கு உட்பட்ட எல்லையையும்,

'அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலர்' என்பது, தலைவரால் இந்தத் துணைவிதியை, செயற்படுத்துவதற்கென அதிகாரம் வழங்கியுள்ள அலுவலர் அல்லது அலுவலர்களையும்,

'அனுமதிப்பத்திரதாரி' என்பது, இந்தத் துணைவிதியின் கீழ் தொழில் முயற்சியை நடத்திச் செல்வதற்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் ஒருவரையும்,

'நபர்' என்பது, கூட்டுச்சேர்க்கப்பட்ட அல்லது அவ்வாறு செய்யப்படாத ஆட்கள் குழுவையும்

'நிருவாகப் பொறுப்பாளர்' என்பது, பொறுப்பாளர், பாதுகாப்பாளர், சொத்துக்களைப் பாதுகாப்பவர், முகாமையாளர் அல்லது ஏதேனும் ஒருவருக்காகக் குறித்த ஒரு தொழில் முயற்சியின் ஏற்பாடு, நிருவாகம், அல்லது முகாமை சாட்டப்பட்டுள்ள ஒருவரையும்,

'வியாபாரம்' என்பது, ஒரு பொருளை அல்லது பண்டத்தை உற்பத்தி செய்வதையும் அல்லது விற்பனைக்காக ஆயத்தம் செய்வதையும் அல்லது ஒன்றுசேர்ப்பது அல்லது வியாபார நோக்கில் நடத்திச் செல்வதையும் குறிக்கும்.

**அட்டவணை - 01**

**பீடைதரும் தொழில் முயற்சிகள்**

01. உரம் அல்லது இரசாயனப் பசளை வகையை உற்பத்தி செய்வது அல்லது களஞ்சியப்படுத்த வைப்பது.
02. தோல் பதனிடுதல்
03. தோல் விற்பனை செய்வது
04. கால்நடை வளர்ப்பு (இறைச்சிக்காக, பாலுக்காக, முட்டைக்காக)
05. புகைப்பட நிலையமொன்றை நடத்துதல்
06. கால்நடை மருந்தகம் நடத்துதல்
07. விற்பனைக்காகப் பழுதடைய இடமுள்ள உணவுவகைகளையோ அல்லது உணவுப்பொருட்களையோ களஞ்சியப்படுத்தி வைத்தல்.
08. கருவாடு, உப்புமீன் அல்லது ஜாடி 150 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
09. சிரட்டைக்கரி அல்லது விறகுக்கரி தயாரித்தல் அல்லது கரியைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
10. புகையிலை பதப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்துதல்
11. விலங்குணவு உற்பத்தியும் விலங்குணவுக் களஞ்சியமும் நடத்துதல்.
12. புண்ணாக்கு தயாரிப்பு அல்லது 200 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
13. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்
14. விலங்குகளின் எலும்பு அரைப்பது அல்லது வைத்திருப்பது
15. புதிய அல்லது பழைய உலோகங்களைக் களஞ்சியம் செய்து வைத்திருத்தல்
16. உலோகக் கழிவுப்பொருட்களின் களஞ்சியம் நடத்துதல்.
17. வீட்டுத் தளபாட உற்பத்தியும் களஞ்சியமும் நடத்துதல்.
18. பிரம்புப் பொருட்கள் தயாரிப்பு
19. தச்சுத் தொழிற்கூடம் நடத்துவது
20. பழப்பாகு அல்லது பானம் தயாரித்தல்
21. இனிப்பு வகைகள் தயாரித்தல்.
22. தென்னை மட்டையை ஊறவைத்தல் (அவியச் செய்தல்).
23. துரிகை தயாரித்தல் (பற்துரிகை தவிர்ந்த).
24. பற்துரிகை உற்பத்தி.
25. கள் வடித்தல்.
26. வினாகிரித் தயாரிப்பும் களஞ்சியமும்.
27. பொறிமுறையினாலோ அல்லது கையினாலோ மரம் கிழிக்கும் நிலையம் நடத்துதல்
28. புச்சு மை, வார்ணிஷ் அல்லது டிஸ்டெம்பர் சாயம் அல்லது 100 லீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்.
29. சோடா உற்பத்தி
30. தொல்பொருட்கள் தயாரிப்பு
31. பழவகை, மீன் அல்லது ஏனைய உணவுவகைகளைத் தகரத்தில் அடைத்தல்
32. மிளகாய், கோப்பி, தானியங்கள், அவரைப்பயிர்கள், கறிச்சரக்குப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் ஆலையை நடத்துதல்.
33. மெழுகுதிரி உற்பத்தி செய்தல்.
34. கற்பூர உற்பத்தி
35. எழுத்துமை, அச்சுமை, ஸ்டென்சில் மை தயாரிப்பு.
36. ஆடை கழுவும் நீலத் தயாரிப்பு.
37. அரக்கு உற்பத்தி
38. வாசனைத் திரவியங்களின் உற்பத்தியும் களஞ்சியமும்.
39. பாடசாலை வெண்கட்டித் தயாரிப்பு
40. டயர் அல்லது டியூப் 30 இலும் அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
41. டயர் மீள் நிரப்புதல்

42. டயர், டியூப் வொல்கனைசுப்படுத்தும் நிலையம் நடத்துதல்
43. 1000 கிலோகிராமுக்கு அதிகமாகச் சிமெந்து களஞ்சியம் நடத்துதல்
44. சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டோஸ் சீமெந்துப் பொருட்கள் தயாரித்தல்
45. பிளாத்திக் பொருட்கள் உற்பத்தி
46. விசைத்தறி நிலையம் நடத்துதல்
47. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இட்டுவைத்த கோணிப்பைகளைச் சுத்தமாக்கி விற்பனை செய்தல்
48. பொறிமுறையில் சிமெந்து அச்சுக்கல் தயாரித்தல்
49. தானியங்கள் அல்லது அவரையினங்களில் 250 கிலோகிராமைவிட அதிக அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்

## அட்டவணை - 02

**அபாயகரமான தொழில் முயற்சிகள் :**

01. மொத்த வியாபாரத்துக்கென மா, உப்பு, சீனி என்பவற்றை 750 கிலோகிராமைவிட அதகிமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
02. தைத்த ஆடைகள் தயாரிப்பு
03. அச்சகம் ஒன்றை நடத்துதல்
04. 100 இற்கு மேற்பட்ட கோழிகளைக் கொண்டுள்ள கோழிக்கூடு அல்லது கோழிப்பண்ணை நடத்துதல்
05. 10 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஆடு, பன்றிக் கொட்டில் அல்லது பண்ணையை நடத்துதல்
06. செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்தி வைத்தல்
07. விறகுக் களஞ்சியம் நடத்துதல்
08. இயந்திரத்தினால் அல்லது கையினால் கருங்கல் அகழ்தல் அல்லது உடைத்தல்
09. குளிர்பான உற்பத்தி அல்லது 100 இற்கும் மேற்பட்ட குளிர்பான போத்தல்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
10. ஐஸ்கிரீம் தயாரிப்பு
11. தேங்காயெண்ணெய்த் தயாரிப்பு அல்லது 300 இலீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்
12. தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசினுக்கு மேற்பட்ட அளவில் களஞ்சியம் செய்தல்
13. தும்பு அல்லது ஏனைய நார்களால் பொருட்கள் செய்வதும் களஞ்சியப்படுத்துதலும்
14. பாவிக்கப்பட்ட உடுதுணி வகைகளைக் களஞ்சியப்படுத்துதல்
15. தங்க நகைத் தயாரிப்பும் திருத்த வேலையும்
16. பொறிமுறை மூலம் மரம் அரிதல்
17. பொறிமுறைப் பட்டறை வேலைத்தலம் நடத்துதல்
18. வெற்றுக் கோணிப்பை, வெற்றுப்போத்தல் களஞ்சியம் நடத்துதல்
19. மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலைத்தலம்
20. பழைய பேப்பர் களஞ்சியம் நடத்துதல்
21. விசிறும் சாயம் - ஸ்பிறே பெயிண்டிங் - பூசும் நிலையம் நடத்துதல்
22. வானவேடிக்கை மற்றும் பட்டாசுக் களஞ்சியம் நடத்துதல் அல்லது தயாரித்தல்
23. தேங்காயெண்ணெய் தவிர ஏனைய காய்கறி எண்ணெய் 50 இலீற்றரைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்துதல்
24. குளிரூட்டிய இறைச்சி, மீன் களஞ்சியம் நடத்துதல்
25. அரிமரக் களஞ்சியம் நடத்துதல்

## அட்டவணை - 03

**பீடைதரும் மற்றும் அபாயகரமான தொழில் முயற்சிகள் :**

01. இரசாயனங்களைப் பயன்படுத்தி கறுவா, ஏலம், கராம்பு அல்லது நார் வகைகளைப் பதப்படுத்துதல்
02. சாயமூட்டுதல் அல்லது உலர் சலவை செய்தல்
03. துணி அச்சிடுதல் அல்லது சாயமூட்டுதல்
04. மின்னியல் முலாம் பூசும் நிலையம் நடத்துதல்
05. சுண்ணக்கல் அல்லது முருகைக்கல் சுடுதல், தயாரித்தல் அல்லது நீற்றுச் சுண்ணக் களஞ்சியம் நடத்துதல்
06. பற்றரி மின்னேற்றம் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் நிலையம்
07. மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் நடத்துதல்
08. மோட்டார் வாகனம் சேர்விஸ் பராமரிப்பு நிலையம் நடத்துதல்
09. வார்ப்பு வேலைத்தலம் நடத்துதல்
10. தகர வேலைத்தலம் நடத்துதல்
11. திரவவாயுக் கொள்கலன் களஞ்சியம் நடத்துதல்
12. ஆயுர்வேத மருந்து, தேசிய மருந்துகள் தயாரிப்பு அல்லது கலவை செய்தல்

13. கண்ணாடியும் கண்ணாடித் தகடும் களஞ்சியப்படுத்ததல்
14. பிளாத்திக் அல்லது கண்ணாடியிழைத் தொழிற்சாலை நடத்துதல்
15. 150 கிலோகிராமைவிட அதிகமாக தேயிலைத்தூள் களஞ்சியம் நடத்துதல்
16. காய்ச்சி ஒட்டும் வேல்டிங் பட்டறை நடத்துதல்.
17. கடைசல் பட்டறை நடத்துதல்
18. பெற்றோல், தீசல் எண்ணெய் அல்லது ஏனைய கனியநெய் வகைகளின் களஞ்சியம் நடத்துதல்
19. விவசாய இரசாயனப்பொருட்கள் தயாரிப்பும் களஞ்சியமும்
20. வளிசீராக்கி, குளிரூட்டி, அதிகுளிரூட்டி திருத்தவேலை நிலையம்
21. மின்னியல் தொழில் அல்லது மின் உபகரணங்கள் தயாரிப்பு அல்லது திருத்தவேலை நிலையம் நடத்துதல்
22. பால் குளிரூட்டும் நிலையம் நடத்துதல்

### மீன் விற்பனை தொடர்பான துணை விதி

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (ix) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் மீன் விற்பனையை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கெனக் கட்டணங்களை அறவிடுவதற்கென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் மீன் விற்பனை செய்வது தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.

04. பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் எவரேனும் ஒருவர், பிரதேச சபையின் தலைவரால் இந்தத் துணை விதியின் கீழ் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி மீன் விற்பனை செய்வதற்கென எந்த இடத்தையும் பயன்படுத்துதல் கூடாது.

05. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைச சபையிலிருந்து பெற்று விண்ணப்பித்தல் வேண்டும். இதற்கென அறவிடப்படவேண்டிய கட்டணத்தைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்தல் வேண்டும்.

06. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென மீன் விற்பனை நிலையங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவல்லாது, தலைவரால் எவருக்கும் மீன் விற்பனை செய்வதற்கான நிலையமொன்றை நடத்திச் செல்வதற்கென அனுமதிப்பத்திரம் வழங்குதல் கூடாது.

(அ) தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துக்கு அமைவான நிருமாணமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விற்பனைக்காக மீன்கள் வைக்கப்பட்டுள்ள பிரிவு பீங்கான் செங்கற்களால் அல்லது சீமெந்துப் பூச்சு மெழுகினால் அல்லது கறை படியாத உலோகத்தினால் அமைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(இ) மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடத்தின் தரையும், களஞ்சிய நிலையத்தின் தரையும் சீமெந்துப் பூச்சினால் அல்லது பீங்கான் செங்கற்களால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) கழிவு நீர் வழிந்தோடுவதற்கென உள்ள வடிகான் தேவையான அளவு சரிவைக் கொண்டதாகவும், சிமெந்துப் பூச்சினால் அல்லது பீங்கான் செங்கற்களால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவடிகான் ஊடாக வடிந்தோடும் கழிவுநீர் ஏதேனும் பொது நீர் வாய்க்காலுடன் சேர்ந்துவிடுவதைத் தவிர்ப்பதற்கெனப் போதிய அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த கழிவுநீரை உறிஞ்செடுக்கக்கூடிய குழியொன்றில் வழிந்தோட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) கழிவுநீர் வழிந்தோட வழிசெய்யப்பட்டுள்ள உறிஞ்சியெடுக்கப்படும் குழிகள் வெளியில் திறந்துவிடப்பட்டிருத்தல் கூடாது.

(எ) மீன் விற்பனை நிலையத்திலிருந்து கழிக்கப்படும் உயிரியற் கழிவுகளை இட்டுவைப்பதற்கெனப் போதியளவில் கெள்கலன்களை வைத்திருப்பதுடன், நாளாந்த வர்த்தக நடவடிக்கைகள் முடிந்தவுடன் குறித்த கழிவுகளைத் தரையின் மேற்பரப்பிலிருந்து குறைந்தது 0.5 மீற்றர் ஆழத்தில் புதைத்துவிடுதல் அல்லது பிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்துச் செயற்படுத்தும் வகையில் அகற்றிவிடுதல் வேண்டும்.

(ஏ) நிலையத்தில் பணியாற்றுவோரது பயன்பாட்டுக்கெனப் போதியளவு நீரடைப்பு மலகூட வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மலகூடப் பாவனையின் பின்னர் பயன்படுத்துவதற்கெனப் பொருத்தமான சுகநலப் பாதுகாப்பு முறைகளும் பொருட்களும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள எந்தவொரு மீன் விற்பனை நிலையத்தினதும் நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில் குறித்த நிலையத்தின் தரையையும், சுவர்களில் பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டுள்ள அல்லது சீமேந்துப்பூச்சு செய்யப்பட்டுள்ள பகுதியையும், மீன்களை வெட்டுவதற்கெனப் பயன்படுத்தும் மரக்குற்றியையும், உபகரணங்களையும், மீன்விற்பனைக்கென காட்சிப்படுத்தப்படும் இடங்களையும் கிருமியழிப்புத் திரவம் கொண்டு கழுவிச் சுத்தம் செய்வித்தல் வேண்டும்.

08. மீன் விற்பனை நிலைய ஒவ்வொரு அனுமதிதாரியும் தமது நிலையத்தின் ஒவ்வொரு பகுதியையும் அதனைச் சூழவுள்ள வடிகான்களையும் மீனைக் களஞ்சியப்படுத்தவும் விற்கவும் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு பொருளையும் உபகரணத்தையும் நன்கு திருத்தியமைத்து உரிய முறையில் பராமரித்து வருவதுடன் துர்நாற்றம் வீசாதவகையில் வைத்திருத்தல் வேண்டும்.

09. நாளாந்த விற்பயை நடவடிக்கைகளின் பின்னர் விற்பனை செய்யாது எஞ்சியுள்ள மீன்களை அதிகுளிரூட்டியில் களஞ்சியம் செய்தல் வேண்டும். அடுத்த நாள் விற்பனை நிலையத்தை திறக்கும் சந்தர்ப்பம் வரை அதிகுளிரூட்டி சரியான முறையில் தொடராகச் செயற்பட்டாலன்றி, எஞ்சிய மீன்களை விற்பனைக்கெனக் காட்சிப்படுத்துதலோ அதிகுளிரூட்டியில் வைத்திருத்தலோ அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையத்தில் வைத்திருத்தலோ கூடாது.

10. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தன் வர்த்தக நிலையத்தை எலிகள், நாய்கள், பூனைகள் அல்லது கிருமிகள் போன்ற எந்தப் பிராணிகளும் இல்லாத இடமாக வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் பெற்ற மீன் விற்பனை நிலையமொன்றில் மீன்களை வைத்திருக்கவோ அல்லது தயார் செயவதற்கோ அல்லது விற்பனைக்கோ பயன்படுத்தும் உபகரணங்கள், பாத்திரங்கள் தவிர வேறெந்தப் பொருட்களையோ, பண்டங்களையோ, உடைகளையோ அல்லது படுத்துறங்கும் பாய்களையோ விற்பனை நிலையத்தில் வைத்திருத்தல் கூடாது.

12. அனுமதிப்பதிதிரம் பெற்றுள்ள ஒரு நிலையத்தில்,

(அ) ஏதும் சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அந்நோயினால் பீடிக்கப்பட்டிருந்த நோயாளியை பராமரிக்கும் ஒருவர், குறித்த தொற்றுநோயின் பரவுகாலம் கடந்திருந்தாலொழிய, எந்தவொரு மீன் விற்பனை நிலையத்திலும் எவ்விதத்திலேனும் மீன் விற்பனை செய்தல், மீன் விற்பனை செய்பவருக்கு உதவுதல், அல்லது உதவ வைத்தல் அல்லது எவ்விதக் கருமத்திலும் ஈடுபடுதல், ஈடுபடுத்துதல் அல்லது ஈடுபட வைத்தல் கூடாது.

(ஆ) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணிந்துள்ளவரல்லாத எந்தவொரு நபரும் விற்பனை நிலையத்தில் எவ்வகையான கருமத்திலும் ஈடுபடவோ அல்லது ஈடுபடுத்தவோ இடமளித்தல் கூடாது.

(இ) மீன் விற்பனை நிலையத்தில் சேவையில் ஆடைகளை அணிந்துள்ளவரல்லாது, எந்தவொரு நபரும் குறைந்தது வருடத்தில் ஒரு தடவையேனும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியினதும் கருமமாக இருத்தல் வேண்டும்.

13. மீன் விற்பனை நிலையமொன்றில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் முகமூடி, கையுறை போன்ற அனைத்துப் பாதுகாப்பு அணிகலன்களை வழங்குவதும், குறித்த ஊழியர்கள் மீன் விற்பனையில் ஈடுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பாதுகாப்பு அணிகலன்களைத் தரித்திருப்பதை உறுதிப்படுத்துவதும் அனுமதிப்பத்திரதாரியின் கருமமாகும்.

14. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரதும் பயன்பாட்டுக்கென சவர்க்காரம் அல்லது திரவச் சவர்க்காரம் வைத்திருப்பது அனுமதிப்பத்திரதாரியிரன் கருமமாகும்.

15. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏதேனுமொரு மீன் விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்கெனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது உட்பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மீன் வகையொன்றின் மாதிரியை, அதன் விலையைக் கொடுத்து வாங்கிக்கொள்வது சட்டபூர்வமானதாக இருப்பதுடன், அனுமதிப்பத்திரதாரி குறித்த கொள்வனவை மறுக்கவோ அல்லது தடுக்கவோ செய்தல் கூடாது.

16. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ள இடத்தில் சேரும் கழிவுப்பொருட்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டாலொழிய, குறித்த கழிவுப்பொருட்கள்,

(i) உயிரியற் கழிவுகள்;
(ii) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த கழிவுகள்;
(iii) பொலித்தின் அல்லது பிளாத்திக் பொலித்தின் அல்லது பிளாத்திக் சார்ந்தவை.

எனத் தரம் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொரு கழிவையும் இட்டுவைக்கத் தயாரிக்கப்பட்டுள்ள வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் அவற்றை இட்டு வைக்கச் செய்வது அனுமதிப்பத்திரதாரியின் கருமமாகும்.

(ஆ) மேற்காட்டிய (அ) பந்தியின்படி வகையீடு செய்யப்பட்டுக் கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடப்பட்டுள்ள கழிவுகள் பிரதேச சபையின் கழிவுப்பொருள் முகாமைத் திட்டத்துக்கமைய வெளியேற்றச் செய்தாலொழிய, தலைவரால் இதற்கென விதிக்கப்படும் முறையில் இறுதியாக அகற்றிவிடச் செய்தல் வேண்டும்.

17. இந்தத் துணை விதியின் ஏற்பாடுகளைப் பரிசோதிக்கவெனத் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது குறிப்பிட்ட காலம் என்பது மீன் விற்பனை நிலையத்தில் மீன் விற்பனை செய்யப்படும் எந்தவொரு நேரத்தையும் குறிப்பிடும்.

18. இந்நத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரதாரிக்கு வழங்கப்பட்டடுள்ள ஏதேனுமொரு மீன் விற்பனை நிலையத்தை நடத்திச் செல்லும் நிலையம், 6 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நியமத்துக்கமைய அமைந்திருப்பது முடிவடையுமெனின், அல்லது இந்தத் துணை விதியின் அல்லது வேறேதும் துணை விதியின் நியமங்களுக்கு எதிராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தினத்துக்கு முன்னர் குறித்த நிலையம் அந்த நியமங்களுக்கு அமைவான நிலைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்தையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரியை விதிப்பதற்கான அறிவித்தலைத் தலைவர் கையளிக்கச் செய்தல் வேண்டும்.

19. 18 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த ஒரு அனுமதிப்பித்திரதாரி, அறிவித்தலில் குறித்துரைக்கப் பட்டுள்ள தினத்துக்கு முன்னர் அதிலுள்ள நியமங்களைக் குறிப்பட்டுளவாறு செயற்படுத்துதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான அம்சங்களை எழுத்துமூலம் முன்வைக்கும் சந்தர்ப்பத்தில், குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்புச் செய்யத் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். எனினும், அவ்வாறு நீடிப்புச் செய்யப்படும் கால எல்லை பதினான்கு நாட்களைத் தாண்டுதல் கூடாது.

20. 18 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த திகதிக்கு முன்னர் அல்லது நீடிப்புச் செய்யப்பட்ட தினத்துக்கு முன்னர் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுதலைத் தவறவிடும் சந்தர்ப்பத்தில் குறித்த நிலையத்துக்கென வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைத் தலைவர் இரத்துச் செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

21. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

22. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற் பதங்களின் விளக்கம் :

" சபை" என்பது, பிரதேச சபையயம்,
"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
"பிரதேச சபைப் பிரதேசம்" என்பது, பிரதேச சபை கூட்டிணைக்கப்பட்ட நிருவாகப் பிரதேசம் என்பதையும் குறிப்பிடும்.

**பிரதேச சபைகளின் சந்தைகள் தொடர்பான துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (xii) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளின் நிருவாக எல்லைக்குள் பிரதேச சபையின் மூலம் நடத்தும் சந்தைகளை முறைப்படுத்துதலுக்கென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது சந்தைகள் பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

04. பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்துக்குள் நடத்தப்படும் சந்தைகள் தொடர்பில், ஒவ்வொரு சந்தைக்கும் உரிய எல்லைகள் (இங்கு இதன் பின்னர் சந்தை நிலம் என அழைக்கப்படுகின்ற) சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து வெளியிடப்படுதல் வேண்டும்.

05. பிரதேச சபையின் மூலம் நடத்தப்படும் சந்தைகள் வாரத்தில் நடத்தப்படும் நாட்கள் மற்றும் நேரம் என்பவற்றைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்து வெளியிடப்படுதல் வேண்டும்.

06. சபையினால் தீர்மானிக்கப்பட்டுச் சந்தையை நடத்திச்செல்வதற்கென ஒப்பந்தமொன்றின்படி செயற்படும் சந்தர்ப்பத்தின்போது அல்லாது, எவரேனும் ஒருவர் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் மீதல்லாது சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

07. மேற்குறித்த 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணமொன்றைச் சபை காலத்துக்குக் காலம் சபையில் பிரேரணையொன்றை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்தல் வேண்டும்.

08. சந்தை நிலத்துக்குள் அந்தந்தப் பொருட்களின் விற்பனைக்கென ஒதுக்கப்பட்டுள்ள எல்லைக்குள் மட்டுமே குறித்த பொருட்களது விற்பனையை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், சந்தை நிலத்துக்குள் எவரும் திரிந்து சென்று வியாபாரம் செய்யக் கூடாது.

09. சந்தைப் பிரதேசத்துக்குள் பின்வரும் எந்தச் செயற்பாட்டையும் மேற்கொள்வது கூடாது.

(அ) பொதுமக்கள் பொருட்களை வாங்குவதற்கென நடந்து செல்ல ஒதுக்கப்பட்டுள்ள வழிகளில் பொருட்களை விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல் அல்லது ஏதும் பொருட்களை வைத்திருத்தல் கூடாது.

(ஆ) யாசகம் கேட்டல்

(இ) முறைகேடாக நடந்துகொள்ளல் அல்லது ஏனையோருக்கு எவ்வகையிலேனும் தொல்லை ஏற்படுத்துதல்.

(ஈ) சந்தைப் பகுதிக்குள் சமையல் வேலைகளை மேற்கொள்ளல்.

(உ) அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சந்தையை மூடிய பின்னரும் சந்தைப் பிரதேசத்தில் தரித்திருத்தல்.

(ஊ) பிரதேச சபையினால் அறவிட அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் தவிர்ந்த குத்தகையாளர் அல்லது அவரது பிரதிநிதியினால் அதனைவிடக் கூடிய தொகையை அறவிடுதல்.

(எ) சந்தைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள பொதுச் சொத்துக்களுக்கோ மற்றும் பிரதேச சபையின் சொத்துக்களுக்கோ அவற்றின் பகுதிகளுக்கோ சேதங்களை ஏற்படுத்துதல் அல்லது எவ்வகையிலேனும் பொருத்தமற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறான செயல்களைச் செய்ய ஊக்குவித்தல்.

(ஏ) சந்தை வளவுக்குள் அமைந்துள்ள நீர்க்குழாய்களில் துணி மற்றும் வாகனங்களைக் கழுவுதல் அல்லது நீராடுதல்.

(ஐ) அருவருக்கத்தக்க அல்லது தொடுகை மற்றும் தொற்றுநோயினால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளியொருவர் சந்தை வளவுக்குள் பண்டங்களை விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல், சந்தைக்குப் பண்டங்களைக் கொண்டுவருதல் அல்லது அது போன்ற நோயாளி ஒருவரைப் பராமரித்திருந்த நிலையில் சந்தையில் பண்டங்களை விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல் அல்லது பண்டங்களைக் கொண்டுவருதல்.

(ஒ) சுத்தமான தரம் இல்லாத பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்தல், அசுத்தமான நோய் பரவும் இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பண்டங்களை விற்பனை செய்தல், நம்பிக்கை உத்தரவாதமற்ற பொருட்களை விற்பனை செய்தல்.

(ஓ) சரியான அளவை, நிறுத்தற் கருவிகளைப் பயன்படுத்தாதிருத்தல்.

(ஔ) விலங்குகள், பறவைகளை வதை செய்தல், விலங்குகளைக் கொல்லுதல்.

(ஃ) சந்தை வளவுக்குள் வாகனங்களை அங்குமிங்கும் கொண்டு செல்லுதல் அல்லது தரிக்கச் செய்தல்.

(க) நச்சுப் பொருட்கள், எரிபொருட்கள் மற்றும் பொதுமக்களிடையே விற்பனைக்கென அனுமதிக்கப்படாத வெடிப்பொருட்கள், அழுகிய இறைச்சி மற்றும் மீன் விற்பனை செய்தல் அல்லது காட்சிப்படுத்துதல்.

(கா) விலங்கு மாமிசப் பகுதிகள், கழிக்கப்பட்ட விலங்குளின் பகுதிகள், குப்பை கூளங்கள், கூட்டிப் பெருக்கிய கழிவுகள் எவற்றையும் வடிகானில் அல்லது சந்தையில் அங்குமிங்கும் இட்டுவைத்தல்.

(கி) இரவு 10.00 மணியின் பின்னர் சந்தையை நடத்துதல்.

10. சந்தை நிலத்துக்குள் வியாபாரம் செய்யும் சந்தர்ப்பத்தில் சேரும் குப்பைகளை இலகுவாக அகற்றுவதற்கு ஏற்ற வகையில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அல்லாது எவரும் அவற்றை அங்குமிங்கும் இட்டுவைத்தல், சந்தைப் பிரதேசத்தை எவ்வகையிலேனும் அசுத்தப்படுத்துதல் என்பன கூடாது.

11. சந்தை வளவுக்குள் இந்தத் துணை விதிகளின்படி சந்தையின் வியாபார நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவா என்பதைப் பரிசோதிக்கவும், கண்காணிக்கவும் தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்கள் எந்த வேளையிலும் வருகை தருவது சட்டபூர்வமானதாக அமையும். அவ்வாறு செயற்படும் சந்தர்ப்பங்களின்போது அவர்களைத் தடுத்தல் அல்லது அதனைத் தவிர்க்கும் வகையில் எவரும் செயற்படுதல் கூடாது.

*12.* சந்தை நடத்தப்படும் குறித்த நாளில் 12 மணி நேரத்துக்கு உட்பட்ட காலத்தில் அல்லாது வியாபாரம் செய்வதற்கென வேறு நேரங்களில் எவரும் சந்தைக்குள் பிரவேசித்தல் கூடாது.

*13.* சந்தை வளவுக்குள் நிருமாணிக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள எந்தவொரு சொத்துக்கும் சேதம் ஏற்படும் வகையில் எவரும் எவ்வகையிலேனும் மேற்கொள்ளல் கூடாது.

*14.* இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமாளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

*15.* பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற் பதங்களின் விளக்கம்:

"சபை" என்பது, பிரதேச சபையையும்,

"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

**அலங்கரிப்பு செய்வதை முறைப்படுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதி**

*01.* இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (vii) (ஈ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

*02.* இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் அலங்கரிப்பு செய்வதை முறைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் மற்றும் கட்டணம் அறவிடுவதற்கும் என விதிக்கப்படுகின்றன.

*03.* இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் அலங்கரிப்புகளை முறைப்படுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

*04.* இந்தத் துணை விதியின் கீழ் பிரதேச சபைத் தலைவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரும் பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளிலும், பொது இடங்களிலும் அலங்கரிப்புச் செய்தல் கூடாது.

*05.* எந்தவொரு அலங்கரிப்புக்குமென அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்போது இந்தத் துணை விதியின் 01 ஆவது அட்டவணைக்கு அமைவான விண்ணப்பப் படிவமொன்றை அலங்கரிப்பு செய்வதற்குக் குறைந்தது 48 மணி நேர அவகாசத்துக்கு முன்னர் தலைவர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

*06.* விண்ணப்பப் படிவத்தை முன்வைத்த பின்னர் அலங்கரிப்பு செய்வதற்கென இந்தத் துணை விதியின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரமொன்றைத் தலைவர் வழங்குவார்.

*07.* அலங்கரிப்புக்கென எவ்வகையிலேனும் பொலித்தின் பயன்படுத்தப்படுதல் கூடாது.

*08.* இந்தத் துணை விதியின் கீழ் ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்தின் மீதும் அறவிடப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம், சபை காலத்துக்குக் காலம் தீர்மானங்கள் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் கட்டணமாக இருத்தல் வேண்டும்.

(அ) இந்தத் துணை விதிகளுக்கமைய ஒவ்வொரு அலங்கரிப்புக் கருமத்தின் பேரிலும் அதற்கெனச் சபை தீர்மானித்ததற்கமைய தொகையொன்றைச் சபையிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் பெற்ற எவரேனும் ஒருவர் மேற்கொள்ளும் அலங்கரிப்பை, அனுமதிப்பத்திரத்தில் அதனை அகற்றுவதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தின் 24 மணி நேரத்துக்குள் அகற்றவில்லையெனின், சபையின் மூலம் அது அகற்றப்பட்டு, அதற்கெனச் செலவிடப்பட்ட தொகையை வைப்புத்தொகையிலிருந்து அறவிட்ட பின்னர் ஏதும் பணம் எஞ்சியிருப்பின், அதனை வைப்பாளரிடம் மீளளிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

*09.* இந்தத் துணை விதிக்கமைய மேற்கொள்ளப்படும் அலங்கரிப்புக்கள் பிரதேசத்தின் வீதிச் சமிக்ஞைப் பலகைகள், பிரதேசத்தின் வரைபடங்கள், பெயர்ப்பலகைகள் தொலைபேசித் தூண்கள், மின்கம்பங்கள், பாலங்கள் என்பவற்றை மறைக்கும் விதத்திலோ அல்லது அவற்றைத் தடை செய்யும் விதத்திலோ மேற்கொள்ளப்படுதல் கூடாது.

10. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்பட்க்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும்,முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்சஅளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

11. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலான்றி இந்தத் துணை விதியின் சொற் பதங்களின் விளக்கம்:

"சபை" என்பது, பிரதேச சபையையும்,
"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும் குறிக்கும்.,
"அலங்கரிப்பு" என்பது, ஏதும் சம்பவத்தை அல்லது கருமத்தை நோக்காகக்கொண்டு செயற்கையான அல்லது இயற்கையான பொருட்களைக் கொண்டு குறித்த சம்பவம் அல்லது கருமத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கெனத் தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் தயாரிப்புகளும் ஆக்கங்களும் எனப்படும்.

**அட்டவணை - 01**

விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் :
02. தொலைபேசி இலக்கம் :
03. தேசிய அடையாள அட்டை இலக்கம்: (நிழற்படப் பிரதியை இணைத்தல் வேண்டும்)
04. அலங்கரிப்பு செய்யப்படும் விதியின் அல்லது பொது இடத்தின் பெயர் :
05. அலங்கரிப்பின் தன்மை :
06. அலங்கரிப்பின் காட்சிப்படுத்தும் கால எல்லை :
07. அலங்காரம் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பது :
08. அலங்காரத்தை அகற்றிக்கொள்ளும் திகதி :
09. அகற்றப்படுபவற்றை வெளியேற்றும் முறை :

பிரதேச சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய அலங்கரிப்பைக் காட்சிப்படுத்துவதற்கு இணங்குவதுடன், இது தொடர்பில் துணை விதி அல்லது அவற்றின் ஏதும் பந்திகள் மீறப்படுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

....................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :

**அலுவலகப் பயன்பாட்டுக்கு:**

தொழில்நுட்ப அலுவலரது பரிந்துரை :

...............,
திகதி : .................. கையொப்பம்.

செயலாளரது பரிந்துரை :

.....................,
திகதி : .................. கையொப்பம்

அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான செயலாளரது பரிந்துரையின்படி ரூ. .......... இற்கான வைப்புத்தொகையை அறவிட அனுமதி வழங்குகின்றேன்/வழங்கவில்லை.

.......................,
தலைவர்

திகதி : ..................

**பொது மலகூடங்களைப் பயன்படுத்துதலை முறைப்படுத்துவதற்கான துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126(ix)(எ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

*02.* இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் பொது மலகூடங்களின் பாவனையை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் முகாமை செய்தல் என்பவற்றுக்கென விதிக்கப்படுகின்றன.

*03.* இந்தத் துணை விதி பொது மலகூடங்கள் பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

*04.* பொது மலகூடமொன்றைப் பயன்படுத்தும் போது அதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் அல்லாது வேறெந்த இடத்திலும் மலம் கழித்தல் அல்லது சிறுநீர் கழித்தல் கூடாது.

*05.* மலகூடத்தில் வழங்கப்பட்டுள்ள நீரை மலகூடச் செயற்பாடுகளுக்கன்றி வேறெந்த வேலைகளுக்கும் எவரும் பயன்படுத்துதல் கூடாது.

*06.* பொது மலகூடத்தில் அல்லது அதனுடன் தொடர்புள்ள மலகூடத் தட்டுக்கள் அல்லது வடிகானுக்கு உள்ளே அல்லது ஏனைய திறந்த இடங்களில் செங்கல், மண், கல், சாம்பல் அல்லது வடிகானில் தடையேற்படும் எந்தப் பொருளையும் எந்தப் பொருளையும் இடுதல் அல்லது வைத்தல் கூடாது.

*07.* பொது மலகூடத்தின் திருத்த வேலையின்போது அல்லாது, மலகூடத் தட்டில், குழாயில், கபாடத்தில், தாங்கியில் அல்லது ஏனைய பொருத்துக்கள், அவை பொருத்தப்பட்டுள்ள முறை, அமைப்பு அல்லது ஒழுங்கு என்பவற்றை எவரும் சேதப்படுத்துதல் அல்லது அந்த மலகூடத்தின் சுவர், தரை,கூரை அல்லது கட்டமைப்பு என்பவற்றை வேண்டுமென்றே அழித்தல், சிதைத்தல், பாதிப்பை ஏற்படுத்துதல் அல்லது பழுதாக்குதல் கூடாது.

*08.* பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பொது மலகூடங்களில் பெண்களும், ஆண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மலகூடங்களில் ஆண்களும், அங்கவீனர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மலகூடங்களில் அங்கவீனர்கள் மாத்திரமே நுழைதல் வேண்டும். மலகூடங்களைச் சுத்தப்படுத்தும்போதும், அவற்றில் திருத்த வேலைகளை மேற்கொள்ளும்போதும், கதவுகள் மூடப்பட்டு, நுழைவாயில்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் காட்சிப்படுத்தி, உரிய கருமங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*09.* பொது மலகூடத்தின் கண்காணிப்பாளர், காவலர், ஊழியர் அல்லது பொறுப்பாளர் தமது கடமை நேரத்தின்போது எவருக்கேனும் செய்யும் அறிவிப்பு, சட்டபூர்வமானதாக அமையும். அவ்வாறான அறிவித்தலைத் தட்டிக் கழிப்பதும், அதற்குத் தடையாக இருப்பதும் கூடாது.

*10.* பொது மலகூடங்கள் சிறுநீர் கழிக்கவும் மலங்கழிக்கவும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். அங்கு புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் கூடாது. காரணமின்றித் தங்கியிருத்தலும் கூடாது.

*11.* பொது மலகூடங்களின் பராமரிப்பு, பொறுப்பு என்பன தனியார் துறையினருக்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், சாட்டப்பட்டவர் நாளாந்தம் மலகூடங்களைக் கழுவிச் சுத்தம் செய்து வைத்திருத்தல் வேண்டும். மலகூடத்தின் பராமரிப்புக் கருமங்களுக்கெனக் கட்டணம் அறவிடப்படுமெனின், உரிய கட்டணத்தை அறிவித்தல் மூலம் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

*12.* மலகூடத்தைச் சுத்தமாகவும், சுதாதாரமாகவும் எப்போதும் வைத்திருத்தல் வேண்டும். நாளாந்தம் கிருமி நாசினி இட்டுச் சுத்தம் செய்து நல்ல நிலையில் பராமரித்து வருதல் வேண்டும்.

*13.* பொது மலகூடத்தைத் தனியார் ஒருவருக்கோ அல்லது ஏதுமொரு நிறுவனத்துக்கோ சாட்டப்பட்டுள்ள வேளைகளில், அறவிடப்படவேண்டிய கட்டணத்தைச சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும். அவ்வாறான கட்டணத்தை மாத்திரமே அவர் மலகூடத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடுதல் வேண்டும்.

*14.* இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால் விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வெண்டும்.

*15.* பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற் பதங்களின் விளக்கம் :
'சபை' என்பது, பிரதேச சபையையும்,
'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது, பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

**அறிவித்தல் பலகைகள் தொடர்பான துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (XXX) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் ஏதேனும் ஒரு பாதைக்குத் தென்படும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், அவ்வாறு பிரச்சாரம் செய்யும் விளம்பர அறிவித்தல்களுக்கெனக் கட்டடணங்களை அறவிடுதல் என்பவற்றுக்கென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணை விதிகள் என அழைக்கப்படும்.

04. எந்தவொரு பாதையிலும் தென்படும் வண்ணம் எந்தவித விளம்பர அறிவித்தலையும் பிரதேச சபையின் தலைவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்துடனன்றி எவரும் காட்சிப்படுத்துதல் அல்லது காட்சிப்பட வைத்தல் கூடாது.

05. இந்தத் துணை விதியின் கருமங்களுக்கென விளம்பர அறிவித்தல் எனப்படுவது பிரதான வீதியில், சிறிய பாதையில், மாகாண சபை பிரதேச சபை அல்லது தனிப்பட்ட பாதையில் தென்படும் வண்ணம் பலகைகள், பதாகைகள், கட்அவுட்கள், அலுமினியத் தகடுகள் உருக்குத் தகடுகள், பொலித்தின், துணி, கடதாசி போன்ற தகடு, துணி அல்லது கடதாசிகளில் வரைந்து இன்றேல், கல்வனைசு இரும்பு போன்றவற்றினால் தயாரிக்கப்பட்டு வீடு, கடை, ஹோட்டல், சுவர், மதில் போன்றவற்றின் மீது எழுத்துக்கள் அல்லது உருக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட விளம்பரப் பலகைகள், வர்த்தக நிலையம், வியாபாரப் பொருள், வர்த்தகக் கண்காட்சி, களியாட்டம் போன்ற விழாக்களில் பயன்படுத்தும் விசேட அறிவித்தல்கள் மற்றும் மின்னியல் பெயர்ப்பலகைகள் என்பன அடங்கும்.

06. இந்தத் துணை விதியின் கீழ்,

(அ) எவ்வகையான விளம்பரத்தையும் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தை இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உரிய விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள திகதிக்குக் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னர் சபையின் தலைவரிடம் முன்வைத்தல் வேண்டும்.

(ஆ) பிரதேச சபையின் மூலம் வழங்குப்படும் விண்ணப்பப் படிவத்துக்கென அறவிடப்படும் கட்டணத்தைப் பிரதேச சபை காலத்துககுக் காலம் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் தீர்மானிக்க முடியும்.

07. மேற்குறித்த 06 ஆவது துணை விதியின் கீழ் முன்வைக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) விளம்பரத்தைக் காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள ஆக்கத்தின் 1:1000 அளவுக்குச் சமமான அளவுத் திட்டத்தில் வரையப்பட்ட நில வரைபடம்.

(ஆ) 1:1000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட குறித்த ஆக்கத்தின் உரு.

(இ) குறித்த திட்டத்தில், உருவில் அல்லது மாதிரியுருவில் இந்தத் துணை விதிகளுக்கமைய மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் ஏதும் இருப்பின், அவை.

(ஈ) காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலில் பயன்படுத்தப்பட்ட நிறங்கள் அனைத்தையும் கொண்டுள்ள சிறிய அளவில் வரையப்பட்ட விளம்பரத்தின் மாதிரி.

(உ) அடுத்துள்ள வீதிகள் மற்றும் பிரதான தரை அடையாளங்கள் என்பவற்றுடன் விளம்பரத்தின் அமைவிடத்தைக் காட்டும் திட்ட வரைபடம்.

08. பிரதேச சபைத் தலைவரால் எழுத்துமூலம் அனுமதி வழங்கப்பட்ட வரைபடத் திட்டங்களுக்கும் வரைபுகளுக்கும், முன்வரைபுகளுக்கும் அமைய நிருமாணிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்களைத் தவிர, எவரேனும் பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் ஏதும் விளம்பர அறிவித்தலை அல்லது அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தும் எந்தவொரு பலகையையோ, அறிவித்தல் பலகையையோ அல்லது வேறேதும் ஆக்கங்களையோ நிருமாணித்தல் அல்லது நிருமாணிக்கச் செய்தல் கூடாது.

09. இந்தத் துணை விதியின் 06 ஆவது துணை விதியின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பப் படிவம் பிரதேச சபையின் தலைவரால் அங்கீகரிக்கப்படும் தருணத்தில், இங்கு அட்டவணை 02 இல் குறிப்பிட்டுள்ளவாறான தீர்மானிக்கப்பட்ட குறித்த கட்டணத்தைச் செலுத்தும் வரை விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படக் கூடாது.

10. விளம்பர அறிவித்தல் ஒன்றைக் காட்சிப்படுத்துவதற்கென எவரேனும் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரால் காட்சிப்படுத்தப்படும் ஒவ்வொரு அறிவித்தலிலும் அனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தையும் அனுமதிப்பத்திரதாரியின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டுமெனப் பிரதேச சபை அவர்களுக்கு விதித்தல் வேண்டும்.

11. (1) இந்தத் துணை விதியின் ஏற்பாடுகள் பின்வரும் விளம்பரங்கள் எதற்கும், அவை மின்னொளி பாய்ச்சும் விளம்பர அறிவித்தல் அல்லது வான்வழி பெயர்ப்பலகையாக இருந்தாலொழியப் பொருந்தாது இருத்தல் வேண்டும்.

(அ) பெறப்படும் தேறிய அளவு வருமானம் புண்ணிய கருமங்களில் ஈடுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புள்ள விளம்பர அறிவித்தல்கள்.

(ஆ) ஏதுமொரு நிகழ்ச்சியை நடத்துமிடத்தில், குறித்த நிகழிச்சியைப் பிரசித்தப்படுத்தும் விளம்பர அறிவித்தல்கள்.

(இ) சமய, அரசியல் பொதுக்கூட்டங்கள் தொடர்பான விளம்பர அறிவித்தல்கள்

(ஈ) 'வாடகைக்கு உண்டு' எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள்

(உ) 'விற்பனைக்கு உண்டு' எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள்

(ஊ) வீட்டுப் பெயர்ப்பலகை

(எ) தொழில்சார் நடவடிக்கைகளில் பயன்படுத்தும் 0.93 சதுர மீற்றரைத் தாண்டாத பெயர்ப்பலகைகள்

(ஏ) வியாபார அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் வாகனத்தில் குறித்த வர்த்தகம் அல்லது வியாபாரம் தொடர்பாக அதன் தன்மையையும் உரிமையாளரது பெயர், முகவரி, தொலைபேசி அல்லது மின்னஞ்சல் முகவரி என்பவற்கை காட்டும் விளம்பர அறிவித்தல்கள்.

(ஐ) நிருவாகப் பிரதேசத்துக்குள் ஏதுமொரு வீதியில், பொது இடத்தில் சுற்றுவட்டத்தில், மோட்டார் வாகன சமிக்ஞை என்பவற்றைக் குறித்துக் காட்டும் அனுசரணையாளர்களது பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள விளம்பரம்.

(ஒ) ஏதேனுமொரு வர்த்தக நிலையத்தில், அதன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் இலக்கம் மற்றும் குறித்த வர்த்தகத்தை நடத்துபவரின் பெயர் மட்டும் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்கள்.

எனினும், ஏதேனுமொரு வர்த்தக நிலையத்தில் அதன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் குறித்த வர்த்தகத்தை நடத்திச் செல்பவரது பெயர் என்பவற்றைவிட அனுசரணையாளரது அல்லது ஏனைய பொருள் அல்லது பண்டத்தின் அல்லது சேவையின் பெயர், குறியீடு அல்லது ஏதும் விபரங்கள் விளம்பரத்துக்கெனக் குறிப்பிடப்பட்டிருப்பின், குறித்த பகுதிக்கென இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கான ஏற்பாடுகள் பொருந்துதல் வேண்டும்.

(2) எவரேனும் ஒருவர்,

(அ) ஒரு வீதியில், தெருவில் அல்லது நடைபாதையில், வாகன வழியின் மேல் அல்லது குறுக்காக நீட்டிக்கொண்டிருக்கும் வண்ணம் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல்,

(ஆ) தரையிலிருந்து 15 மீற்றரைத் தாண்டும் உயரத்தில் ஏதும் பலகைகளில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல்,அல்லது.

(இ) ஏதேனுமொரு வீதியை அல்லது பாதையை எதிர்நோக்குமாறு அமைந்துள்ள கட்டடத்தின் முகப்பில் வர்த்தக நிலையத்தின் பெயர்ப்பலகை அல்லது கட்டடத்தின் முற்பக்க எல்லையைத் தாண்டிச் செல்லும் நீளத்தில் விளம்பர அறிவித்தலைப் பொருத்துதல் அல்லது தொங்க விடுதல்,

(ஈ) வான்வழி விளம்பரங்களைப் போன்ற விளம்பர அறிவித்தலைப் பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது எவ்வகையிலேனும் அமைத்தல், செய்தல் என்பன கூடாது.

12. எவரேனும் ஒருவர் தனிப்பட்ட அல்லது பொதுக் கட்டடமொன்றில், பொதுப் புண்ணியத்தலத்தில், பொது விளையாட்டு மைதானத்தில், பொதுப் பூங்காவில் அல்லது பாலமொன்றில் அல்லது தொலைபேசி மின்சாரக் கம்பத்தில், தடுப்புச் சுவரில், அணைக்கட்டில், மதகில், மலைக் குன்றில், கரையில் அல்லது மரத்தில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் கூடாது.

13. சபை தீர்மானம் ஒன்றின் மூலம் நிறைவேற்றிக் குறித்துக் காட்டப்பட்டதும், வர்த்தமானியில் உரிய முறையில் பிரசுரிக்கப்பட்டதுமான பிரதேசமொன்றில் ஏதும் விளம்பர அறிவித்தலை, அது பிரதேச சபையின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் செய்யப்பட்டிருந்தால் அல்லது அமைக்கப்பட்டிருந்தாலொழிய, காட்சிப்படுத்துதல் கூடாது.

14. பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்துக்குள் எந்த வீதியிலும் அல்லது பாதையிலும் எவரேனும் ஒருவர் ஏதும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்தும் அல்லது அறிமுகப்படுத்தும் கருமத்துக்கென வானொலியை, கிராம்போனை, இசைக்கருவியை, மணியை அல்லது வேறேதும் உபகரணத்தை பிரதேச சபையின் அனுமதியின்றிப் பயன்படுத்துதல் சட்டபூர்வமானதாக அமையாது.

15. பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்துக்குள்,

(அ) ஏதும் விளம்பர அறிவித்தலொன்றில் அழகில்லாத அல்லது வெறுக்கத்தக்க, பொதுமக்களது கலாசாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் ஏதேனுமொன்றைக் காட்டும் சந்தர்ப்பத்தில், உடபலாத்த பிரதேச சபை எழுத்துமூல அறிவித்தலொன்றின் மூலம் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் குறித்த விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதை நிறுத்துமாறு அதனைக் காட்சிப்படுத்துபவரை விதிக்க முடியும்.

(ஆ) இந்தத் துணை விதியின் அ) பந்தியின் கீழ் அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்குள் உரிய அறிவுறுத்தலுக்கமையச செயற்படுதல் வேண்டும்.

16. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதும் பலகையொன்றின் உரிமையாளர் அல்லது குத்தகையாளர்,

(அ) குறித்த பலகைகளில் உரிய திருத்த வேலைகளை மேற்கொண்டு ஆட்களது பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அதனைப் பராமரித்து வருதல் வேண்டம்.

(ஆ) குறித்த பலகையின் முன்பக்கத்தில் நன்கு தென்படும் வண்ணம் தெளிவாகவும், வாசிக்கக்கூடிய எழுத்துக்களிலும் அவர்களது பெயர், முகவரியைக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

17. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்குரிய அனுமதிக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனைக் காட்டுவதற்காகப் பிரதேச சபை உட்படுத்தியுள்ள சின்னத்தை, குறியீட்டை, எழுத்தை சொல்லை அல்லது இலக்கத்தை எவரும் சிதைத்து விடுதல் கூடாது.

18. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்துக்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

19. இந்த்த துணை விதியின் கீழ் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும் அனைத்து விளம்பர அறிவித்தல்களையும் எவ்வித முன்னறிவித்தலுமின்றிச் சபை அகற்றி விடுவது சட்டபூர்வமானதாக அமையும்.

20. இவ்வாறு எவரேனும் அல்லது எந்த நிறுவனமேனும் தொடர்ச்சியாக அனுமதிப்பத்திரமின்றி விளம்பர அறிவித்தல்களைக் காட்சிப்படுத்துவதைக் காரணமாகக் கொண்டு அல்லது இந்தத் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும் குற்றத்துக்காகக் குற்றவாளியாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், குறித்த நபர் அல்லது நிறுவனம் குறித்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தும் தகுதியற்றோர் பட்டியலில் சேர்க்கப்படுவதைச் சபை தீர்மானிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

*21.* விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் எஞ்சியிருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் பொருத்தப்பட்ட சுவரில் அல்லது மதிலில் வரையப்பட்ட பதாகை, கட்அவுட், விளம்பரப்பலகை எவ்வகையிலேனும் காற்றில் சரிந்து கழன்று விழுத்தோ அல்லது நிறம் மாறி, உடைந்து, சிதைந்து நகரத்தின் வனப்பைக் குறைத்துவிடக் காரணமாக இருப்பின், அதுபற்றிய எழுத்துமூல அறிவித்தல் உரியவரிடம் கையளிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் இருந்தவாறு திருத்தியமைத்துவிட அறிவித்தல் விடுக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், சபை அதனை அகற்றுதல் வேண்டும். சபை அவ்வாறு தெரிவித்த 14 நாட்களின் பின்னர் சபையின் பணியாட்களை ஈடுபடுத்தி விளம்பரத்தை அகற்ற நேரிட்டால், அந்த விளம்பரம் பற்றி எவ்விதத்திலும் சபை பொறுப்பேற்காது.

*22.* சொற்கள் பற்றிய விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள,

'சபை' என்பது, பிரதேச சபையையும்,
'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும் குறிப்பிடும்.

**அட்டவணை - 01**

விளம்பர அறிவித்தல் பலகையைக் காட்சிப்படுத்துவதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : ..........................
2. நிரந்தர முகவரி :..........................
3. தொலைபேசி இலக்கம் :.......................... மின்னஞ்சல் முகவரி : ..........................
4. விளம்பரம் காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வர்த்தகம், உற்சவம், கண்காட்சி, களியாட்டம், கூட்டம் அல்லது வர்த்தகப்பொருட்கள் பற்றிய விபரம் :..........................
5. விளம்பரம் காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இடம்/இடங்கள்: ..........................
6. உரிய மாதிரி இணைக்கப்பட்டுள்ளதா : ..........................
7. காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் வகை : (பதாகை/பலகை/கட்டஅவுட்/சுவர்/மதில் அல்லது நிலையான)
8. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்த அனுமதி கிடைத்ததன் பின்னர், குறித்த விளம்பரத்தில் நிறம் மங்குதல், கழன்றுவிடுதல், தரையில் விழுந்துவிடுதல் போன்றன ஏற்பட்டால், அதனை மீளச் செய்துகொள்ள இணங்குவதா என்பது:

பிரதேச சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய அறிவித்தலைக் காட்சிப்படுத்த இணங்குவதுடன், இது பற்றிய துணை விதிகள் அல்லது ஏதும் பிரிவுகள் என்பவற்றை மீறுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் நன்கு அறிவேன்.

.................,
திகதி :.......................... விண்ணப்பதாரின் கையொப்பம்.

பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன :

(i) குறித்த விளம்பரம் விண்ணப்பதாரிக்குச் சொந்தமல்லாத ஆதனமொன்றில் காட்சிப்படுத்தப்படுமெனின், குறித்த ஆதனத்தின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம்.

(ii) துணை விதியின் 7 ஆவது வகுதியின்படி தேவைப்பாட்டை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

(iii) குறித்த விளம்பரம் வீடொன்றில், கடையொன்றில், ஹோட்டலொன்றில் காட்சிப்படுத்தப்படுமெனின், அவற்றின் உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம் :

(iv) விளம்பர அறிவித்தலை வரையும் அல்லது நிரந்தரமாக அமைக்கப் பயன்படுத்தும் தரையைப் பற்றிய விபரம்.

(v) விளம்பர அறிவித்தலுக்கான மாதிரியைத் தெளிவாக முன்வைத்தல் வேண்டும். (அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் மாதிரியில் மாற்றங்களை மேற்கொள்ள எவ்வகையிலும் இடமளிக்கப்படமாட்டாது)

**அட்டவணை - 02**

| தொடர் இல. | அறிவித்தல் பலகையின் தன்மை | அளவு- சதுர மீற்றர் | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 03 மாதங்களுக்குக் குறைய | 03 முதல் 06மாதங்கள் வரை | ஒரு வருடம் |
| 01 | சுவரொன்றில் அல்லது மதிலொன்றில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 1 இலும் குறைய | 250.00 | 350.00 | 500.00 |
| | | 1 இற்கு மேல் | 1 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ. 200/- | | |
| 02 | துணி டிஜிட்டல் பதாகைகள் | 3 இலும் குறைய | 250.00 | 350.00 | 500.00 |
| | | 3 இற்கு மேல் | 3 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ.200/- | | |
| 03. | தகடு அல்லது பலகையொன்றில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 1 இலும் குறைய | 500.00 | 750.00 | 1000.00 |
| | | 1 இற்கு மேல் | 1 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ. 300/- | | |
| 04. | மின்னொளி ஊட்டப்பட்ட விளம்பர அறிவித்தலுக்கு | 1 இலும் குறைய | 500.00 | 750.00 | 1000.00 |
| | | 1 இற்கு மேல் | 1 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ.300/- | | |
| 05. | மெழுகுச்சீலை அல்லது காட்போட் கொண்டு காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 1 இலும் குறைய | 250.00 | 350.00 | 500.00 |
| | | 1 இற்கு மேல் | 1 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ.200/- | | |
| 06. | பிளாஸ்டிக் அல்லது கல்நார் கொண்டு காட்சிப்படத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 1 இலும் குறைய | 250.00 | 350.00 | 500.00 |
| | | 1 இற்கு மேல் | 1 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ. 200/- | | |
| 07. | இலத்திரனியல் உபகரணம் கொண்டு காட்சிப்படுத்தப்படும் அறிவித்தலொன்றுக்கு | 1 இலும் குறைய | 750.00 | 850.00 | 1000.00 |
| | | 1 இற்கு மேல் | 1 ஐ விட அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் என ரூ. 500/- | | |

**விலங்குப் பண்ணைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126(ix) (த) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளின் நிருவாக எல்லைக்குள் இறைச்சிக்காக, பாலுக்காக அல்லது முட்டைக்காக அல்லது விலங்கு இன்ப்பெருக்கத்துக்காக நடத்தப்பட்டுவரும் விலங்குப் பண்ணைகளை முறைப்படுத்துதல் முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் அவற்றின் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் பீடைகளைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்கென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் விலங்குப் பண்ணைகள் பற்றிய துணை விதிகள் என அழைக்கப்படும்.

04. இந்தத் துணை விதி கீழ் தலைவரால் உரிய கருமத்துக்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீது அல்லாது, எவரும் எந்தவொரு விலங்குப் பண்ணையையும் இறைச்சிக்காக, பாலுக்காக அல்லது முட்டைக்காக அல்லது விலங்கு இனப்பெருக்கத்துக்காக நடத்திச்செல்லக் கூடாது.

05. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கென முன்வைக்கப்படும் விண்ணப்பப் படிவம், துணை விதியின் அட்டவணை 01 இற்கு அமைவாக இருத்தல் வேண்டும். சபை காலத்துக்குக் காலம் தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றும் கட்டணமொன்றைச் செலுத்திக் குறித்த விண்ணப்பப் படிவத்தைச் சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

06. இந்தத் துணை விதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கென வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும்.

07. அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான கட்டணங்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானிக்கும். அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் செயற்பாட்டுக்கு வரும்.

08. ஒவ்வொரு விலங்குப் பண்ணை அனுமதிப் பத்திரத்திலும் 'அனுமதிப் பத்திரம் பெற்ற விலங்குப் பண்ணை' என்றவாறும், அனுமதிப்பத்திரதாரியின் பெயரையும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தெளிவாகப் பெயின்ட் செய்துள்ள பெயர்ப்பலகையைத் தமது விலங்குப் பண்ணையின் வெளிப்பகுதியில் நன்கு தென்படும் வண்ணம் தொங்கவிடுதல் வேண்டும்.

09. விலங்குப்பண்ணை ஒவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றியிருந்தாலொழிய, அதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கூடாது.

(அ) விலங்குப்பண்ணையின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது பண்ணையையும், அதன் அனைத்துக் கட்டடங்களையும் திருத்தவேலைக்கு உட்படுத்தி, சுத்தமாகவும், சுகாதாரமானதாகவும் வைத்து, நாளாந்தம் கழுவிக் கூட்டவும் செய்தல் வேண்டும.

(ஆ) இடத்தைச் சுத்தமாகவும் சுகாதாரமானதாகவும் வைத்திருக்கவென விலங்குகளின் மலம், சலம் மற்றும் கழிவுப்பொருட்களை நாளாந்தம் மற்றும் அடிக்கடி குறுகிய கால எல்லைக்குள் ஒரு தடவையென சேகரிக்கச் செய்து, அவ்வாறு சேகரிக்கப்பட்ட விலங்குகளது மலம், சலம் மற்றும் கழிவுப்பொருட்களை ஏதும் நிலையான பொருட்களால் தயாரிக்கப்பட்ட மூடியுடனான கொள்கலின்ல் அல்லது சிமைந்துப் பூச்சினால் மெழுகப்பட்ட, இடவசதியுள்ள குழியினுள் இடுதல் வேண்டும்.

(இ) அனைத்துக் கழிவுப்பொருட்களையும்,மலம் சலம் என்பவற்றைக் கழுவிய நீரையும் நாளாந்தம் குறைந்தது ஒரு தடவையேனும் அகற்றச் செய்து, அதன் மூலம் பீடைகள் ஏற்படாத வண்ணம் வெளியேற்ற ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

(ஈ) விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் குறைந்தது 3 மாதத்துக்கு ஒரு தடவையேனும் தமது பண்ணையின் ஒவ்வொரு விலங்கையும் அரசாங்க மிருக வைத்தியரது பரிசோதனைக்கு உட்படுத்திப் பெறப்பட்ட அறிக்கையைத் தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும். மிருக வைத்தியர் ஏதும் விதப்புரையைச் செய்திருந்தால், உடனடியாக அதனை நிறைவேற்றுதல் வெண்டும்.

(உ) விலங்குப் பண்ணையில் உள்ள விலங்குக்கோ அல்லது விலங்குகளுக்கோ ஏதும் நோய்கள் அல்லது தொற்று நோய்கள், நோய் பரவும் தன்டை ஏற்படுமெனின், பண்ணைக்குள் அந்த விலங்குகளை வேறாக்கி வைக்கக்கூடிய வகையில் பண்ணைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) விலங்குப்பண்ணையில் உள்ள விலங்குகளுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள், தொற்று நோய்கள் அல்லது தொற்றுநோய் அறிகுறிகள் தென்பட்டால், அதுபற்றிப் பிரதேச மிருக வைத்தியருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

10. விலங்குப் பண்ணைக்குள் விலங்குகளை வைத்திருக்கும் சந்தர்ப்பங்களில் எந்தவொரு விலங்கை அறுப்பதும், அதற்கு வதைகள் செய்வதும் கூடாது.

11. விலங்குப் பண்ணைக்குள் ஏதும் நோயினால், தொற்று நோயினால் அல்லது நோய் பரவும் தன்மையினால் இறந்துபோகும் விலங்குகளது இறைச்சியை மனித நுகர்வுக்குப் பயன்படாத விதத்தில் அழித்து விடுதல் வேண்டும்.

12. தலைவர் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் அலுவலரால் விலங்குப்பண்ணை ஒன்றினுள் நியாயமான எந்த வேளையிலும் உட்புகுந்து அதனைப் பரிசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

13. தலைவர் அல்லது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குப் பண்ணைக்குள் புகுந்து பரிசோதனை செய்வதற்கு அனுமதிப்பத்திரதாரி அல்லது விலங்குப்பண்ணைப் பொறுப்பாளர் இடமளித்தல் வேண்டும். தலைவருக்கோ அல்லது அவ்வாறான அலுவலருக்கோ தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரதாரி ஒருவர் இந்தத் துணை விதியின் ஏற்பாடுகளை மீறும் வண்ணம் செயற்படும்போது அல்லது அதன் மீறல்கள் பற்றி அறிவிப்பைத் தொடர்ந்து, மேலும் மீறும் வகையில் தொடர்ந்தும் செயற்படும்போது தலைவரால் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாக அமையும்.

15. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்திற்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்படக்கூடிய அல்லது அந்த மீறல்கள்

பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

16. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற் பதங்களின் விளக்கம் :

'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
'சபை' என்பது, பிரதேச சபையையும்,
'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது, பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,
'விலங்குகள்' என்பது, இறைச்சிக்காகவோ பாலுக்காகவோ அல்லது முட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது இனப்பெருக்கத்துக்காகவோ வளர்க்கப்படும் விலங்குத் தொகுதியையும் குறிக்கும்.
'விலங்குப் பண்ணை' என்பது, கால்நடைகளைப் பொறுத்தமட்டில் 05 அல்லது அதற்கு மேற்பட்ட மாடுகளது எண்ணிக்கையையும், ஆடுகளைப் பொறுத்தமட்டில் 05 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான ஆடுகளையும், கோழிகளைப் பொறுத்தமட்டில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான பறவைகளையும், பன்றிகளைப் பொறுத்தமட்டில் 05 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான பன்றிகளையும் கொண்ட பண்ணையைக் குறிப்பிடும்.

## அட்டவணை - 01

விலங்குப்பண்ணை அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :
2. விண்ணப்பதாரியின் முகவரி :
3. தொலைபேசி இலக்கம் : மின்னஞ்சல் முகவரி :
4. விலங்குப்பண்ணை நடத்திச் செல்லப்படும் இடத்தின் முகவரி :
5. மாவட்டம் :
6. பிரதேச செயலகப் பிரிவு :
7. பண்ணை அமைந்துள்ள கிராமஅலுவலர் பிரவு :
8. வளர்க்கப்படும் விலங்கு வகையும் அளவும்

| தொடர் இல. | விலங்கு வகை | எண்ணிக்கை | விலங்கு வளர்ப்பின் நோக்கம் இறைச்சிக்காக/ஏனைய ........ | விலங்குகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1 | மாடுகள் | | | |
| 2 | ஆடுகள் | | | |
| 3 | பன்றிகள் | | | |
| 4 | கோழிகள் | | | |

9. பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

(அ) நிலையம் தொடர்பான மிருக வைத்தியரது அறிக்கை :
(ஆ) விலங்குப் பண்ணைக்கு செல்வதற்கான விபரம் சம்பந்தமான வரைபடம் :

................................
திகதி : ............................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அலுவலகப் பயன்பாட்டுக்கு :**

(அ) பிரதேச சபையின் சூழல் அதிகாரியின் அறிக்கை:-
(ஆ) பிரதேச சுகாதார வைத்திய அலுவலரது அறிக்கை :-

மேற்குறித்த தகவல்கள் மற்றும் அறிக்கைகளுக்கமைய விலங்குப்பண்ணையை நடத்திச் செல்லவென அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

................
திகதி : ................................ செயலாளர்.

விலங்குப்பண்ணையொன்றை நடத்திச் செல்வதற்கென அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை.

......................
திகதி : ................. தலைவர்.

**வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதி**

*01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126(vii) (ஒ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.*

*02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களை ஏற்படுத்துவது, அவற்றைக் கட்டுப்படுத்துவது, முறைப்படுத்துவது, அதற்கான கட்டணங்களை அறவிடுவது என்பவற்றுக்கென விதிக்கப்படுகின்றன.*

*03. இந்தத் துணை விதி வாடகை வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடங்கள் தொடர்பான துணை விதி என அழைக்கப்படும்.*

*04. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்ட இடங்கள் (இங்கு இதன் பின்னர் வாகனங்கள் நிறுத்திவைக்கும் இடங்கள் எனக் குறிப்பிடப்படும்) தவிர, வேறு எந்தப் பொது இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்க முடியும். அவற்றைப் பெயரிடவும் முடியும்.*

*05. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 4 ஆவது துணை விதிக்கமைய வெளியிடப்பட்டுள்ள இடங்களில் அறவிடப்படவேண்டிய கட்டணத்தையும், அதற்குரிய அனுமதியை வழங்கும் காலத்தையும் கருத்திற் கொண்டு சபை காலத்துக்குக் காலம் தீர்மானங்களை நிறைவேற்றுவது சட்டபூர்வமானதாக அமையும்.*

*06. பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இருந்தாலன்றி, எவரேனும் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள, இங்கு 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல், உட்செலுத்துதல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயற்படுத்தப்படும்.*

*07. இந்தத் துணை விதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்தக் கால வரையறைக்கென வழங்கப்பட்டதோ அதன் செல்லுபடிக் காலம் வரையும் உரியதாகும். அது வருடாந்த அனுமதிப்பத்திரமாக அமையும் பட்சத்தில், வழங்கப்பட்ட உரிய பஞ்சாங்க வருடத்தின் திசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.*

*08. இந்தத் துணை விதியின் கீழ் வாகனத் தரிப்பிடமொன்றில் மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கென ஒரு மாதத்துக்கும் அதிகமான காலத்துக்கென விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் இங்கு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் வாகனத் தரிப்பிடத்தில் அதற்கென வழங்கக்கூடிய இடவசதியைப் பொறுத்து உரிய அனுமதிப்பத்திரத்தை வழங்க முடியும்.*

*09. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் மோட்டார் வாகனத்தை நிறுத்திவைப்பதற்கான உரிய கட்டணம் செலுத்தப்பட்டாலன்றி, அதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கக் கூடாது. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ அதற்கெனத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் அல்லது பொலிஸ் அலுவலர் வேண்டிக் கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.*

*10. ஒவ்வொரு வருடத்தினதும் சனவரி மாதத்தின் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வருடத்துக்கான வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*11. வாடகை வாகனத் தரிப்பிடம் ஒவ்வொன்றிலும் மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கான இடம் வெள்ளை அல்லது மஞ்சள் நிறமூட்டப்பட்ட 13 சென்ரிமீற்றர் அகலம் கொண்ட கோடுகளால் வேறாக்கப்பட்டிருத்தல் வேண்டும். வாகனங்கள் கோடுகளுக்கிடையே தரிக்கச் செய்யப்படுதல் வேண்டும்.*

*12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாடகை வாகனமொன்றை அகற்றிக்கொள்வதற்கான சிறிய திருத்த வேலைகள் தவிர்ந்த எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, அல்லது கழுவுவதோ கூடாது.*

*13. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ எவரும் நடந்து கொள்வது கூடாது.*

*14. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்*

கூடிய உச்ச தண்டனைக்கும், வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில்,அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

15. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும்.

16. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதியில்

'சபை' என்பது, பிரதேச சபையையும்,
'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
'அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்' என்பது, பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,
'மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்' என்பது, முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, கை திராக்டரையோ குறிக்கும்.
'பொலிஸ் அலுவலர்' என்பது, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் இதற்கென வழங்கப்பட்டுள்ள அர்த்தத்தையும் குறிக்கும்.

**அட்டவணை - 01**

வாடகை வாகனத் தரிப்பிடத்தின் அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப் படிவம்

01. வாகன வகை : .........................
02. வாகனத்தின் இலக்கம் :.........................
03. உரிமையாளரது பெயர், தேசிய அடையான அட்டை இலக்கம் :.........................
04. உரிமையாளரது தொலைபேசி இலக்கம் :.........................
05. முகவரி :.........................
06. சாரதியின் பெயர் :.........................
07. சாரதியின் ஆளடையாள அட்டை இலக்கம் :.........................
08. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம் :.........................
09. சாரதியின் முகவரி :.........................
10. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம் :.........................
11. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம் :.........................
12. அதன் கொள்ளளவு/ஆசனங்கள் தொகை :.........................

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.................,
திகதி :......................... விண்ணப்பதாரியின்/சாரதியின் கையொப்பம்.

**அலுவலகப் பயன்பாட்டுக்கானது:**

வருமானப் பரிசோதகரது அறிக்கை :

01. தரிப்பிடம் பற்றிய விபரம் :.........................
02. அனுமதிப்பத்திரக் கட்டணம் :.........................

அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதைப் பரிந்துரை செய்கின்றேன்/பின்வரும் காரணங்களை முன்னிட்டுப் பரிந்துரை செய்யவில்லை.

...........................
திகதி :......................... வருமானப் பரிசோதகர்.

**செயலாளரது பரிந்துரை :**

அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதைப் பரிந்துரை செய்கின்றேன்/பரிந்துரை செய்யவில்லை.

.....................
செயலாளர்.

திகதி :........................

மேற்குறித்த அறிக்கைகளுக்கமைய அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை.

.....................,
தலைவர்.
பிரதேச சபை.

திகதி : ....................

**இறைச்சி விற்பனை நிலையங்கள் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (ix) (ஏ) உப பரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் இறைச்சி வர்த்தகத்தைப் பரிசோதித்தல், இறைச்சி விற்பனை நிலையங்களை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டடணம் அறவிடுதல் என்பவற்றுக்காக இந்தத் விதிகள் விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் இறைச்சி வர்த்தகம் பற்றிய துணை விதிகள் என அழைக்கப்படும்.

04. எவரேனும் ஒருவர் பிரதேச சபையின் தலைவரால் இந்தத் துணை விதிக்கமைய வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது, பிரதேச சபையின் எல்லைக்குள் எந்த இடத்தையும் இறைச்சி விற்பனை செய்வதற்காகப் பயன்படுத்துதல் கூடாது.

05. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கென விண்ணப்பிக்கும் விற்பனை நிலையம் கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய இருந்தாலொழிய, இறைச்சி விற்பனை செய்யும் நிலையத்தை நடத்துவதற்காகத் தலைவர் எவருக்கேனும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் கூடாது.

(அ) இறைச்சி விற்பனையைக் காட்சிப்படுத்தும் பகுதி பீங்கான் செங்கற்கள் பதிக்கப்பட்டோ அல்லது சிமைந்துப் பூச்சு செய்யப்பட்டோ அல்லது கறைபடியாத உலோகம் இட்டோ அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இறைச்சி விற்பனையைக் காட்சிப்படுத்தும் பகுதியில் தரை மற்றும் களஞ்சியம் செய்யும் பகுதி சிமைந்துச் சுதை தடவியோ பீங்கான் செங்கல் பதிக்கப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்.

(இ) கழிவுநீர் இலகுவில் வழிந்தோடக்கூடிய வகையில் வடிகான் சரிவானதாகவும், சிமைந்துப் பூச்சு இடப்பட்டோ அல்லது பீங்கான் செங்கல் பதிக்கப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்.

(ஈ) பந்தி 'இ' இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வடிகானில் வழிந்தோடும் கழிவுநீர் பொது நீர் வழிகளில் கலந்துவிடுவதைத் தவிர்க்கும் வகையில் போதியளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த கழிவுநீரை உறிஞ்செடுக்கத்தக்க குழியொன்றினுள் விழச் செய்தல் வேண்டும்.

(உ) கழிவுநீர் வழிந்தோட ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உறிஞ்செடுக்கக்கூடிய குழியிலிருந்து காற்று வெளியேறும் வகையில் அதனைத் திறந்துவைத்தல் கூடாது.

(ஊ) நிலையத்தில் சேவையாற்றும் ஊழியர்களது பயன்பாட்டுக்கெனப் போதிய அளவு நீரடைப்பு மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மலசலகூடப் பாவனையின் பின்னர் பயன்படுத்துவதற்கெனப் பொருத்தமான சுகநல வசதிகளும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) விற்பனை செய்வதற்கென இறைச்சியைத் தொங்கவைக்கும் அல்லது காட்சிப்படுத்தும் பகுதி மக்களின் பார்வைக்கு நேரடியாகத் தென்படாத வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

06. ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவையிடத்தில் அறுவை நடத்தப்பட்ட விலங்கின் இறைச்சி அல்லாத எந்தவொரு இறைச்சி வகையையும் எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கெனக் காட்சிப்படுத்துதல் கூடாது.

07. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் நாளாந்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததும், குறித்த இடத்தின் தரை, சுவர் என்பவற்றின் பீங்கான் செங்கற்கள் பிடிக்கப்பட்ட அல்லது சிமெந்துப் பூச்சு இடப்பட்டுள்ள இடங்களையும், இறைச்சியை வெட்டுவதற்கெனப் பயன்படுத்தும் மரக்குற்றி, உபகரணங்கள், இறைச்சியைக் காட்சிப்படுத்தும் இடம், என்பவற்றைத் தொற்றுநீக்கித் திரவம் தெளித்துக் கழுவிச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்.

08. இறைச்சி விற்பனை நிலையத்திலிருந்து வெளியேற்றும் உயிரியற் கழிவுகளை இட்டுவைக்கப் போதிய அளவு கொள்கலன்களை வைத்திருத்தல் வேண்டும். நாளாந்த வர்த்தக நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் குறித்த கழிவுகளைத் தரைமட்டத்திலிருந்து குறைந்தது 0.5 மீற்றர் ஆழம் கொண்ட குழியில் இடுவதற்கோ அல்லதுபிரதேச சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்து விதிக்கும் நடைமுறைகளுக்கமைய அவற்றை அகற்றச் செய்தல் வேண்டும்.

09. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் நிலையத்தின் ஒவ்வொரு பகுதியையும், அதனைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வடிகான்களையும், இறைச்சியைக் களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல், விற்றல் என்பவற்றுடன் தொடர்பாகப் பயன்படுத்தும் அனைத்து தளபாடங்களையும், பாத்திரங்களையும், உபகரணங்களையும் திருத்தியமைத்துத் துர்நாற்றம் இல்லாது நல்ல நிலைமையில் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட நிலையத்தின் நாளாந்த வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் விற்றுத் தீர்க்க முடியாதுபோன இறைச்சியை அதிகுளிரூட்டியில் களஞ்சியப்படுத்தி வைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். அவ்வாறு களஞ்சியப்படுத்தியது முதல் அடுத்த நாள் நிலையத்தைத் திறக்கும் சந்தர்ப்பம் வரை குறித்த அதிகுளிரூட்டி உரிய முறையில் செயற்பட்டு இருந்தாலொழிய, எஞ்சிய எந்த இறைச்சியையும் அடுத்த நாளில் விற்பனைக்கெனக் காட்சிப்படுத்துதலோ அல்லது அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் வைத்திருத்தலோ கூடாது.

11. எந்தவொரு அறுவயிடத்திலும் குறித்த தினமொன்றில் அல்லது காலத்தில் இறைச்சிக்கென விலங்குகளை அறுத்தல் தடைசெய்யப்பட்டுள்ள அல்லது ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அல்லது தகவுடைய அதிகாரத்தின்படி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சந்தரப்பமொன்றில் எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் விற்பனைக்கென இறைச்சியை வைத்திருத்தல், காட்சிப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஒவ்வொரு இறைச்சி விற்பனை நிலையத்தையும் நாய்கள், பூனைகள், எலிகள் மற்றும் கிருமிகள் அற்ற இடமாகப் பராமரித்து வருதல் வேண்டும்.

13. இறைச்சி விற்பனை நிலையத்தின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் இறைச்சி விற்பனை தடை செய்யப்பட்ட நாட்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நாளிலும் காலை 7.00 மணி முதல் பிற்பகல் 7.00 மணி வரை திறந்திருக்க முடியும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட நிலையத்தில் இறைச்சியை வைத்திருக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனை செய்வதற்கோ பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் பாத்திரங்களையும் தவிர, ஏனைய பொருட்களையோ உடைகளையோ நித்திரை கொள்ளும் பாய்களையோ அல்லது வேறேதும் சாதனங்களையோ எவரும் வைத்திருத்தல் கூடாது.

15. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியாற்றுவோரது பயன்பாட்டுக்கெனப் போதிய அளவு குடிநீரை வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

16. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியாற்றுவோரது பயன்பாட்டுக்கெனப் போதிய அளவு குடிநீரை வைத்திருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒரு நிலையத்தில்,

(அ) ஏதும் சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அந்நோயினால் பீடிக்கப்பட்டிருந்த நோயாளியை பராமரிக்கும் ஒருவர், குறித்த தொற்றுநோயின் பரவுகாலம் கடந்திருந்தாலொழிய, எந்தவொரு இறைச்சி விற்பனை நிலையத்திலும் எவ்விதத்திலேனும் இறைச்சியை விற்பனை செய்தல், இறைச்சி விறபனை செய்பவருக்கு உதவுதல், அல்லது உதவ வைத்தல் அல்லது எவ்விதக் கருமத்திலும் ஈடுபடுதல், ஈடுபடுத்துதல் அல்லது ஈடுபட வைத்தல் கூடாது.

(ஆ) நன்கு கழுவப்பட்ட சுத்தமான ஆடைகளை அணிந்துள்ளவரல்லாது, எந்தவொரு நபரும் இறைச்சி விற்பனை நிலையத்தில் எவ்வகையான கருமத்திலும் ஈடுபடவோ அல்லது ஈடுபடுத்தவோ இடமளித்தல் கூடாது.

(இ) இறைச்சி விற்பனை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர் அனைவரும் குறைந்தது வருடத்தில் ஒரு தடவையேனும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியினதும் கருமமாக இருத்தல் வேண்டும்.

18. இறைச்சி விற்பனை நிலையமொன்றில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் முகமூடி, கையுறை போன்ற அனைத்துப் பாதுகாப்பு அணிகலன்களை வழங்குவதும், குறித்த ஊழியர்கள் இறைச்சி விற்பனையில் ஈடுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பாதுகாப்பு அணிகலன்களைத் தரித்திருப்பதை உறுதிப்படுத்துவதும் அனுமதிப்பத்திரதாரியின் கருமமாகும்.

19. அனுமதிப்பத்திரம் பெற்ற இடத்தில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரதும் பயன்பாட்டுக்கென சவர்க்காரம் அல்லது திரவச் சவர்க்காரம் வைத்திருப்பது அனுமதிப்பத்திரதாரியின் கருமமாகும்.

20. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏதேனுமொரு இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்கெனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது உட்பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இறைச்சி வகையொன்றின் மாதிரியை, அதன் விலையைக் கொடுத்து வாங்கிக்கொள்வது சட்டபூர்வமானதாக இருப்பதுடன், அனுமதிப்பத்திரதாரி குறித்த கொள்வனவை மறுக்கவோ அல்லது தடுக்கவோ கூடாது.

21. அனுமதிப்பத்திரதாரி குறித்த வர்த்தக நிலையத்தில் தமது பெயரையும், முகவரியையும், பதிவிலக்கத்தையும், அனுமதிப்பத்திரம் பெற்ற இறைச்சி விற்பனை நிலையம் எனத் தமிழிலும் சிங்களத்திலும் தெளிவாகத் தெரியும் வண்ணம் பலகையொன்றில் எழுதித் தொங்கவிடுதல் வேண்டும்.

22. அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ள இடத்தில் :-

(i) சேரும் கழிவுப்பொருட்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டாலொழிய, குறித்த கழிவுப்பொருட்கள், உயிரியற் கழிவுகள், கடதாசி அல்லது கடதாசி சார்ந்த கழிவுகள், பொலித்தின் அல்லது பிளாத்திக் பொலித்தின் அல்லது பிளாத்திக் சார்ந்தவை எனத் தரம் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொரு கழிவையும் இட்டுவைக்கத் தயாரிக்கப்பட்டுள்ள வெவ்வேறான கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் அவற்றை இட்டுவைக்கச் செய்வது அனுமதிப்பத்திரதாரியின் கருமமாகும்.

(ii) மேற்காட்டிய (1) பந்தியின்படி வகையீடு செய்யப்பட்டுக் கொள்கலன்களில் அல்லது தாங்கிகளில் இடப்பட்டுள்ள கழிவுகள் பிரதேச சபையின் கழிவுப்பொருள் முகாமைத் திட்டத்துக்கமைய விதிக்கப்படும் முறையில் இறுதியாக அகற்றிவிடச் செய்தல் வேண்டும்.

23. இந்தத் துணை விதியின் நியமங்களைப் பரிசீலிப்பதற்கெனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏதேனுமொரு இறைச்சி விற்பனை நிலையத்தில் பிரவேசித்தல், பரிசோதித்தல், மாதிரியை அதன் விலையைக் கொடுத்து வாங்கிக்கொள்ளது சட்டபூர்வமானதாக அமையும்.

24. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரதாரிக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு இறைச்சி விற்பனை நிலையத்தை நடத்திச் செல்லும் நிலையம். 5 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நியமத்துக்கமைய அமைந்திருப்பது முடிவடையுமெனின், அல்லது இந்தத் துணை விதியின் அல்லது வேறேதும் துணை விதியின் நியமங்களுக்கு எதிராக அமையும் சந்தர்ப்பத்தில், குறித்துரைக்கப்பட்டுள்ள தினத்துக்கு முன்னர் குறித்த நிலையம் அந்த நியமங்களுக்கு அமைவான நிலைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்தையும் நிறைவேற்றுமாறு அனுமதிப்பத்திரதாரியை விதிப்பதற்கான அறிவித்தலைத் தலைவர் கையளிக்கச் செய்தல் வேண்டும்.

25. 24 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தலைப் பெற்ற எவரேனும் ஒரு அனுமதிப்பத்திரதாரி, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தினத்துக்கு முன்னர் அதிலுள்ள நியமங்களைக் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுத்துதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான அம்சங்களை எழுத்துமூலம் முன்வைக்கும் சந்தர்ப்பத்தில், குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்புச் செய்யத் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். எனினும், அவ்வாறு நீடிப்புச் செய்யப்படும் கால எல்லை பதினான்கு நாட்களைத் தாண்டுதல் கூடாது.

26. 24 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த திகதிக்கு முன்னர் அல்லது நீடிப்புச் செய்யப்பட்ட தினத்துக்கு முன்னர் அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுதலைத் தவறிவிடும் சந்தர்ப்பத்தில் குறித்த நிலையத்துக்கென வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைத் தலைவர் இரத்துச் செய்வது சட்டபூர்வமாதாக அமையும்.

27. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்திற்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்து மூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

28. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற் பதங்களின் விளக்கம் :

'சபை' என்பது, பிரதேச சபையையும்,
'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,
'பிரதேச சபைப் பிரதேசம்' என்பது, பிரதேச சபை கூட்டிணைக்கப்பட்டுள்ள நிருவாகப் பிரதேசத்தையும்,
'உரிய காலம்' என்பது, இறைச்சி விற்பனை நிலையமொன்றில் இறைச்சியை விற்பனை செய்யும் அல்லது காட்சிப்படுத்தும், இறைச்சியைக் செயது திறந்திருக்கும் எந்தவொரு நேரத்தையும்,
'இறைச்சி' என்பது, ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள விலங்கினது இறைச்சி அல்லது உடற் பாகங்களையும் குறிக்கும்.

**தனியார் கற்றல் நிறுவனங்கள் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (ix) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் தனியார் கற்றல் நிறுவனங்களை நடத்திச் செல்லும் கட்டடங்களை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பலற்றுக்கென விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் தனியார் கற்றல் நிறுவனங்கள் பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

04. பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள தனியார் கற்றல் நிறுவனங்களது அனைத்து உரிமையாளர்களும், பொறுப்பாளர்களும் தலைவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றித் தனியார் கற்றல் நிறுவனமொன்றை நடத்திச் செல்லக் கூடாது.

05. மேற்குறித்த 4 ஆவது துணை விதியின் கீழ் அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென இந்தத் துணை விதியின் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள மாதிரிக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன், பின்வரும் ஆவணங்களையும் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) உரிய கட்டடத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடம் ;
(ஆ) உள்ளகக் கட்டமைப்பு;
(இ) பயன்படுத்தும் தொழினுட்ப உபகரணங்கள் பற்றிய விபரங்கள்.

06. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கென அறவிடப்பட வேண்டிய கட்டணங்களைச் சபை வருடாந்தம் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து, அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07. மேற்குறித்த 4 ஆவது பந்தியின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கெனப் பெறப்பட்டதோ, அந்த வருடத்தின் திசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் அது முடிவடையும்.

08. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கென விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் அவ்வாறு விண்ணப்பிக்கும்போது பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.

(அ) விரிவுரைக் கட்டடத்தின் நீளம் 15 மீற்றரைத் தாண்டுமெனின், விரிவுரையாளர் பின்பக்கத்திலுள்ளொருக்குத் தெரியும் வண்ணம் 0.5 மீற்றர் உயரம் கொண்ட மேடை வசதியை விரிவுரையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) விரிவுரைக் கட்டடத்தின் நீளம் 15 மீற்றர அல்லது அதனைத் தாண்டுமெனின், போதியளவு ஒலிபெருக்கி வசதிகள் அங்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) கட்டத்துக்குள் போதிய அளவு தீயணைப்பு உபகரணங்கள் பொருத்தப் பட்டிருத்தல் வேண்டும். தலைவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலர் பரிசோதனை செய்யும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவை செயற்படும் நிலையிலும் இருத்தல் வேண்டும்.

(ஈ) உட்செல்வதற்கும், வெளிச் செல்வதற்குமெனக் கதவுதகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், மாணவர் தொகை 100 ஐத் தாண்டும்போது அவசர சந்தர்ப்பங்களில் அவர்கள் வெளியேறுவதற்கென மேலதிக வெளியேறும் கதவொன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) விரிவுரைக் கட்டடத்தின் உட்புறச் சுவர்கள், தரைமட்டத்திலிருந்து 1 மீற்றரைவிட உயரம் கொண்ட பகுதி வெள்ளை நிறப் பூச்சு பூசப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஊ) வருடத்தில் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் அல்லது தலைவர் குறித்துரைக்கும் சந்தர்ப்பங்களில் சுவர்களுக்கு பெயின்ட் பூசுதல் வேண்டும்.

(எ) போதியளவு முதலுதவிக்கான வசதிகள் கட்டடத்துக்குள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) விரிவுரைக் கட்ட இருபக்கச் சுவர்களது பரப்பளவின் 1/4 பங்கிற்குக் குறைவில்லாத வண்ணம் காற்றோட்ட வசதியை ஏற்படுத்தும் காற்றோட்ட யன்னல்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஐ) விரிவுரைக் கட்டச் சுற்றாடலை எப்போதும் சுத்தமான நிலையில் பராமரித்து வருதல் வேண்டும். குப்பை கூளங்களை அகற்றுவதற்கெனத் தேவையான அளவில் கொள்கலன்களைக் கட்டத்தின் வெளிப்புறத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

(ஒ) ஆண்கள், பெண்கள் என வெவ்வேறான மலகூடங்கள், சலகூடங்கள் வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும், குறைந்தது 50 மாணவர்களுக்கு ஒரு மலகூடம் என்ற விகிதத்தில் உரிய வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மலகூடங்களையும் சலகூடங்களையும் பொருத்தமான கிருமிநாசினிகளைக் கொண்டு துர்நாற்றம் இல்லாத வகையில் நிதமும் தொற்றுநீக்கம் செய்யப்பட்ட நிலையில் வைத்திருப்பதுடன், போதுமான அளவு நீர் வசதியும் செயற்படும் விதத்திலவழங்கப்படுதல் வேண்டும்.

(ஓ) 50 மாணவர்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய் என்ற விகிதத்தில் போதுமான அளவு குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஔ) மாணவர்களுக்கென 50 சென்ரி மீற்றருக்குக் குறையாத உயரத்தையும், பின்புறத்தில் 30 சென்ரி மீற்றரைவிடக் குறையாத அகலத்தைக் கொண்ட சாய்வுப் பலகையையும் கொண்ட ஆசனங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கு எனத் தனித்தனியான ஆசனங்கள் வழங்கப்படாத பட்சத்தில், ஒரு மாணவருக்கு 60 சென்ரி மீற்றருக்குக் குறையாத அளவு நீளம் அவ்வாறான ஆசனங்களில் இருத்தல் வேண்டும்.

(ஃ) மாணவர்களுக்கென ஆகக் குறைந்தது 60 சென்ரி மீற்றர் நீளமும் 45 சென்ரி மீற்றர் அகலமும் கொண்ட ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி மேசைகள் வழங்கப்பாடத பட்சத்தில், வழங்கப்படும் மேசையின் நீளம் குறைந்தது 60 சென்ரி மீற்றராக ஒருவருக்கு ஒதுக்கப்படுவதுடன், ஒரு மேசையின் உச்ச அளவு நீளம் 3.5 மீற்றராக இருத்தல் வேண்டும்.

(க) விரிவுரை மண்டபத்தில் ஆசனங்களையும் மேசைகளையும் அமைக்கும்போது இரண்டு மேசைகளிடையே இருக்கவேண்டிய இடைவெளி 60 சென்ரி மீற்றராக இருத்தல் வேண்டும்.

(கா) மாணவர்களுக்கென வழங்கப்பட்டுள்ள ஆசனங்களும் மேசைகளும் எப்போதும் பயன்படுத்தப் பொருத்தமான நிலையில் இருத்தல் வேண்டும்.

09. தலைவர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்ட அலுவலர் நியாயமானது எனக் கருதும் எந்த நேரத்திலும் தனியார் கற்கைநிலையங்களுக்குள் பிரவேசித்துப் பிரசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

10. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு தனியார் கற்றல் நிறுவனத்தை நடத்திச் செல்லும் நிலையம், இந்தத் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு நியமத்துக்கமைய அமைந்திருப்பது நிறைவடையுமெனின், குறித்துரைக்கப்படும் தினத்துக்கு முன்னர் அந்த நிலையத்தைக் குறித்த நியமத்துக்கு மீளவும் கொண்டு வருவதற்கான அனைத்துக் கருமங்களையும் நிறைவேற்றும்படியான அறிவித்தலைத் தலைவர் உரிய அனுமதிப்பத்திரதாரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

11. 10 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவான அறிவித்தலைப் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரதாரி எவரேனும், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்க்ப்பட்ட தினத்துக்கு முன்னர் அந்த அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள முறைக்கமையச் செயற்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் எழுத்துமூலம் காரணங்களை முன்வைக்கும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்புச் செய்யத் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். எனினும், அவ்வாறு நீடிப்புச் செய்யப்படும் காலம் பதினான்னு நாட்களுக்கு மேற்படக் கூடாது.

12. 10 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக அறிவித்தலொன்றைப் பெற்ற அனுமதிப்பத்திரதாரி எவரேனும், குறித்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தினம் அல்லது நீடிப்புச் செய்யப்பட்ட தினத்துக்கு முன்னர் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதைத் தட்டிக்கழிப்பாரெனின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த நிலையத்துக்கென வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைத் தலைவர் இரத்துச்செய்வது சட்டபூர்வமானதாக அமையும்.

13. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்திற்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின மூமம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித்

தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

14. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற்பதங்களின் விளக்கம்:

'சபை' என்பது, பிரதேச சபையையம்,

'தலைவர்' என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,

'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்' என்பது, பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,

'தனியார் கற்றல் நிலையங்கள்' என்பது, மாணவர்களிடமிருந்து பணம் அறவிட்டுக்கொண்டு நடத்தப்படும் மேலதிக கற்றல் நிலையத்தையும் குறிக்கும்.

## அட்டவணை 1

தனியார் கற்றல் நிலையமொன்றை நடத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறும் விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :
2. முகவரி :
3. ஆளடையாள அட்டை இலக்கம் :
4. தொலைபேசி இலக்கம் :
5. கல்வி நிலையத்தின் பெயர் :
6. முகவரி :
7. பதிவிலக்கம் :
8. முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | கட்டட வரைபடம் : | உண்டு | ☐ | இல்லை | ☐ |
| (ii) | உள்ளக வடிவமைப்பு : | உண்டு | ☐ | இல்லை | ☐ |
| (iii) | தொழினுட்ப உபகரணங்கள்: | உண்டு | ☐ | இல்லை | ☐ |

9. ஏனைய விபரங்கள் :

மேற்குறித்த விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் : ..................... திகதி : .......................

---

**அலுவலகப் பாவனைக்கு :**

| | | |
|---|---|---|
| விடய இலிகிதர் | சரியானது | பிழையானது |
| கட்டட விண்ணப்பப்படிவம் : | ☐ | ☐ |
| வருமானப் பரிசேதகர் /உள்ளக வடிவமைப்பு : | சரியானது | பிழையானது |
| அனுமதிப்பத்திரம் வழங்குவது பொருத்தமானது | ☐ | ☐ |

கையொப்பம் 1. ...................................
2. ...................................

அனுமதிப்பத்திரம் வழங்குவது பொருத்தமானது என பரிந்துரைக்கிறேன்/பரிந்துரைக்கவில்லை

.....................
செயலாளர்.

அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை

..................
தலைவர்.

**மாடு அறுக்குமிடங்கள் பற்றிய துணை விதி**

01. இந்தத் துணை விதியை அமைக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (xi) (ஏ) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

02. இந்த துணை விதி பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள மாடு அறுக்குமிடங்களை முறைப்படுத்துவதற்கும். மேற்பார்வை செய்வதற்கும், பரிசோதிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் கட்டணம் அறவிடுவதற்கும் என விதிக்கப்படுகின்றன.

03. இந்தத் துணை விதி பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள மாடு அறுக்குமிடங்கள் பற்றிய துணை விதி என அழைக்கப்படும்.

04. அறுவை நடைபெறும் ஒவ்வொரு அறுக்குமிடமும் அறுக்குமிடப் பொறுப்பாளரது பொறுப்பின் கீழ் இருத்தல் வேண்டும்.

05. அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலரால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் நேரங்களின்போது அல்லாது, அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தவொரு அறுவை செய்பவரும் விலங்குகளை அறுப்பதற்கு இடமளிக்காது இருத்தல் வேண்டும்.

06. அறுக்குமிடத்தின் பொறுப்பாளர் அதன் உள்ளே, அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவை செய்பவருக்கென ஒதுக்கித்தரும் இடத்தில் மட்டுமே விலங்குகளை அவர் அறுத்தல் வேண்டும்.

07. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எந்தவொரு விலங்கையும் பரிசீலனை செய்து, அதனை அறுக்க முடியுமென வழங்கிய சான்றிதழ் இருந்தாலொழிய, எந்தவொரு விலங்கையும் அறுத்தல் கூடாது.

08. மேற்குறித்த 7 ஆவது துணை விதியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ், அது வழங்கப்பட்ட தினத்திலிருந்து 7 நாட்கள் வரை மட்டுமே செல்லுபடியாகும்.

09. அறுவைக்கு உட்படும் ஒவ்வொரு விலங்கினதும் முழு உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணத்தைத் தமது பொறுப்பில் வைத்துக்கொள்வதுடன், குறித்த விலங்கின் தன்மை, அதன் உரிமை பற்றிய தகவல்களையும், பிரதேச சபை அனுமதித்த படிவங்களில் உள்ள ஏனைய அனைத்து விபாரங்களையும் கொண்ட பதிவேட்டையும் அறுவை செய்யுமிடத்தின் பொறுப்பாளர் பேணி வருதல் வேண்டும்.

10. மாடு அறுக்குமிடத்துக்கு விலங்குகளை உட்படுத்த முன்னர், பின்வரும் ஆவணங்களை அறுவை செய்யுமிடத்தின் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க இயலாத எந்தவொரு விலங்கையும் உட்படுத்த இடமளித்தல் கூடாது.

(அ) அடையாளச் சான்றிதழ்
(ஆ) தகவுச் சான்றிதழ்
(இ) அனுமதிப்பத்திரம்

11.அறுக்குமிடத்துக்குக் கொண்டுவரப்படும் அல்லது அங்கு தடுத்து வைக்கப்படும் எல்லா விலங்குளையும் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வண்ணம் கயிற்றினால் கட்டப்பட்டு வைத்திருத்தல் வேண்டும். அல்லது வேறேதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

12.அறுவையாளராகத் தமது தொழிலைச் செய்வதில் ஈடுபடுத்த உத்தேசித்துள்ள அறுவை செய்வோரது பெயர்களை ஒவ்வொரு அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவையாளரும் பிரதேச சபை அலுவலகத்தில் பதிவு செய்தல் வேண்டும். எந்தவொரு பெயரையும் பதிவு செய்யாது விடவும், அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலருக்கு இயலும். அவ்வாறு பதிவு செய்யப்படாத அல்லது பெயர் நீக்கப்பட்ட எந்தவொரு அறுவையாளரையும் அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவையாளர் சேவையில் ஈடுபடுத்துதல் கூடாது.

13.அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொரு அறுவையாளரும், அவரது அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதியையும், அவரால் அறுக்குமிடத்தில் பணியாற்றும் அனைவரதும் பதிவுபெற்ற சான்றிதழின் உறுதிப்படுத்திய பிரதியையும் பெற்றுக்கொண்ட உடனடியாக அவற்றை அறுக்குமிடப் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

14.அறுக்கப்பட்ட விலங்குகளின் தோல், குடல் மற்றும் நீக்கப்படும் பகுதிகளை அறுவையாளர் அல்லது அவரது பணியாளர் அகற்றிச் செல்ல முன்னர், அவற்றைக் கழுவுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சேர்த்துவைத்தல் வேண்டும்.

15.அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவையாளர் அல்லது அவரது பதிவு பெற்ற வேலையாட்கள் அறுவையிடத்தைப் பயன்படுத்தும் வேளையில், அவரது செயற்பாடுகளால் அல்லது சேவைகளால் அதற்கு ஏற்படும் ஏதும் சேதங்கள் தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்ற அறுவையாளரிடமிருந்தோ அல்லது பிணையாளியிடமிருந்தோ அல்லது இவ்விரண்டு வழிகளிலோ அதனை ஈடுசெய்துகொள்ள முடியும்.

*16. சரும நோய்கள், தொழு நோய் அல்லது தொற்றுநோய்களால் அல்லது ஒட்டுநோயினால் பீடிக்கப்பட்டுள்ள எவரும் அறுவை செய்யுமிடத்துக்குள் உட்புக இடமளித்தல் கூடாது.*

*17. விலங்குகள் தொடர்பில், ஒரு விலங்குக்கெனப் பின்வரும் கருமங்களின்போது அறவிடப்படவேண்டிய கட்டணத்தைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து அறவிடுவது சட்டபூர்வமானதாக அமையும்.*

1. அறுவை செய்யுமிடத்தைப் பயன்படுத்துவதற்காக
   - (அ) மாடுகள்
   - (ஆ) பன்றிகள் அல்லது ஆடுகள்

2. மாடுகளுக்கு உணவு வழங்குதல் (இருபத்து நான்கு மணி நேரத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு)
   - (அ) மாடுகள்
   - (ஆ) பன்றிகள் அல்லது ஆடுகள்

3. மண்டபத்தைப் பயன்படுத்துவதற்கென
   - (அ) மாடுகள்
   - (ஆ) பன்றிகள் அல்லது ஆடுகள்

*18.செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தட்டிக் கழிக்கும் காரணத்தை முன்னிட்டு அறுவை செய்யுமிடத்தில் தடுத்துவைக்கப்படுள்ள ஒரு விலங்கின் மீதான கட்டணத்தைச் செலுத்தாது இருப்பின், அறிவிப்பைத் தொடர்ந்து, இரண்டு நாட்களுக்கு முன்னர் பிரச்சாரம் செயத் பின்னர், தலைவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய முடியும். அவ்வாறு விற்றுப் பெற்ற தொகையில் அதற்கென அறவிடப்படவேண்டிய ஏதுப் தொகையையும், அதற்காக ஏற்பட்ட செலவுகளையும் தமது பொறுப்பில் வைத்துக்கொண்டு எஞ்சிய தொகை இருப்பின், அத்தொகையை விலங்கை அறுப்பதற்கென அறுக்குமிடத்துக்குக் கொண்டுவந்தவரிடம், அவர் கேட்டுக்கொண்டதற்கமையத் தலைவரால் செலுத்தப்படல் வேண்டும். ஏலவிற்பனை செய்யப்பட்ட ஒரு வருடத்துக்குள் அதற்கு உரியவர் கேட்டுக்கொள்ளப்படாதவிடத்து, அத்தொகை சபை நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.*

*19.நோயுற்ற அல்லது வேறேதும் காரணங்களால் மனித நுகர்வுக்கென அறுக்க முடியாதவையெனக் காணப்படும் விலங்குகளை, அவற்றை அறுவை செய்வதை அறுவை செய்யுமிடப் பொறுப்பாளர் அல்லது பிரதேச வைத்திய அதிகாரி தடுப்பது சட்டபூர்வமானதாக அமையும்.*

*20.அறுவை செய்வதற்கென அனுமதிப்பத்திரம் வழங்குவது மறுக்கப்பட்ட அல்லது அறுவை செய்வது தடுக்கப்பட்ட விலங்குகளை அறுவையிடத்துக்குக் கொண்டுவந்தவர், தடைசெய்யப்பட்ட பன்னிரண்டு மணி நேரத்துக்குள் விலங்குகளை அவ்விடத்திலிருந்து அகற்றிக்கொள்ளாத பட்சத்தில் 18 ஆவது துணை விதியின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுதல் வேண்டும்.*

*21.சபை அங்கீகரித்த அனுமதிப்பத்திரம் ஒன்றின் மாதிரிக்கமைய அனுமதிப்பத்தித்தை வழங்க அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதற்கென நியமிக்கப்பட்ட அலுவலரால் கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரம் இருந்தலொழிய, பொது அறுவையிடத்திலிருந்து அநுக்கப்பட்ட விலங்கின் இறைச்சி, தோல், குடல் அல்லது எஞ்சிய இறைச்சி என்பவற்றைக் கொண்டு செல்லும்போது பிரதேச சபையின் அலுவலர் ஒருவர் வேண்டிக்கொள்ளும் வேளையில் அனுமதிப்பத்திரத்தைப் பரிசீலனைக்காக முன்வைத்தல் வேண்டும்.*

*22. நாய்கள் எதனையும் அறுவை செய்யுமிடத்துக்குள் கொண்டுவர இடமளித்தல் கூடாது. எந்த நாயினதும் சொந்தக்காரர் அல்லது பொறுப்பாளரும் அறுவை செய்யுமிடத்தினுள் நாயை உட்செலுத்த இடமளித்தல் கூடாது அறுவை செய்யுமிடத்துக்கு வரும் நாய்கள் அனைத்தும் கட்டாக்காலி நாய்கள் எனக் கருதப்பட்டுச் வேண்டும்.*

*23. அனுமதிப்பத்திரம் பெற்ற எந்தபொரு அறுவையாளரும் அல்லது பரிவு பெற்ற அவரது உதவியாளரும் அறுவை செய்யுமிடத்தினுள் உட்புக அனுமதி பெற்ற எவரும் சத்தமிடுதல், கலவாரம் செய்தல் அல்லது சண்டையிடுதல், அவமரியாதை செய்தல், நாகரிகமற்ற வார்த்தைகளைப் பிரயோகித்தல் என்பவற்றைச் செய்தல் கூடாது.*

*24. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இருந்தாலொழிய, அனுமதி பெற்ற அறுவையாளர் தவிர்ந்த எவரும் பிரதேச சபையின் அறுவை மண்டப வளவில் எந்தவித விலங்கையும் அறுவை செய்வது சட்டபூவமானதாக அமையாது. எனினும், விசேட அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஓடத்திலோ அல்லது அதில் உள்ள நிபந்தனைகளின் கீழோ அல்லது உரிய அறுவையைச் செய்தல் கூடாது. அவ்வாறான விசேட அனுமதியைப் பெறுவதற்கென உள்ள படிவத்தில் அறுவை அசயப்படவுள்ள விலங்கு தொடர்பான (473 ஆவது அதிகாரம்) மாடுகளுக்குக் குறி சுடுதல், விற்றல் மற்றும் கைமாற்றம் செய்தல் பற்றிய கட்டளைச் சட்டத்தின் அட்டவணை "அ" படிவத்துக்கமைய விபரங்களைத் தருதல் வேண்டும். உரிய விலங்கு விண்ணப்பதாரிக்குச் சொந்தமானதெனப் பிரதேசத்தின் பொலிஸ் அலுவலர் அல்லது பிரசே சபை அலுவலர் அல்லது கிராம அலுவரது அறிக்கையும் இணைக்கப்படுதல் வேண்டும். இந்த விசேட அனுமதிப்பத்திரத்துக்கென இருநூற்று ஐம்பது ரூபா (ரூ.250.00) இற்குக் குறையாத அல்லது சபை தீர்மானிக்கும் கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும்.*

*25. தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் விதிக்கும் நேரங்களில், ஒவ்வொரு அறுவை மண்டபத்தையும் குறைந்தது ஒரு நாளில் இருண்டு தடவைகளேனும் நன்கு கூட்டிக் கழுவிச் சுத்தம் செய்வது அறுவை நிலையத்தின் பொறுப்பாளரது கருமமாகும்.*

*26. அறுப்பதற்கென அனுமதித்த ஏதுமொரு விலங்கு அறுக்கப்பட்டதன் பின்னர் அதன் உடல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதென அல்லது அது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றதெனக் காணப்பட்டால், தலைவரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால், மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றதென அதனை அகற்ற ஏற்பாடு செய்தல் வேண்டும். இது தொடர்பில் மிருக வைத்தியர் அல்லது சுகாதார அதிகாரி மேற்கொள்ளும் முடிவே இறுதியானதாக அமையும். இவ்வாறு செய்யப்படும்போது எதுவித நட்டஈடும் பெறும் உரிமை எந்தத் தரப்பினருக்கும் இல்லை.*

*27. விலங்குகளை அறுவை செய்யும்போது அல்லது தோல் உரிக்கும்போது, இறைச்சியை வெட்டும்போது அறுவையாளர் தமது வேலையாட்கள் அல்லது பிரதேச சபையின் அனுமதி பெற்றவர்கள் தவிர்ந்த ஏனைய எவரும் அறுவை மண்டபத்தினுள் உட்செல்ல அனுமதி பெற்றவர்கள் தவிர்ந்த ஏனைய எவரும் அறுவை மண்டபத்தினுள் உட்செல்ல அனுமதிக்க முடியாது.*

*28. எந்தவொரு விலங்கின் இறைச்சியையும், அது சூரிய ஒளி, தூசு, மழை என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டும், மக்களுக்குத் தென்படாத வகையில் வகையில் மறைக்கப்பட்டும் வெளியிற் கொண்டு செல்லல் வேண்டும்.*

*30. அறுவை செய்யுமிடத்தில் விலங்குகளை அறுக்கும் ஒவ்வொரு நேரத்திலும் ஏனைய எந்த விலங்குகளுக்கும் தென்படாத வகையில் பொருத்தமான மறைப்பின் கீழ் அறுவை நடத்தப்படுதல் வேண்டும்.*

*31. இந்தத் துணை விதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்திற்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்க்ப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.*

*பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் சொற் பதங்களின் விளக்கம்:*

*"தலைவர்" என்பது, பிரதேச சபையின் தலைவரையும்,*
*"சபை" என்பது, பிரதேச சபையையம்,*
*"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,*
*"தகவுடைய அதிகாரி" என்பது, தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரையும்.*
*"அறுவை செய்யுமிடப் பொறுப்பாளர்" என்பது, அறுக்குமிடத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்ற நியமிக்கப்பட்ட ஒருவரையும்,*
*"இறைச்சிக் கழிவு" என்பது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற இறைச்சியையும்,*
*"விலங்குகள்" என்பது, ஊன் வினைஞர் கட்டளைச்சட்டத்தின் பதப் பிரயோகங்களையும் குறிக்கும்.*

**பிரதேச சபைப் பாதைகளில் செலுத்தப்படும் வாகனங்களது நிறை மற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதி**

*1. இந்தத் துணைவிதியைத் தயாரிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கபிரதேசசபைகள் சட்டத்தின் 126(vii) (இ) பிரிவின் கீழ் பிரதேசசபைக்குஅதிகாரம் கிடைத்துள்ளது.*

*2. பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் பிரதேசசபைகளின் பாதைகளில் நிறைமற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்தும் மற்றும் அதன் மூலம் பாதைகளுக்கும், தெருக்களுக்கும் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதுமற்றும் அதிக நிறை கொண்ட வாகனங்ளது போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குமென இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.*

*3. இந்தத் துணைவிதி பிரதேசசபைப் பாதைகளில் செலுத்தப்படும் வாகனங்களது நிறை மற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்துவது பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.*

*4. பிரதேச சபைகளது நிருவாக எல்லைக்குள் பிரதேச சபைகளின் பாதைகளில் பிரதேச சபைனள் மூலம் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் பாதைகளில் அல்லது தெருக்களில் அல்லது பாதையின் ஒரு பகுதியில் செலுத்தப்பட வேண்டிய வாகனமொன்றின் உச்சஅளவிலானநிறை, வேகம் என்பவற்றைச் சபை காலத்துக்குக் காலம் பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து வெளியிடுவது சட்டபூர்வமானதாக அமையும்.*

5. மேற்குறித்த 4 ஆவது பிரிவின் கீழ் சபையினால் தீர்மானிக்கப்பட்ட பிரதேச சபையின் பாதையொன்றில், தெருவொன்றில் அல்லது அதன் பகுதியொன்றில் செலுத்தப்பட முடியுமான வாகனமொன்றின் உச்ச அனவு திறையையும் வேகத்தையும் தலைவர் குறித்த பாதையில் அல்லது அதன் பகுதியொன்றின் எல்லையில் அல்லது குறித்தபாதையுடனோ அல்லது அதன் ஒரு பகுதியுடனோ தொடர்புபடும் வேறு பாதைகள் இணையும் இடங்களில் காட்சிப்படுத்த வேண்டிய அறிவித்தலை இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிக்கமையத் தயாரித்துக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

6. மேற்குறித்த 5 ஆவதுபிரிவின் கீழ் காட்சிப்படுத்தப்படும் ஒவ்வொரு அறிவித்தலையும் பாதைகள் தெருக்கள் கட்டளைச் சட்டத்தினதும் போக்குவரத்துச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமையத் தயாரித்துக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

7. மேற்குறித்த 4 ஆவதுபிரிவின் கீழ் தீர்மானிக்கப்படும் ஒவ்வொரு தீர்மானமும் பின்வரும் அம்சங்களைக் கருத்திற கொண்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(அ) குறித்த பாதையின் அகலம்
(ஆ) பாதையின் மேற்றளப் பகுதி அமைக்கப்பட்டுள்ள பொருட்களது தன்மையும் தடிப்பும்
(இ) பாதையின் சரிவுத் தன்மை
(ஈ) பாதை அமைக்கப்படடுள்ள தரையின் தன்மை
(உ) பாலங்களும் மதகுகளும் தாங்கக்கூடிய நிறையின் அளவு
(ஊ) செலுத்தப்படும் வாகனங்களது தன்மை

8. பிரதேச சபையின் பாதையொன்றில் திருத்த வேலை நடவடிக்கைகள் அல்லது வேறேதும் காரணங்களை முன்னிட்டுப் பாதை அல்லது அதன் ஒரு பகுதி மூடப்பட வேண்டிய நிலை ஏற்படுமெனின், அவ்வாறு மூடப்படுவது பற்றிய அறிவித்தலை, மூடப்படும் மூன்று நாட்களுக்கு முன்னர் குறித்த பாதையில் அல்லது அதன் பகுதியொன்றின் எல்லையில் அல்லது குறித்த பாதையுடனோ அல்லது அதன் ஒருபு குதியுடனோ தொடர்புபடும் வேறுபாதைகள் இணையும் இடங்களில் காடசிப்படுத்துதல் வேண்டும்.

9. பிரதேசசபையின் மூலம் பிரதேசசபையின் பாதையொன்றில் நிறையும் வேகமும் மட்டுப்படுத்தப்பட்டு, இந்தத் துணைவிதியின் 5 ஆவது பிரிவின் கீழ் அறிவித்தலொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மட்டுப்பட்ட நிறையையும் வேகத்தையும் தாண்டும் வகையில் எவரும் வாகனங்களைச் செலுத்துதல் கூடாது.

10. பிரதேசசபையின் பாதையொன்றில் இந்தத் துணைவிதியின் கீழ் நிறை, வேகம் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான பாதைக்குச் சேதம் ஏற்படும் வகையில் எவரும் எந்தப் பொருளையும் கொண்டுவந்து இடுவதும், இட்டுச் சொல்வதும் அல்லதுசேகரிக்கப்படும் தண்ணீரைப் பாதைக்குத் திருப்பிவிட வழி செய்வதும் கூடாது.

11. குறித்தபாதையில் அல்லதுஆதன் பகுதியொன்றின் எல்லையில் அல்லது குறித்த பாதையுடனோ அல்லது அதன் ஒரு பகுதியுடனோ தொடர்புபடும் வேறுபாதைகள் இணையும் இடங்களில் பேணப்படவேண்டிய வேகத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஏதும் மரங்களையோ அல்லது மரங்களது பகுதிகளையோபாதையின் இரு மருங்கிலும் இருந்து வெளியில் நீண்டிருக்கச் செய்தல் கூடாது.

12. இந்தத் துணைவிதியின் 4 ஆவதுபிரிவின் கிழ் நிறையும் வேகமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபையின் பாதையொன்றில் அல்லது அதன் ஒரு பகுதியில் வரித்தக நடவடிக்கைகளுக்கென உச்ச அளவிலான நிறை கொண்ட வாகனமொன்றை ஒருவர் நிதமும் பயன்படுத்துவாரெனின், அவருடன் பிரதேச சபை மேற்கொள்ளும் ஒப்பந்தமொன்றுக்கமையப் பாதை அல்லது அதன் ஒரு பகுதிக்கு ஏற்படும் சேதத்தை நிரப்புவதற்கெனச் சபை தீர்மானிக்கும் அளவான ஒரு தொகையை அவரிடமிருந்து அறவிடுவது சட்டபூர்வமானதாக அமையும்.

13. சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்கெனத் தலைவர் குறித்த ஒரு பாதையில் அல்லது அதன் ஒரு பகுதியில் கொண்டு செல்லும் நிறையை உச்ச அளவில் மட்டுப்படுத்துவதற்காக அல்லது அவ்வாறு செலுத்தும்போது மேற்குறித்த 4 ஆவது பிரிவின்படி பேணப்பட வேண்டிய வேகத்தின் அளவை மேலும் மட்டுப்படுத்துவதற்கான நியமங்களை விதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

14. இந்தத் துணைவிதியின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது சட்டத்திற்கு முரணாக செயற்படுவதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனையும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்தமீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவும், முறையே பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் அதிகாரத்தின் (2) ஆவது உப் பிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

*15.* இந்தத் துணைவிதியின் 4 ஆவதுபிரிவின் கீழ் செலுத்தப்படும் வாகனத்தின் உச்ச அளவு நிறை, வேகம் என்பவை தீர்மானிக்கப்பட்டுள்ள பாதையொன்றில் செலுத்தப்படும் வாகனமொன்றின் நிறையைப் பரிசோதிப்பதற்காகத் தலைவர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர் பொருத்தமான உரியவழி முறைகளை மேற்கொள்வது சட்டபூர்வமானதாக அமையும்.

*16.* சொற்கள் பற்றிய கருத்து விளக்கம் தேவைப்பட்டாலன்றி இங்கு,

"சபை" என்பது, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்படி தாபிக்கப்பட்ட பிரதேச சபையையும்,
"தலைவர்" என்பது, பிரதேச சபைக்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவரையும்,
"நபர்" என்பது, ஆளொருவர் அல்லது ஆட்களது தொகுதி அல்லது கூட்டமைக்கப்பட்ட அமையம் ஒன்றையும்,
"வாகனம்" என்பது, மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கருத்தையும்,
"நிறை" என்பது, வாகனத்திலும் வாகனத்துக்கு வெளியிலும் ஏற்றப்பட்டுள்ள பொருட்களது நிறையுடன், எச்சலின் மீது இடப்பட்டுள்ள மொத்த நிறையையும்,

**உபஅட்டவணை**







*3-223*